www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மே 2012
ரூ.10.00



## கடத்தல் தவறா?

படிப்பகம்

www.padippakam.com

# அணு உலையை எதிர்ப்பது தேசத்துரோகமா?

## நெல்லை, இடிந்தகரை, கூட்டப்புளியில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் கூட்டங்கள்


நெல்லை கோல்டன் ஹாலில் நடைபெற்ற கருத்தரங்கம்.

**கூ**டங்குளம் அணு உலைக்கு எதிராகப் போராடும் மக்கள் மீது அரசு தொடுத்திருக்கும் பொய் வழக்குகளைத் திரும்பப்பெறக் கோரி ஏப்ரல் 21-ஆம் தேதியன்று நெல்லை, இடிந்தகரை, கூட்டப்புளி ஆகிய இடங்களில் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் கூட்டங்களை நடத்தியது.

நெல்லை கோல்டன் ஹாலில் காலை 10 மணிக்குத் தொடங்கிய கருத்தரங்கிற்கு தோழர் சிவராசபூபதி (ம.உ.பா.மையம், நாகர்கோவில்) தலைமை தாங்கினார். 1908 மார்ச் 8 அன்று நெல்லையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் பேசிய வ.உ.சி. மீது தேசத்துரோக வழக்கு போடப்பட்டதையும், உடனே பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக நெல்லை மக்கள் நடத்திய வரலாற்று சிறப்புமிக்க கலகத்தையும் நினைவு கூர்ந்த தோழர் வாஞ்சிநாதன் (ம.உ.பா.மையம், மதுரை), அரசின் மீது அவநம்பிக்கை கொள்ள வைப்பது கிரிமினல் குற்றம் என்று கூறும் இந்திய தண்டனை சட்டம், பேச்சுரிமையையே ரத்து செய்கிறது என்பதை அம்பலப்படுத்தினார்.


பெங்களூரு உயர் நீதிமன்ற வழக்குரைஞர் பாலன்.

பேராசிரியர் தொ. பரமசிவம், அணு உலை அபாயம் பற்றி இவ்வளவு பேசிய போதிலும், அதனை எதிர்த்துப் பேச நெல்லையில் ஒரு மருத்துவர் கூட முன்வராததைக் குறிப்பிட்டு, ஒருவேளை புற்றுநோய் பரவினால் மருத்துவமனை கட்டிப் பணம் சம்பாதிக்கலாம் என்று நினைக்கிறார்கள் போலும் என்று சாடினார். பாடம் நடத்தும்போது தீப்பிடித்தாலும், ஆசிரியர் தீயை அணைக்கப்போகக் கூடாது, பாடம் தான் நடத்த வேண்டுமென்ற உளவியல் உருவாக்கப்பட்டிருப்பதாகக் கூறினார், பேராசிரியர் அமலநாதன்.

பாகிஸ்தானுக்கு 5000 மெகாவாட் மின்சாரம் விற்கப் போவதாக கூறிக்கொண்டே, மின்சாரப் பற்றாக்குறையைப் போக்கத்தான் அணு மின்சாரம் என்று அரசு புளுகுகிறது என்றும், பன்னாட்டு அணு உலை முதலாளிகளின் வணிகத்துக்கு உதவுவதுதான் இதன் நோக்கம் என்றும் விளக்கினார், ம.க.இ.க. இணைச் செயலர் காளியப்பன்.

சிங்குர், நந்திகிராம், போஸ்கோ, கலிங்கா நகர் போராட்டங்கள் குறித்து சிறப்புரையாற்றிய பெங்களூரு உயர் நீதிமன்ற வழக்குரைஞர் பாலன் விளக்கினார். இங்கெல்லாம் மக்களின் போராட்டமும், பெண்களின் துடைப்பமும்தான் பன்னாட்டு முதலாளிகளை விரட்டியிருக்கிறதேயன்றி, நீதிமன்றங்களல்ல என்று தெளிவுபடுத்தினார்.

மதியம் ஒரு மணிக்கு கருத்தரங்கம் நிறைவு பெற்றது. பிற்பகல் சுமார் 3 மணிக்கு இடிந்தகரையில் நிகழ்ச்சிகள் தொடங்கின. வழக்குரைஞர்களும் ஆயிரக்கணக்கான மக்களும் இணைந்து போராட்ட முழக்கங்களை எழுப்ப, எழுச்சிகரமாகத் தொடங்கியது நிகழ்ச்சி.



இடிந்தகரையில்...

துவக்கவுரை ஆற்றிய சுப.உதயகுமார், ‘‘இப்போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நம்மோடு நிற்கிறது. இன்று நூற்றுக்கு மேற்பட்ட வழக்குரைஞர்கள் சாதாரண மக்களுக்காக இங்கே வந்துள்ளார்கள். நமக்கு வழக்கு பிரச்சனை என்றால் அவர்களைத்தான் கேட்கிறோம். அவர்கள்தான் நம் வழக்குகள் அனைத்தையும் நடத்துகிறார்கள். நெருக்கடியான நேரங்களிலும் நள்ளிரவிலும்கூட நம்மை சந்திக்க வருகிறார்கள். அவர்கள் கொள்கைக்காக நிற்கிறார்கள்; வழக்குகளுக்காக அவர்கள் நம்மிடம் ஒரு காசு கூடச் சம்பளம் வாங்கவில்லை என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்’’ என்று கூறி வழக்குரைஞர்களை அறிமுகப்படுத்தியவுடன் மக்கள் நேசத்துடன் கரவொலி எழுப்பினர்.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 27 இதழ்: 7
மே 2012

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

## வாடகைதாரர்களின் விவரம் திரட்டும் சென்னை போலீசின் உத்தரவுக்கு நீதிமன்றத் தடை!

## குடிமக்களை கிரிமினல்களாக நடத்தும் பாசிசத்தை முறியடிப்போம்!

**செ**ன்னை மாநகரப் போலீசு நடத்திய போலி மோதல் கொலைகளும், வடமாநிலத் தொழிலாளர்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டதும் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளன. சென்னையில் வாடகைதாரர்கள் என்ற பெயரில் குடியிருக்கும் 'சமூக விரோதி'களால் பொது அமைதிக்கும் பங்கம் ஏற்பட்டுள்ளதாகவும், வீட்டு உரிமையாளர்கள் தாங்கள் குடியமர்த்திருக்கும் வாடகைதாரர்கள் பற்றிய விவரங்களை அருகாமை போலீசு நிலையத்தில் தர வேண்டும் என்றும், அவ்வாறு அளிக்கத் தவறினால், வீட்டு உரிமையாளர்கள் மீது இ.பீ.கோ பிரிவு 188-இன் கீழ் குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாநகர போலீசு உத்தரவிட்டது. குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144 -இன் கீழ், மார்ச் 3-ஆம் தேதி வெளியிடப்பட்ட இந்த உத்தரவின்படி, போலீசு தருகின்ற படிவத்தில், 'வாடகைதாரரின் புகைப்படம், அடையாள அட்டை, அவரது நிரந்தர முகவரி, அவர் ஏற்கெனவே குடியிருந்த முகவரி, செல்பேசி எண், வேலை செய்யும் இடத்தின் முகவரி, வீட்டில் தங்கியிருப்பவர்கள் குறித்த விவரம்' ஆகியவற்றைத் தரவேண்டும். வீட்டு உரிமையாளர் அதற்கு கைச்சான்றும் அளிக்க வேண்டும்.

ஜெயா அரசின் அப்பட்டமான இந்த பாசிச நடவடிக்கையை ஓட்டுப் பொறுக்கிகள் யாரும் கண்டிக்கவில்லை. சில மனித உரிமை அமைப்புகளும் வழக்குரைஞர்களும் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்தனர். வலுவான எதிர்ப் பேதும் இல்லாததால், உள்ளூர் ஓட்டுப்பொறுக்கித் தலைவர்கள் மூலம் வீட்டு உரிமையாளர்களுக்கு நெருக்கடி கொடுத்தது போலீசு. வீட்டு உரிமையாளர்களின் பார்வையில், வாடகைதாரர்கள் சந்தேகத்திற்கிடமான குற்றவாளிகளாக மாறிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் (HRPC) இவ்வுத் தரவுக்கு எதிராக, கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன், சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கொன்றையும் தாக்கல் செய்தது. போலீசின் உத்தரவு வாடகைதாரர்களின் வாழ்வதற்கான உரிமையைப் பறிப்பதுடன், அவர்களது தனிமைச் சுதந்திரத்தை மறுப்பதாகவும், சொந்த வீடு இல்லாதவர்களையும் வெளிமாநிலத்தவரையும் கிரிமினல்களாகச் சித்தரிப்பதாகவும், வீட்டு உரிமையாளர்களை ஆள்காட்டிகளாக மாற்றுவதாகவும் வாதிட்ட ம.உ.பா.மையம், இந்த உத்தரவுக்கு உடனே தடை விதிக்கக் கோரியது. வீட்டு உரிமையாளர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுப்பதற்கு மட்டும் 30.3.2012 அன்று தடை விதித்த உயர் நீதிமன்றம் 25.4.2012 அன்று மொத்த உத்தரவுக்கும் தடை விதித்திருக்கிறது. போலீசின் இவ்வுத்தரவு தடுக்கப்படாமலிருந்தால், தமிழகம் முழுவதற்கும் இது விரிவுபடுத்தப்பட்டிருக்கும்.

பயங்கரவாத தடுப்பு, கிரிமினல் குற்றத் தடுப்பு என்ற பொய் முகாந்திரங்களை வைத்து மக்கள் மீதான கண்காணிப்பை அதிகரித்து வருகின்றன, மத்திய-மாநில அரசுகள். மக்கள் மீதான மறுகாலனியாக்கத் தாக்குதல்கள் அதிகரிக்க அதிகரிக்க, அவற்றுக்கெதிரான போராட்டங்களும் அதிகரிக்கும் என்பதால், குடிமக்கள் அனைவரையும் கண்காணிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளாகவே அரசும் ஆளும் வர்க்கமும் கருதுகின்றன. மத்திய-மாநில உளவுத் தரவுகளை ஒருங்கிணைக்கும் ''நாட்கிரிட்'' என்ற தேசிய உளவு வலைப் பின்னல், ஆதார் அட்டை, வீதிகளில் ஆங்காங்கே நிறுவப்படும் டி.வி. காமெராக்கள், கல்லூரி மாணவர்கள், வடமாநில தொழிலாளர் போன்றோரின் தரவுகள் திரட்டப்படுதல் போன்றவற்றின் வரிசையில் வருகிறது, சென்னை போலீசின் இவ்வுத்தரவு.

பாசிசம் வெகுவேகமாக நிறுவனப்படுத்தப்படுகிறது. சுருக்கு இறுகு முன்னர் விழித்துக்கொண்டு அதனை அறுத்தெறிந்தாகவேண்டும். •



படிப்பகம்

www.padippakam.com

## மாவட்ட ஆட்சியர் அலெக்ஸ் பால் மேனன்

# கடத்தல் தவறா?

**அலெக்ஸ் பால் மேனனின் 'சேவை மனப்பான்மை', அறம் கொன்று அம்மணமாய் நிற்கும் ஆளும்வர்க்கத்தின் மானத்தை மறைக்கக் கிடைத்த கோவணமாகும்.**

சுக்மா மாவட்ட ஆட்சியர் அலெக்ஸ் பால் மேனன் மாவோயிஸ்டு கொரில்லாக்களால் கடத்தப்பட்டிருக்கும் சம்பவம், அரசு மற்றும் ஆளும் வர்க்க ஊடகங்களிடம் ஆத்திரத்தையும் வெறியையும் கிளப்பியிருக்கிறது. ''அரசாங்கம் இனிமேலாவது முதுகெலும்புடன் நடந்து கொள்ளவேண்டும்'' என்று ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் நரைத்த மீசைகளின் ஊடாக ஆங்கில சானல்களில் உருமுகிறார்கள். ''தங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லையென்று மாவோயிஸ்டுகள் நிரூபித்துவிட்டதால், எதிரி நாட்டுப் படையாகக் கருதி மாவோயிஸ்டுகளை ஒடுக்கவேண்டும்'' என்று தலையங்கம் தீட்டியிருக்கிறது தினமணி. இத்தகைய வழிமுறையைக் கையாண்டிருப்பதன் மூலம், உன்னதமான இலட்சியத்துக்குப் பாடுபடுபவர்கள் என்று கூறிக்கொள்வதற்கான அருகதையை மாவோயிஸ்டுகள் இழந்துவிட்டதாக கூறுகிறது, இந்து நாளேடு.

இதுகாறும் மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவு காட்டி வந்ததைப் போலவும், இந்தக் கடத்தல் நடவடிக்கை காரணமாக மேற்படி ஆதரவை திரும்பப் பெறுவது போலவும் நடிக்கின்றன ஊடகங்கள். நேற்று வரை மாவோயிஸ்டுகளிடம் அரசு மிகுந்த இரக்கம் காட்டியதைப் போலவும், இனி மனதைக் கல்லாக்கிக் கொண்டு அவர்களை ஒடுக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதாகவும் ஒரு பொய்ச்சித்திரம் தீட்டப்படுகிறது.

இந்தக் கடத்தலுக்கான காரணம் விளங்கிக் கொள்ள முடியாததல்ல. பல்வேறு பொய்வழக்குகளின் கீழ் ஆண்டுக் கணக்கில் சிறை வைக்கப்பட்டிருக்கும் பழங்குடி மக்களையும் தமது தோழர்களையும் விடுவிக்க வேண்டும் என்பதுதான் மாவோயிஸ்டுகளின் கோரிக்கை. பிணை மனு, வாய்தா, வழக்கு என்று அலைந்து சட்டபூர்வமான வழிகளில் நிவாரணம் பெறவேண்டுமேயன்றி, இப்படி ஆள்கடத்தலில் ஈடுபடுவது ஜனநாயக முறையல்ல என்பது ஊடகங்கள் மாவோயிஸ்டுகளுக்கு கூறும் அறிவுரை.

''அக்யூஸ்டை பிடிக்கமுடியாவிட்டால், அவன் பெண்டாட்டியை, பிள்ளையைக் கடத்து'' என்பதுதான் போலீசு ஆத்திச்சூடியின் 'அறம் செய விரும்பு'. ஆள்கடத்தல் என்பது போலீசின் அன்றாடப்பணி. இந்தியாவில் ஆள் கடத்தலே நடக்காத ஒரு போலீசு நிலையத்தைக் 'கடவுளாலும் ' காட்ட முடியாது. குற்றவியல் நடைமுறைச் சட்டம் உள்ளிட்ட எல்லா புனிதச் சட்டங்களையும், அவற்றை மீறியதற்காக மாண்புமிகு நீதி மன்றங்கள் தெரிவித்துள்ள கடும் கண்டனங்களையும் கால்தூசாகக் கருதி, கடத்தல், சித்திரவதை, வன்புணர்ச்சி, கொலை போன்ற குற்றங்களை போலீசும் இராணுவமும் தொடர்ந்து செய்து வருகின்றன.

ஆள் கடத்தல் என்பதை போலீசின் இயல்பாக அங்கீகரித்து, அத்தகைய கடத்தல் நடவடிக்கைகளுக்குச் சட்டம் போட்டிருக்கும் கடிவாளமல்லவோ 'ஹேபியஸ் கார்ப்பஸ்' எனப்படும் ஆட்கொணர்வு மனு. இந்திய உயர் நீதிமன்றங்களின் நாட்குறிப்புகளில் ஹேபியஸ் கார்ப்பஸ் மனு தாக்கல் செய்யப்படாத நாள் ஒன்றை யாரேனும் காட்ட இயலுமா? ''இந்த ஜனநாயகத்தின் மீது தங்களுக்கு நம்பிக்கையில்லை, இல்லை, இல்லவே இல்லை'' என்று உயர் நீதிமன்ற நீதிபதிகளின் 'தலையில் அடித்து' சத்தியம் செய்ததே சென்னை போலீசு, அதைத் தொலைக் காட்சிகளில் இந்த நாடே காணவில்லையா?

மக்களுக்கும்கூட இந்த ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லைதான். தங்களுக்கு எதிராக அடுக்கடுக்காக அநீதி இழைக்கப்பட்ட போதிலும், இந்த நாட்டின் மக்கள் கலகம் செய்யாமலிருப்பதற்குக் காரணம் சட்டத்தின் காவலர்கள் எனப்படுவோர் மீது அவர்கள் கொண்டிருக்கும் அச்சமேயன்றி, ஜனநாயகத்தின் மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையல்ல. நீதி பெறுவதற்கு வேறு வழியறியாத காரணத்தினால் அடங்கிப் போகும் மக்களின் முன், இந்த அரசைப் பணிய வைப்பதற்கான வழியை மாவோயிஸ்டுகள் காட்டியிருக்கிறார்கள்.

ஜனநாயகத்தில் மாவோயிஸ்டுகளுக்கு நம்பிக்கை இல்லாததால், அவர்கள் மீது போர் தொடுக்கவேண்டும் என்கிறது தினமணி. ஜார்கண்டு மாநிலச் சிறைகளில் 6000 பழங்குடி மக்கள் விசாரணைக் கைதிகளாக அடைபட்டிருக்கிறார்கள். சட்டீஸ்கரின் ஜகதால்பூர் சிறையில் மட்டும் 612 பழங்குடி மக்கள் மாவோயிஸ்டுகளுக்கு உதவியதாக அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் வேறெந்த கிரிமினல் குற்றத்துக்காகவும் சிறையில் இல்லை. டாடா, ஜின்டால் போன்ற கார்ப்பரேட் கொள்ளையர்களுக்கு தங்களது நிலத்தைத் தாரைவார்க்க மறுத்த குற்றத்துக்காகப் பொய் வழக்குகளில் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த மக்களெல்லாம் 'ஜனநாயகத்தின் மீது தாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை' நிரூபிக்க வேண்டுமா



படிப்பகம்

www.padippakam.com



> **மாவட்ட ஆட்சியர் அலெக்ஸ் பால் மேனன் நேர்மையாளர், சேவை மனப்பான்மை கொண்டவர் என்கிறார்கள். இருக்கலாம், அவையெல்லாம் அவரது தனிப்பட்ட விழுமியங்கள். அவ்வளவுதான். நேர்மையற்ற ஒரு அரசமைப்பை அவர் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார் என்ற உண்மையை, அவருடைய தனிப்பட்ட நேர்மை ரத்து செய்துவிடுவதில்லை. இந்த உண்மை அவர் அறியாததுமல்ல.**

னால், நிலத்தைக் கொடுத்துவிட்டு ஓடி விடவேண்டும். அல்லது ராம் ஜெத்மலானி போன்ற வழக்குரைஞர்களை அமர்த்தி உச்ச நீதிமன்றத்தில் வாதாடி பிணையில் வெளியே வந்து, அதன் பின்னர் 'ஜனநாயக முறைப்படி' வாய்தாவுக்கு அலைய வேண்டும். காஷ்மீரில் போலீசின் மீது கல்லெறிந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் 20,000 சிறுவர்கள் ஆண்டுக்கணக்கில் வாய்தாவுக்கு அலைவதாக சமீபத்திய பி.பி.சி. செய்தி கூறுகிறது.

கூடங்குளத்தில் அமைதி வழியில் தமது எதிர்ப்பை தெரிவித்த ஆயிரக்கணக்கான மக்கள் மீது சுமார் 180 பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஓரிரு வழக்குகளில் மட்டும் கைது செய்யப்பட்ட 200 பேர், ஒரு மாதம் சிறையிலிருந்து, பின்னர் பிணையில் வெளியே வந்து தற்போது அன்றாடம் போலீசு நிலையத்தில் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். போராட முனைந்தால் பொய்வழக்குகள் இருநூறும் உயிர்த்தெழும்.

பொய் வழக்கு என்பது மக்களுடைய நெற்றிப் பொட்டில் அழுத்தப்படும் துப்பாக்கி. 'சத்தம் போடாமல் நிலத்தைக் கொடு, காட்டைக் கொடு, அணு உலையை ஒப்புக்கொள்' என்று வாயில் துணி அடைத்துப் பணிய வைக்கும் வன்புணர்ச்சி. இந்த அரசு சொல்கிறது - மாவோயிஸ்டுகளின் கடத்தல் என்பது அரசை மிரட்டிப் பணியவைப்பதாம், அது ஜனநாயக வழிமுறை இல்லையாம்!

ஆயுதப் போராட்டப் பாதையைக் கைவிட்டு நாடாளுமன்ற அரசியல் நீரோட்டத்தில் கலக்குமாறு மாவோயிஸ்டுகளுக்கு வேண்டுகோள் விடுபவர்களும், இந்த ஜனநாயகத்தின் மீது பெருமதிப்பும், ஜனநாயக வழிமுறைகளின் மீது பெரும்பக்தியும் கொண்டவர்களுமான வலது கம்யூனிஸ்டு கட்சியினருக்கு நேர்ந்திருப்பது என்ன? மாவோயிஸ்டுகள் என்ற பெயரில் சட்டீஸ்கரில் அவர்களும் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். சல்வா ஜூடும் என்ற கூலிப்படையினரும் போலீசும் இணைந்து மக்களுக்கு எதிராக நிகழ்த்திய படுகொலைகளையும் வன்முறைகளையும் விசாரிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த கர்தம் ஜோகா என்ற வலது கம்யூனிஸ்டு தலைவர் மீது ''மாவோயிஸ்டு கொரில்லாக்களுடன் சேர்ந்து மத்திய ரிசர்வ் போலீசு படையினர் மீது தாக்குதல் தொடுத்ததாக'' வழக்கு போட்டுச்சிறை வைத்திருக்கிறது போலீசு.

வலது கம்யூனிஸ்டு தலைவர்களான ஏ.பி.பரதன், டி.ராஜா போன்றோர் ஜனநாயக முறைப்படி பல தடவை கண்டனம் தெரிவித்தும், நீதிமன்றங்களில் மனுச்செய்தும் சட்டீஸ்கர் அரசு இவரை விடுவிக்கவில்லை. தற்போது மாவோயிஸ்டுகள் வெளியிட்டிருக்கும் விடுவிக்கவேண்டியவர்கள் பட்டியலில் கர்தம் ஜோகாவும் வலது கம்யூனிஸ்டு கட்சியினரும் இருக்கின்றனர். ஜனநாயகப் பூர்வமற்ற வழியில் தனக்குக் கிடைக்கக்கூடிய இந்தப் பிணையில் கர்தம் ஜோகா வெளியே வரலாமா, அல்லது ஜனநாயக வழிமுறையின் மீது தான் கொண்டிருக்கும் விசுவாசத்தை நிரூபிப்பதற்காக அவர் சிறையிலேயே காத்திருக்க வேண்டுமா?

''இந்திய மக்களைக் கண்டு அந்நியர்களான பிரிட்டிஷார் அஞ்சியதைக் காட்டிலும் அதிகமாக, சுதந்திர இந்தியாவின் அரசு அஞ்சுகிறது. தங்களது ஆட்சியைத் தூக்கியெறிய வேண்டுமென்று போராடிய இந்தியர்கள் மீது, அரசியல் ரீதியான வழக்குகள் அன்றி வேறு பொய் வழக்குகளை பிரிட்டிஷ் அரசாங்கம் கூடப் போட்டதில்லை'' என்கிறார் அவுட்லுக் (19.12.2011) கட்டுரையாளர் நீலப் மிஸ்ரா. போஸ்கோவுக்கு எதிராக அமைதி வழியில் போராடி வரும் வலது கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அபய் சாஹூவின் மீது பாலியல் வன்முறை, தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமை, வரதட்சிணைக் கொலைக்கு தூண்டுதல், திருட்டு முதலான 50 பொய்வழக்குகளைப் போட்டிருக்கிறது ஒடிசா போலீசு. போஸ்கோ எதிர்ப்பு போராட்டத்தின் முன்னணியாளர்கள் 800 பேர் மீது மட்டும் 200 பொய்வழக்குகள் ஒடிசாவில் போடப்பட்டிருக்கின்றன.

சென்ற ஆண்டு சட்டீஸ்கர் சென்ற சுவாமி அக்னிவேஷ் தாக்கப்பட்டது தொடர்பாக விசாரிப்பதற்கு, உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் சட்டீஸ்கர் சென்ற சி.பி.ஐ.



படிப்பகம்

www.padippakam.com

அதிகாரிகள் மீது, சட்டீஸ்கர் துணைப்படை (பெயர் மாற்றப்பட்ட சல்வா ஜுடும்) துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறது. சுமார் 2 மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நடத்தி மத்திய ரிசர்வ் போலீசு படையினர் தங்கள் உயிரைக் காப்பாற்றியதாகவும், இனிமேல் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமல் தாங்கள் விசாரணைக்குச் செல்ல இயலாது என்றும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்கின்றனர் சி.பி.ஐ அதிகாரிகள். (டைம்ஸ் ஆப் இந்தியா, 14.3.2012) ஆயுதப்படைப் பாதுகாப்பு இல்லாமல் சி.பி.ஐ. அதிகாரிகளே நடமாட முடியாத இடத்தில், சாதாரண பழங்குடி மக்களுக்கு கிடைக்கும் நீதி எத்தகையதாக இருக்கும்?

நிலைமை இவ்வாறிருக்க, இந்தக் கடத்தல் நடவடிக்கையையே அரசுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகச் சித்தரித்திருக்கிறார் மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ். அலெக்ஸைப் போன்ற இளம் அதிகாரிகளின் அர்ப்பணிப்புமிக்க செயல்பாட்டினால் ஈர்க்கப்படும் மக்கள், தங்களைப் புறக்கணித்து விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் மாவோயிஸ்டுகள் அவரைக் கடத்தியிருக்கிறார்களாம்! அமைச்சர் சொல்வதுதான் உண்மையென்றால், மாவோயிஸ்டுகள் தம் சொந்த செலவில் சூனியம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று விட்டுவிட வேண்டியதுதானே! எதற்காக மீட்பு நடவடிக்கைகள், கண்டனங்கள், வேண்டுகோள்கள்?

''பழங்குடி மக்களுக்காகப் போராடுவதாக கூறிக் கொள்ளும் மாவோயிஸ்டுகள், அவர்களுக்கு வளர்ச்சித் திட்ட உதவி வழங்கச்சென்ற அதிகாரியைக் கடத்தலாமா? ஆயுதம் ஏந்தாத ஒரு ஆட்சியரைக் கடத்தலாமா?''என்று கேள்வி எழுப்புகின்றன ஊடகங்கள். ஏதோ ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தை அரசு அங்கீகரித்திருப்பதைப் போலவும், யுத்த தருமம் வழுவி நிராயுதபாணியைக் கடத்தியதுதான் பிரச்சினை என்பது போலவும் வெட்கமே இல்லாமல் பேசுகின்றன. தோழர் ஆசாத், தோழர் கிஷன்ஜி உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மாவோயிஸ்டு முன்னணியாளர்களையும், சாதாரணப் பழங்குடி மக்களையும், மோதல் என்ற பெயரில் நிராயுதபாணியாக நிற்க வைத்து சுட்டுக் கொன்றிருப்பதுதான் இந்த அரசின் யோக்கியதை. சல்வாஜுடும் செய்த நூற்றுக்கணக்கான கொலைகள், வழக்குகளாக நீதிமன்றங்களில் உறங்குகின்றன. காஷ்மீரிலோ தோண்டுமிடத்திலெல்லாம் பிணங்கள் ஊற்றெடுக்கின்றன. காஷ்மீர் மாநில அரசே அதிகாரபூர்வமாக ஒப்புக் கொள்ளும் கணக்கின்படி, இராணுவம் அழைத்துச் சென்று அதன்பின் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 1200 -க்கும் மேல்!

எல்லைப் பாதுகாப்புப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டு, மின் அதிர்ச்சி கொடுத்து சித்திரவதை செய்யப்பட்ட சட்டீஸ்கர்-காங்கேர் மாவட்டத்தைச் சேர்ந்த 19 வயதான பழங்குடியினப் பெண் சுனிதா துலாவி. (கோப்புப் படம்)



போலீசு நடத்தியிருக்கும் ஆள் கடத்தல்களையும் போலி மோதல் கொலைகளையும் மறுக்க முடியாதென்பதால், ''அரசைப் போலவே நீங்களும் நடந்து கொள்ளலாமா?'' என்று நைச்சியமாக கேள்வி எழுப்புகிறது இந்து நாளேடு. மாவோயிஸ்டுகள் அப்படி நடந்து கொள்ள எண்ணியிருந்தால் ஆட்சியர் அலெக்ஸை தண்டகாரண்ய காடுகளில் 'காணாமல் போக'ச்செய்திருக்கலாம். மாறாக, அவரைப் பிணைக்கைதியாக வைத்துக் கொண்டு கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

கைதிகளை விடுவிக்கக் கோரும் அவர்களது கோரிக்கைகளில் நீதி இருக்கிறது. ''எனினும் அவ்வாறு விடுவிப்பது சட்டத்துக்கு விரோதமானது'' என்கிறார்கள் வல்லுநர்கள். உண்மைதான். 'நீதி' சட்டவிரோதமானதாகவும், அநீதிகள் சட்டபூர்வமானவையாகவும் நிலைநாட்டப்பட்டிருக்கும் நாட்டில், சட்டப்படி நீதியைப் பெறுவது கடினம்தான்.

காடுகள், மலைகள், ஆறுகள் அனைத்தும் சமூகத்தின் பொதுச்சொத்துகள் என்பதே, மனிதகுலம் இதுகாறும் கடைப்பிடித்துவரும் நீதி. அந்த நீதியை இன்று சட்டவிரோதமாக்கி விட்டது தனியார்மயக் கொள்கை. அதனால்தான் மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவு தெரிவிப்பதே சட்டவிரோத நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

பழங்குடிகளை, அவர்களது பாரம்பரிய வாழ்விடத்திலிருந்து விரட்டியடிப்பதன் மூலம், சொத்து என்ற சொல்லையே கேள்விப்பட்டிராத அம்மக்களின் மீது தனிச் சொத்தின் ஆவி இறக்கப்படுகிறது. வன்புணர்ச்சிக்கு ஆட்படுத்துவதன் வாயிலாக கற்பின் மேன்மை அவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது. நாகரிகத்தின் பொருளையும் நல்லாட்சியையும் (கிராம சுரக்ஷா அபியான்) அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க உலகவங்கி நிதி ஒதுக்குகிறது.

சாலை, மின்சாரம், கல்வி, மருத்துவம் போன்ற பரிசுப் பொதிகளை மோட்டார் சைக்கிளில் சுமந்து கொண்டு முதலில் அலெக்ஸ் பால் மேனன் வருகிறார். அடுத்து தானியங்கித்துப்பாக்கிகளைச்சுமந்தபடி சி.ஆர்.பி.எஃப்.



படிப்பகம்

விஜயகுமார் வருகிறார். ''யாரை முதலில் அனுப்புவது, விஜயகுமாரையா, அலெக்ஸையா? எது முதலில், காட்டு வேட்டையா, வளர்ச்சித் திட்டமா?'' என்ற விவாதத்தில் இறுதி முடிவு எடுக்கப்படாததால், சில இடங்களுக்கு அவரும், சில இடங்களுக்கு இவரும் முதலில் அனுப்பப்படுகிறார்கள்.

இரண்டையும் அக்கம்பக்கமாகவே பயன்படுத்தி கூடங்குளம் போராட்டத்தை முடக்கிவிட்டதாக டில்லி முதல்வர்கள் மாநாட்டில் பெருமையடித்துக் கொண்டார் ஜெயலலிதா. ''500 கோடி ரூபாய் வளர்ச்சித் திட்டத்தில் புறங்கையை நக்க வேண்டும். மறுத்தால், 200 பொய் வழக்குகளில் சிறை செல்லத் தயாராக வேண்டும். இரண்டில் எது மக்களின் தெரிவாக இருப்பினும், அணு உலை மட்டும் இயங்கியே தீரும்.'' — இதுதான் கூடங்குளம் தந்திரம்.

அலெக்ஸ் பால் மேனனின் சொந்த ஊரான நெல்லை மாவட்டத்தில் ஜெ அரசு எதைச் செய்து வருகிறதோ, அதைத்தான் ராமன் சிங் அரசு சட்டீஸ்கரில் செய்கிறது. நலத்திட்டத்தைக் கடை விரித்து அணு உலை எதிர்ப்புப் போராட்டத்தை உடைக்கின்ற கைக்கூலிகளான ஊராட்சி மன்ற உறுப்பினர்களை இடிந்தகரை மக்கள் தாக்கியிருக்கின்றனர். அங்கே அலெக்ஸ் கடத்தப்பட்டிருக்கிறார்.

அவர் நேர்மையாளர், சேவை மனப்பான்மை கொண்டவர் என்கிறார்கள். இருக்கலாம், அவையெல்லாம் அவரது தனிப்பட்ட விழுமியங்கள். அவ்வளவுதான். நேர்மையற்ற ஒரு அரசமைப்பை அவர் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார் என்ற உண்மையை, அவருடைய தனிப்பட்ட நேர்மை ரத்து செய்துவிடுவதில்லை. இந்த உண்மை அவர் அறியாததுமல்ல.

மக்களை நாற்புறமும் சுட்டெரிக்கும் இந்த அநீதிகளின் மத்தியில், குற்றவுணர்வின்றி ஆட்சியராகப் பணியாற்றும் மனவலிமையை அவருக்கு வழங்கியிருப்பது அவருடைய தனிப்பட்ட நேர்மைதான் என்றால், அந்த நேர்மை ஆபத்தானது.

அவர் இந்தக் கொலைகார அரசின் கோரைப்பற்களை மறைக்கும் மனித முகம். அறம் கொன்று அம்மணமாய் நிற்கும் ஆளும் வர்க்கத்தின் மானத்தை மறைக்கக் கிடைத்த கோவணம். முழு நிர்வாணப் பாசிசமாய் மக்கள் முன் காட்சியளிப்பதற்கு ஆளும் வர்க்கம் இப்போதைக்கு விரும்பவில்லை என்பதால், 'கோவணம்' காப்பாற்றப் படும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

**சாலை, மின்சாரம், கல்வி, மருத்துவம் போன்ற பரிசுப் பொதிகளை மோட்டார் சைக்கிளில் சுமந்து கொண்டு முதலில் அலெக்ஸ் பால் மேனன் வருகிறார். அடுத்து தானியங்கித் துப்பாக்கிகளைச் சுமந்தபடி சி.ஆர்.பி.எஃப். விஜயகுமார் வருகிறார். ''யாரை முதலில் அனுப்புவது?'' என்ற விவாதத்தில் இறுதி முடிவு எடுக்கப்படாததால், சில இடங்களுக்கு அவரும், சில இடங்களுக்கு இவரும் முதலில் அனுப்பப்படுகிறார்கள்.**



அரசுப் படைகளால் கடத்திச் செல்லப்பட்டு, போலி மோதலில் சுட்டுக்கொல்லப்பட்ட மாவோயிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் ஆசாத். (கோப்புப் படம்)

வேறொரு கோணத்தில், ஆளும் வர்க்கத்தின் இந்த அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது தினமணியின் தலையங்கம். ''ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் கைவிடும் நிலையில், மக்களின் பிரச்சினைக்காகக் குரலெழுப்ப ஒரு மாற்றுக் கட்சியும் இல்லாமல் போனால், அந்த வெற்றிடத்தை நிரப்ப மாவோயிஸ்டுகள் போன்ற தீவிரவாதிகள் நுழைந்து விடுவார்கள் என்கிற ஆபத்து இந்தியாவின் எல்லா மாநிலங்களிலுமே இருக்கிறது''

ஆபத்துதான். என்ன செய்வது? பாரதிய ஜனதாவும் காங்கிரசும் பன்னாட்டு நிறுவனங்களை விரட்டினால், மாவோயிஸ்டுகளிடமிருந்து பழங்குடிகளை மீட்டுவிடலாம். முதலாளி வர்க்கம் சொத்துடைமையைத் துறந்து விட்டால் கம்யூனிசத்தையே ஒழித்துவிடலாம். நடப்பதில்லையே!

'குறைகுடம்' எனும் தன்னுடைய வலைப்பூவில் (alexmenon.blogspot.in) செப்டம்பர், 4, 2008 அன்று ஒரு கவிதை எழுதியிருக்கிறார் அலெக்ஸ் பால் மேனன்.

**எம் அடிமைத்தனம் பெரிது ,**

**எமைப் பிணைத்திருக்கும் விலங்குகளோ வலிது,**

**பின்**

**உடைத்தெடுக்கும் அடிகள் மட்டும் ,**

**எப்படி**

**மெதுவாய்?**

**வலிக்காமல் ?**

● சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

## சத்தீஸ்கர்:

# கழிப்பறைக் காகிதமானது சட்டத்தின் ஆட்சி!

**காட்டுவேட்டை நடக்கும் சத்தீஸ்கரில் போலீசு சொன்னதுதான் சட்டம் என்ற கேடான நிலைமை உருவாகிவிட்டது.**

ஒரு மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கைக் கட்டுப் படுத்தும் பொறுப்பும் அதிகாரமும் அம்மாநிலத்தின் உள் துறை அமைச்சரைச் சார்ந்ததாகும். இவரது உத்தரவை உயர் போலீசு அதிகாரிகள்கூட அலட்சியப்படுத்த முடியாது என்கிறது சட்டம். ஆனால், முடியும் எனப் புலம்புகிறார் சத்தீஸ்கர் மாநில உள்துறை அமைச்சர் நன்கிராம் கன்வர். கடந்த பிப்ரவரி 15-ஆம் தேதி பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர், தனது அமைச்சகத்தின் கீழ் வரும் போலீசு துறை தனது உத்தரவுகளை மதிப்பதில்லை என மூக்கைச் சிந்தினார்.

சத்தீஸ்கரின் கோர்பா மாவட்டத்தில் நடைபெறும் விபச்சாரக் குற்றங்கள் குறித்து மிலன்தாஸ் என்பவர், கடந்த பிப்ரவரி மாதம் போலீசிடம் முறையிட்டுள்ளார். போலீசோ குற்றவாளிகளைப் பிடிப்பதை விட்டு விட்டு, மிலன் தாஸைத் தாக்கியதுடன் அல்லாமல், சிறுமியான அவரது மகளையும் மானபங்கப்படுத்தியது. இது குறித்த வழக்கை கோர்பா மாவட்ட போலீசார் பதிவு செய்ய மறுத்ததால், மிலன்தாஸ் உள்துறை அமைச்சரிடம் முறையிட, அமைச்சரும் வழக்கை உடனே பதியச் சொல்லி கோர்பா மாவட்ட போலீசு கண்காணிப் பாளருக்கு உத்தரவிட்டிருக்கிறார். தனது இவ்வுத்தரவை போலீசார் அலட்சியப்படுத்திவிட்டதாக அமைச்சர் தற்பொழுது குற்றஞ்சுமத்தி வருகிறார்.

‘‘என்னுடைய பேச்சைத்தான் போலீசு கேட்பதில்லை, சட்டம் சொல்வதையாவது கேட்கலாமே’’ என்று அமைச்சர் பத்திரிகையாளர்களைக் கூட்டிப் புலம்பிக் கொண்டிருந்த பொழுது, மாவட்ட போலீசு கண்காணிப்பாளரோ, அவ்வாறான உத்தரவு எதுவும் தனக்கு வழங்கப் படவில்லை என மறுத்தார். இதற்குப் பதிலடியாக அமைச்சர், ‘‘பாதிக்கப்பட்ட சிறுமியின் வாக்கு மூலமே இது போன்ற வழக்குகளை பதிவு செய்யப் போதுமானது’’ எனும் உச்ச நீதிமன்ற தீர்ப்பைச் சுட்டிக் காட்டினார். அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ள உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலாவது போலீசு வழக்கு பதிவு செய்ததா என்றால், அதற்கும் பெப்பே காட்டிவிட்டது.

2010-இல் சத்தீஸ்கரில் உருவாக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழு உள்துறை அமைச்சர் கன்வரின் அனுமதியின்றிதான் அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தப் படை ரியல் எஸ்டேட் விவகாரங்களில் கட்டைப் பஞ்சாயத்து செய்து பணம் பிடுங்கும் சட்டவிரோத அமைப்பு என்று அமைச்சரே குற்றஞ்சாட்டுகிறார். இப் படைப் பிரிவைக் கலைக்கச் சொல்லி உயர் போலீசு அதிகாரிகளுக்கு அமைச்சர் இட்ட உத்தரவோ கேட்பாரின்றிக் கிடக்கிறது.

மாவோயிஸ்டுகளையும் பழங்குடியினரையும் வேட்டையாடுவதற்காகவே சத்தீஸ்கர் மாநில அரசு சட்ட விரோதமாக ‘கோயா கமோண்டோ’ என்ற குண்டர் படையைக் கட்டி நடத்தி வந்தது. இந்தக் குண்டர் படையின் தலைவனான கர்டாம் சூர்யா என்பவன் மீது பல வேறு கொலை, வன்புணர்ச்சி குற்றச்சாட்டுகள் உள்ளன. நவம்பர் 2006-இல் 3 பழங்குடியினப் பெண்களை வன் புணர்ச்சி செய்த வழக்கில் இவனுக்குப் பிடிவாரண்டு பிறப்பித்தது நீதிமன்றம். ஆனால், அம்மாநில அரசோ கர்டாம் சூர்யாவைத் தேடிப் பிடிக்க முடியவில்லை என நீதிமன்றத்தில் புளுகி வருகிறது.

சிறப்பு காவல் அதிகாரிகள் என்ற பெயரில் பழங்குடியின இளைஞர்களை நக்சல்பாரிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுத்துவது சட்டவிரோதம் என்று கூறி, சல்வா ஜூடும் போன்ற அமைப்புகளைக் கலைக்க உத்தரவிட்டது உச்ச நீதிமன்றம். அம்மாநில அரசோ, புதிய விதிகளை உருவாக்கி, கோயா கமாண்டோவின் பெயரை மட்டும் சிறப்பு துணைப் படை என்று மாற்றி, அக்குண்டர் படையை இன்றும் நடத்தி வருகிறது. தேடப் படும் கிரிமினல் குற்றவாளியான கர்டாம் சூர்யா அப்புதிய அமைப்பில்தான் செயல்பட்டு வருகிறான். இந்த உண்மைகளெல்லாம் ஊருக்கே தெரிந்திருந்தபோதும்,

நீதிமன்றத்தால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட பிறகும், சத்தீஸ்கர் மாநில அரசாலும், போலீசாராலும் பாதுகாக்கப்படும் கர்டாம் சூர்யா. (கோப்புப் படம்)





படிப்பகம்

www.padippakam.com

நீதிமன்றமோ அரசின் பதிலைக் கேட்டுக்கொண்டு அமைதி காத்து வருகிறது. அம்மாநில நக்சல் ஒழிப்பு பிரிவின் கூடுதல் உதவி ஜெனரல், நீதிமன்றம் வழங்கிய பிடிவாரண்டே நக்சல்பாரிகளின் திட்டமிட்ட சதி என எகத்தளமாகக் கூறி வருகிறார். அது மட்டுமா, இக்கிரிமினலை 'சத்தீஸ்கரின் நாயகன்' என்று தலையில் வைத்துக் கொண்டாடுகிறது, அம்மாநில போலீசு. 'கொடூரமான, வக்கிரமான முறைகளின் மூலம் பயத்தை விதைப்பதால்தான் அவன் சத்தீஸ்கரின் நாயகன்' என இந்த அநியாயத்திற்கு விளக்கம் வேறு அளித்து வருகிறது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் போலீசாரின் கேள்விக்கிடமற்ற காட்டு ராஜ்ஜியம்தான் நடக்கிறது. பன்னாட்டு நிறுவனங்களுக்கு அம்மாநிலத்தைக் கூறு போட்டு விற்பதற்கு எதிராகப் போராடும் பழங்குடியின மக்கள் மீது பாய்வதற்காகவே கட்டவிழ்த்துவிடப்பட்ட போலீசு, இப்பொழுது செக்கு எது சிவன் எது என்ற வேறுபாடின்றி, அனைத்துச் சட்டபூர்வ அமைப்புகள் மீதும் விழுந்து பிடுங்கி வருகிறது. இதனைத் தடுக்க இயலாதது போல உள்துறை அமைச்சரும் அரசும் நாடகமாடுகிறார்கள். நீதித்துறை உள்ளிட்ட அனைவரும் இந்நாடகத்தின் கூட்டாளிகளாக உள்ளனர்.

இங்கு மட்டுமல்ல; நாடு முழுவதும் சட்டத்தின் ஆட்சி இப்படித்தான் சந்தி சிரிக்கிறது. ஒடிஸ்ஸாவில் மாவோயிஸ்டுகளால் கடத்தப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் ஜினா ஹிகாகாவை விடுவிப்பதற்காக, சிறையிலுள்ள மாவோயிஸ்டுகளையும் பழங்குடியினரையும் விடுவிப்பது என்ற அரசின் முடிவிற்குக் கட்டுப்பட மறுக்கிறது, போலீசு.



கடந்த ஆண்டு மார்ச் மாதம் கோயா கமாண்டோ படையும் மத்திய ரிசர்வ் போலீசு படையும் இணைந்துசத்தீஸ்கரின் மொர்பள்ளி, திம்மாபுரம், தர்மேதிலா கிராமங்களில் புகுந்து நடத்திய தேடுதல் வேட்டையின் பொழுது, அப்படைகளால் அடித்து நொறுக்கப்பட்ட ஒரு பழங்குடியின விவசாயியின் வீடு (கோப்புப் படம்)

இப்படி, முகத்தில் காரி உமிழாத குறையாக உச்ச நீதிமன்றம் முதல் உள்துறை அமைச்சர் வரை தனக்கு மேலேயுள்ள சட்டபூர்வமான அனைத்து அமைப்புகளையும் துச்சமாய்க் கருதி இகழ்கிறது, போலீசு. ஆனால், சட்டத்தின் ஆட்சியைத் தூக்கிப் பிடிப்பவர்கள் எவருமே இவற்றைக் கண்டும் காணாதது போல நடந்து கொள்கிறார்கள். சேது சமுத்திரத் திட்டத்தை ஆதரித்து தி.மு.க. அரசு வேலை நிறுத்தம் செய்தது என்ற பத்திரிகை செய்தியின் அடிப்படையில் வழக்கைத் தானே விசாரித்து, தி.மு.க. அரசிற்கு மிரட்டல் விடுத்த நீதிமன்றமோ சத்தீஸ்கரில் நீதிமன்ற உத்தரவுகள் செயல்படுத்தப்படாதது பற்றிக் கள்ள மவுனம் சாதிக்கின்றது. எதிர்கட்சியினரோ, சட்டத்தின் ஆட்சியையே கேலிக் கூத்தாக்கியுள்ள போலீசையோ, நாடகமாடும் அமைச்சரையோ அம்பலப்படுத்திக் குரலேதும் எழுப்ப மறுக்கிறார்கள். ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்று எனச் சொல்லிக் கொள்ளும் ஊடகங்களோ இந்தப் பிரச்சினையை ஏறெடுத்துப் பார்க்கவும் விரும்பவில்லை.

பன்னாட்டு நிறுவனங்களுக்கு நாட்டைக் கூறு போட்டு விற்பதில்தான் இவர்களின் நலன்கள் பின்னிப் பிணைந்துள்ளன. அதனால்தான் சொல்லி வைத்தாற்போல இவர்கள் அனைவரும் இவ்விசயங்களில் ஒரே விதமாக நடிக்கிறார்கள். நமது உரிமைகளுக்காகச் சட்டரீதியாகப் போராடி வெற்றி பெற முடியும் என்பது போன்ற மாயைகளைத் தெளிய வைக்கின்றது போலீசின் காட்டு ராஜ்ஜியம். சட்டம், அரசியல் சாசனம் என்பவையெல்லாம் மக்களை ஒடுக்குவதற்காகவும், நாடாளுமன்ற பன்றித் தொழுவ அக்கப்போருக்குமானதேயன்றி வேறல்ல. தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்க அமைப்பாக இருந்தாலும் சரி, சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரவர்க்க அமைப்பாக இருந்தாலும் சரி இவர்கள் ஆளும் வர்க்க நலனையொட்டித்தான் செயல்படுகிறார்களேயொழிய, சட்டப் புத்தகம் இவ்வமைப்புகளை வழிநடத்துவதில்லை.

அறவழியில் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக மணிப்பூரின் ஐரோம் சர்மிளா நடத்தி வரும் உண்ணாவிரதப் போர், அரசை ஓர் அங்குலம்கூட அசைக்கவில்லை. அரசியல் அமைப்புச் சட்டம் பழங்குடியினருக்கு வழங்கியிருக்கும் உரிமைகளை வலியுறுத்தி வழக்குகள் பதிவு செய்ததற்காக காந்தியவாதி ஹிமன்சுகுமார் தண்டிக்கப்பட்டார்; அவரது ஆசிரமம் போலீசாரால் பட்டப் பகலில் இடித்து நொறுக்கப்பட்டது. சத்தீஸ்கரில் நிலவும் அரசு பயங்கரவாதத்தை அம்பலப்படுத்திய 'குற்றத்திற்காக' பினாயக் சென் ஆயுள் தண்டனைக்குள்ளானார். சட்டத்தை அமல்படுத்தக் கோரிப் போராடுபவர்களுக்கு, இதுதான் கதி என ஓட்டுக்கட்சிகள், நீதிமன்றம், போலீசு என அனைவரும் ஒன்று கூடிக் கெக்கலி கொட்டுகிறார்கள்.

● அன்பு



படிப்பகம்

www.padippakam.com

மார்ச் 2012 இதழில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி

# ஜெயாவின் நிர்வாகத் திறன்:

# கலைகிறது பார்ப்பன பம்மாத்து!

**அடாவடி, திமிர்த்தனம்தான் ஜெயாவின் துணிச்சல்; நீதித்துறையால் முகத்தில் கரிபூசப்பட்டதுதான் அவரது நிர்வாகத் திறமை.**

**ச**மச்சீர் கல்வி வழக்கில் தமிழக (ஜெயா) அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய மூத்த வழக்குரைஞர் பி.பி.ராவ், ‘‘தமிழக அரசைச் சட்டரீதியாகச் சரியாக வழி நடத்தும் ஆளில்லை’’ என்று வெளிப்படையாக ஒப்புக் கொண்டார். அந்த வழக்கில் அவமானப்பட்டு, அசிங்கப் பட்டு, தோற்றுப்போன பிறகாவது பார்ப்பன பாசிச ஜெயாவுக்குப் புத்தி வந்திருக்க வேண்டாமா? அடாவடியான பல முடிவுகள் எடுத்து, பல வழக்குகளில் மூக்கறுபட்டும் ஜெ திருந்துவதாக இல்லை.

சொத்துக் குவிப்பு வழக்கில் கிட்டத்தட்ட பத்தாண்டுகள் இழுத்தடித்து, ஜெயா-சசி கும்பலைக் காப்பாற்றி வந்த வழக்கறிஞர் ஜோதிக்குத் தக்க பரிசு (நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் பதவி) தரமறுத்து, நன்றி கெட்டத்தனமாக நடந்து கொண்டனர். இதன் விளைவாக அவர் தி.மு.க.வுக்கு ஓடிப் போனார். பிறகு அந்த வழக்கை ஒரு ஐந்தாண்டு காலம் இழுத்தடித்த ‘‘பட்டை போடும்’’ நவநீதகிருஷ்ணனுக்கு நன்றிக் கடனாக தமிழக அரசு தலைமை வழக்குரைஞர் பதவியை வழங்கியது ஜெயா அரசு.

ஜோதிக்குப் பிறகு, ‘‘வாய்தா ராணி’’ பட்டத்தைத் தக்க வைத்துக் கொள்வதில் ஜெயாவுக்கு விசுவாசமாக உழைத்த நவநீத கிருஷ்ணன் உயர் நீதிமன்றத்தில் பல வழக்குகளிலும் தண்டனிட்டு, கூனிக் குறுகி நிற்கிறார். அரசை நடத்துவதற்கு அரசு நிர்வாகத் திறமை, தகுதி தேவையில்லை; மக்களை ஒடுக்கி ஒட்டச் சுரண்டுவதோடு, போலீசு அதிகாரிகளும், அரசு உயர் அதிகாரிகளும் செய்வதற்கு எல்லாம் தலையாட்டினால் போதும், அதைவிட முக்கியமாக அரசியல் பழிவாங்குதலில் அவர்களை ஏவி விட்டால் போதும் என்று கருதி செயல்படுகிறது, ஜெயா அரசு.

‘‘எது குறித்தும் கவலைப்படாமல், தான் தோன்றித்தனமாக முடிவெடுக்கும் ஜெயலலிதா அரசு, கடந்த பல ஆண்டுகளில் வேறெந்த அரசும் காணாத அளவு நீதிமன்றங்களின் தொடர்ச்சியான நிராகரிப்புகளினால் முகத்தில் கரிபூசிக் கொண்டு நிற்கிறது. ‘‘தமிழ்நாட்டில் இன்று தறிகெட்டு மூக்கணாங்கயிறு இல்லாத மாடாக ஓடிக் கொண்டிருக்கும் மாநில நிர்வாகத்தை அவ்வப்போது நீதித்துறைதான் சாட்டையைச் சுழற்றி வழிக்குக் கொண்டு வந்து கொண்டிருக்கிறது’’ என்று சில ஏடுகள் எழுதுகின்றன.

ஆனால், அரசுக்கு எதிரான, உறுதியான நிலைப்பாடு எடுத்து முற்றிலும் நியாயமான தீர்ப்புகளை நீதித்துறை வழங்கி விடுகிறது என்று சொல்லிவிட முடியாது. சில வழக்குகளில் பொதுநிர்பந்தத்தைக் கணக்கில் கொண்டு அரசின் முடிவுகளை மாற்றும் வகையில் தீர்ப்புகள் வழங்கப்பட்டாலும், பெரும்பாலானவற்றில் வழக்குகளை இழுத்தடித்து, எச்சரிக்கை விடுப்பதைப் போல ஒருபுறம் நடித்துக் கொண்டே, மறுபுறம் அரசுக்குச் சாதகமாக மழுப்புகிறது.

எடுத்துக்காட்டாக, வழக்குரைஞர் சங்கரசுப்பு மகன் சதீஷ் கொலை வழக்கில், சி.பி.ஐ. விசாரணைக்கு விட்டும் கூட கொலையாளிகளான போலீசு அதிகாரிகள் கைது செய்யப்படவில்லை. கோவை வழக்குரைஞர் அனந்தீஸ்வரன் தாக்கப்பட்ட வழக்கில் இதேபோல குற்றவாளிகளான போலீசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்

ஜெயா-சசியின் ஊடல்-கூடல் நாடகம்:சொத்துக்குவிப்பு வழக்கில் பாதகமாக வாக்குமூலம் கொடுத்துவிடக்கூடாது என்பதற்காக உருட்டல் மிரட்டலுக்குப்பின், ஊடல் காட்சிகள் முடிந்து சங்கமித்த இணைபிரியா தோழிகள்.(கோப்புப்படம்)






படிப்பகம்

www.padippakam.com

கப்படவில்லை. திருக்கோவிலூர் அருகே 4 இருளர் பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவிய போலீசுக்காரர்கள் கைது செய்யப்பட வில்லை. இப்படிப் பல வழக்குகள் மீது உயர் நீதிமன்றம் அரசு வழக்குரை ஞரிடம் எச்சரிக்கை, கண்டனம், வெறும் உருட்டல் மிரட்டலுக்கு மேலே போக மறுக்கிறது.



போலீசு ஆட்சிதான் ஜெ. ஆட்சி: போலீசாரால் கொடூரமாக வதைக்கப்பட்ட கோவை வழக்குரைஞர் அனந்தீஸ்வரன். போலீசாரால் கொல்லப்பட்ட வழக்குரைஞர் சங்கரசுப்புவின் மகன் சதீஷ். (வலது)

அதேசமயம், ஜெயலலிதா அரசு சாதாரண சட்ட அறிவு கூட இல்லாமல் பல வழக்குகளிலும், குறிப்பாக அரசியல் பழிவாங்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட வழக்குகளில் படுதோல்விகளைக் கண்டுள்ளது. சமச்சீர் கல்வியை ரத்து செய்தது, புதிய தலைமைச் செயலகத்தை அதிநவீன மருத்துவமனையாக மாற்றும் செய்கை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தை இடமாற்றம் செய்யும் முடிவு; ஆளுங்கட்சிக்காரன் வசமுள்ள தோட்டக்கலை சங்கத்திற்கு அரசு நில ஒதுக்கீடு செய்தது; தி.மு.க.வின் ஸ்டாலின், டி.ஆர். பாலு அலுவலகங்களைப் பறிக்க முயன்றது; தி.மு.க. பிரமுகர்கள் மீது ஏராளமான நில அபகரிப்பு வழக்குகள் போட்டுச்சிறையிலடைத்தது, அந்த வழக்குகள் நிற்காத போது பலரைக் குண்டர்கள் சட்டத்தில் சிறையிலடைத்தது; பின்னர் எல்லா வழக்குகளிலிருந்தும் அவர்கள் விடுதலை பெற்றது; 13,500 மக்கள் நலப் பணியாளர்களையும் வேலை நீக்கம் செய்தது; தமிழ்நாடு அரசுப் பணி நியமன ஆணைய உறுப்பினர்கள் மீது இலஞ்சஒழிப்பு என்ற பெயரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது; ராஜீவ் காந்தி கொலையில் தூக்குத் தண்டனை பெற்றுச் சிறையிலுள்ள மூன்று பேரின் கருணை மனுக்கள் விவகாரத்தில் மாறி மாறிப் 'பல்டி' என்று சட்ட-நீதித்துறை அறிவின்றி முட்டாள்தனமாக ஜெயா அரசு சிக்கிக் கொண்ட பட்டியல் நீளமானது.

நில அபகரிப்பு என்பது 1991-இல் ஜெயா-சசி துவக்கி வைத்த மிகப் பெரும் அளவிலான கிரிமினல் குற்றம். சிறுதாவூர், கொடநாடு தொடங்கி தென் தமிழகத்தில் நெல்லைச்சீமை வரை நகர்ப்புற, கிராமப்புற நிலங்களை ஏராளமாகக் குவித்தது அக்கும்பல்; அதற்கு எதிரான மக்கள் ஆத்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டுதான் தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது. பிறகு, ராமதாசு, திருமாவளவன் கட்சிகள் வரை ஓட்டுக்கட்சிகள் என்றாலே நில அபகரிப்பு மோசடி வாடிக்கையாகி விட்டது. ஆனால், ஜெயா அரசோ, எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்கவும், அரசியல் பிரச்சாரத்துக்காகவும் நில அபகரிப்பு மோசடி வழக்குகளை அரசியல் நோக்கத்துக்குப் பயன்படுத்துவதற்கென்றே தனிப் போலீசு பிரிவை உருவாக்கி ஏவி விட்டது.

திருக்கோவிலூர் அருகே போலீசாரின் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி மருத்துவப் பரிசோதனைக்குக் கொண்டுவரப்படும் நான்கு பழங்குடியினப் பெண்கள்.



எதிர்க்கட்சிப் பிரமுகர்களைக் கைது செய்து நாளேடுகளில் ''விளம்பரம்'' செய்வது என்ற நோக்கத்திற்கு மேல் இந்த வழக்குகள் நகராத போது, குண்டர்கள் சட்டத்தை ஏவியது, ஜெயா அரசு. ஆனால், மு.க. அழகிரியின் அல்லக்கைகளான பொட்டு சுரேஷ், எஸ்.ஆர்.கோபி, அட்டாக் பாண்டி, மின்னல் கொடி, ஒச்சு பாலு, வி.கே. குருசாமி மற்றும் பூண்டி கலைவாணன்,



படிப்பகம்

> **நாலாந்தர நடிகைக்குரிய தகுதிகூட இல்லாத ஜெயலலிதா, எம்.ஜி.ஆரின் தயவால் முன்னணி நாயகியாகி விட்டதைப் போலவே, அரசியலிலும் அதிகார வர்க்கத்தினர், வல்லுநர்கள், நிபுணர்கள் தயாரித்துக் கொடுக்கும் உரைகள், அறிக்கைகள், திட்டங்களை வாசித்தே ‘‘புரட்சித் தலைவி’’யாகவும் திகழ்கிறார். அந்த வகையில்தான் உலகவங்கியின் தயாரிப்பான ‘‘தொலைநோக்குத்திட்டம்-2023’’ ஜெயாவால் வெளியிடப்பட்டுள்ளது.**

குடமுருட்டி சேகர், சென்னை ப.ரங்கநாதன் என்று குண்டர் சட்டம் பாய்ந்த அனைவரும் அநேகமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் ஜெயலலிதா அரசும் போலீசும் சட்டப்படி செயல்படவில்லை; அரசியல் உள்நோக்கப்படிதான் செயல்படுகின்றனர் என்று மீண்டும் மீண்டும் தம்மைத்தாமே அம்பலப்படுத்திக் கொண்டனர்.

தமிழக அரசியல் வரலாற்றில் மிக மோசமான சந்தேகப் பிராணிகள், எம்.ஜி.ஆரும், அவரது அரசியல் வாரிசான ஜெயலலிதாவும்தான். இவர்கள் முண்டு தமது இடுப்பில் இருப்பதைக்கூட நம்பாத பேர்வழிகள் என்பதற்கு மிகச் சிறந்த ஆதாரம் போலீசு உளவுத்துறையை, மற்றெவற்றை விடவும் தம் அமைச்சரவை மற்றும் கட்சிப் பிரமுகர்களைக் கண்காணிப்பதற்குப் பயன்படுத்துவதைக் கூறலாம். அதனாலேயே அமைச்சர்களும் அதிகாரிகளும் பந்தாடப்படுகின்றனர். குறிப்பாக, பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில், ஜெயலலிதா-சசி சொத்துக் குவிப்பு வழக்குக் குற்றவாளிகள் நேரடி வாக்குமூலம் அளிக்கும் நிலையை எட்டியுள்ளதால், ஜெயலலிதா தனக்குச் சாதகமாக, தனது பங்காளிகள் வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்பதற்காக போலீசையும் உளவுத்துறையையும் பயன்படுத்திக் கொள்கிறார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஜெயலலிதா தனது கட்சியில் சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். சசிகலாவையும் அவரது நெருங்கிய 13 உறவினர்களையும் திடீரென கட்சியில் இருந்து நீக்கம் செய்தார். இந்நடவடிக்கைக்குக் காரணம், அவர்களின் கட்சி விரோதச் செயல்கள் என்ற ஒருவரிச் செய்திக்கு மேல் எதுவும் கூறவில்லை; சில வாரங்களுக்குப் பின் நடந்த கட்சிப் பொதுக்குழுவில், தனக்குத் துரோகமிழைப்பவர்களுக்கு இதுதான் கதி; அவர்கள் மன்னிக்கப்படவே மாட்டார்கள் என்று எச்சரித்தார். ஜெயலலிதாவின் பாதந்தாங்கிகளான பார்ப்பனச் செய்தி ஊடகங்கள் இது பற்றி பலவாறான கிசுகிசு, வதந்திகளைப் பரப்பின. சசி கும்பல் அளவுக்கு மீறி, ஜெயலலிதாவுக்குத் தெரியாமல், ஜெயாவுக்கு எதிராகவே அரசியல் தலையீடுகளிலும் துரோகங்களிலும், நஞ்சு வைத்து ஜெயாவைக் கொல்லவும், அதிகாரத்தைக் கைப்பற்றவும் பல சதிவேலைகளில் ஈடுபட்டதாக கிசுகிசுக்களைப் பரப்பின.

ஜெயா ஆட்சியில் நடக்கும் எல்லா இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகளுக்கும் சசி கும்பல்தான் காரணம் என்றும், முப்பதாண்டு கால நட்பையும், பாசத்தையும் துணிந்து தியாகம் செய்து அவர்களை வெளியேற்றி விட்டதாகவும், இனி தூய்மையான, திறமையான நிர்வாகம் நடக்கும் என்றும் பார்ப்பன மற்றும் ஜெயாவின் எடுபிடி ஊடகங்களும் புளுகித் தள்ளின. இதை மூன்று மாதங்கள், பொதுமக்களை ஏய்க்க ஒரு பொதுப் பிரச்சாரம் மூலம் அறுவடை செய்து கொண்டபிறகு, ஜெயா-சசி கும்பல் நாடகத்தை முடித்துக் கொண்டது. சொத்துக் குவிப்பு வழக்கில் தவறிக்கூட ஜெயலலிதாவுக்குப் பாதகமாக சசிகலா வாக்குமூலம் சொல்லிவிடக் கூடாது என்பதற்காக, அவரது நெருங்கிய உறவினர்கள் மீது வழக்குகள், கைது, சிறை என்ற உருட்டல் மிரட்டல் ஒருபுறம் நடந்தாலும், மறுபுறம் ஜெயாவின் அரசியல் வசனகர்த்தாக்கள் எழுதிக் கொடுத்த சசியின் தன்னிலை விளக்கத்தை ஏற்று, ஊடல் காட்சிகள் முடித்துக் கொள்ளப்பட்டு, இணைபிரியா தோழிகள் மீண்டும் ஐக்கியமாயினர்.

ஜெயா-சசியின் ஊடல்-கூடல் நாடகங்கள் முழுக்கவும் போலீசு-உளவுத்துறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சசிகலா உறவினர்கள் மீதான நடவடிக்கைகளில் போலீசும், சொத்துக் குவிப்பு வழக்குக்காக சசிகலாவின் தயாரிப்பு, பாதுகாப்பு, விமானப் போக்குவரத்து, நட்சத்திர விடுதி வசதிகள், ஜெயலலிதாவிடம் சமர்ப்பிக்க உளவு அறிக்கைகள் முதலியவற்றுக்கு உளவுத்துறையும் ஈடுபடுத்தப்பட்டன. அதேசமயம், சசிகலாவின் உறவினர்களிடமிருந்து இலஞ்ச-ஊழல் அதிகாரமுறைகேடுகள் மூலம் குவிக்கப்பட்ட சொத்துக்கள், செல்வங்களைக் கைப்பற்றுவது, கட்சிக்காரர்கள் அவர்களுடன் கொண்டுள்ள இரகசிய உறவுகளைக் கண்காணித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவை எதுவும் நாட்டின் முதன்மையான செய்தி ஊடகங்களால் கண்டுகொள்ளப்படாத அதேசமயம், ஜெயலலிதாவின் திறமையும், தியாகமும் போற்றப்பட்டன. சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயா அப்பாவி என்றும் கருணாநிதியின் அரசியல் பழிவாங்கலே காரணம் என்றும் குற்றங்களுக்கெல்லாம் தாமே பொறுப்பு என்றும் சசிகலா கொடுத்த வாக்குமூலம் சட்டப்படி மதிப்பில்லாதது என்றாலும், ஆளுங்கும்பலின் அரசியல் பிரச்சாரத்துக்கு நன்றாகவே பயன்படுத்தப்பட்டது.

‘‘தி.மு.க.காரர்களின் இயலாமை, திறமையின்மை, அக்கறையின்மை, லட்சியமின்மை இவையெல்லாம் சேர்ந்து தமிழகத்தைக் குட்டிச் சுவராக்கி இருக்கிறது. இதன் விளைவுதான் கடுமையான மின்வெட்டு. இதிலிருந்து தமிழகத்தை மீட்டெடுத்து சிறப்பான நிலைக்குக் கொண்டு செல்லும் ஆற்றலும் தகுதியும் முதல்வருக்கு

www.padippakam.com

உண்டு. எனவே, ஒரு நல்ல நிலையைத் தமிழகம் விரைவில் அடையும்'' என்று ஜெயாவின் அரசியல் சகுனி ''சோ'' புளுகித் தள்ளுகிறார்.

கருணாநிதி ஆட்சியிலும் அதன்பிறகு எட்டு மாதங்களாகவும் நீடித்திருந்த மின் உற்பத்தி அளவைப் பராமரிக்கத் தவறி, மின் வெட்டு 2,3 மடங்கு அதிகரிக்குமளவு சீர்கேடடையச் செய்தது, ஜெயாவின் நிர்வாகமே. 2011-12-ஆம் ஆண்டுகளில் 3000 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தியைத் தரும் அளவிலான மின் திட்டங்களை முந்தைய ஆட்சியில் வகுத்து செயல்பட வைத்தும் அவற்றையும் நிறைவு செய்யத் தவறியதும் தேவையான நிதி திரட்டி மத்திய, தனியார் துறையிடமிருந்து மின் வழங்கலைப் பெறத் தவறியதும் ஜெயாவின் நிர்வாகமே. கடும் மின்கட்டண உயர்வைத் திணிக்கவும், கூடங்குளம் அணுஉலையைத் திறக்கச் சாதகமான சூழலை உருவாக்கவும் இவ்வாறு மின்உற்பத்தி சீரழிவதற்கு வேண்டுமென்றே விடப்பட்டது. தமிழ் நாட்டின் தற்போதைய மின் பற்றாக்குறை 3000 மெகாவாட்; ஆனால், 500 மெகாவாட் கூட உற்பத்தி செய்யாது, அதிலும் மொத்த உற்பத்தியில் கால் பங்கு கூட தமிழகத்திற்கு வழங்கப்படமாட்டாது என்றாலும் கூடங்குளம் அணுஉலை திறப்பால் தமிழக மின்வெட்டு - பற்றாக்குறை பிரச்சினை தீரும் என்று பொய்ப்பிரச்சாரம் அனைத்துக் கட்சி, அனைத்து ஊடகத் துணையுடன் நடத்தப்பட்டது.



பல இலட்சம் கோடி அரசுப் பணத்தை வாரியிறைத்து, உள்நாட்டு - வெளிநாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களின் கொள்ளைக்காக உலக வங்கி அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட ''2023 தொலைநோக்குத் திட்ட''த்தை வெளியிடும் 'நிர்வாகச் சூரப்புலி' ஜெயலலிதா.

நாலாந்தர நடிகைக்குரிய தகுதி கூட இல்லாத ஜெயலலிதா, எம்.ஜி.ஆரின் தயவால் முன்னணி நாயகியாகி விட்டதைப் போலவே, அரசியலிலும் அதிகார வர்க்கத்தினர், வல்லுநர்கள், நிபுணர்கள் தயாரித்துக் கொடுக்கும் உரைகள், அறிக்கைகள், திட்டங்களை வாசித்தே ''புரட்சித் தலைவி''யாகவும் திகழ்கிறார். அந்தவகையில் இந்த ஆண்டு சட்டப்பேரவையின் வரவு-செலவுக் கூட்டத்தொடருக்கு ஓரிரு நாட்களுக்கு முன்பாக 2023 ஆண்டுக்கான ''தொலைநோக்குத் திட்டம்'' என்ற உலக வங்கி அதிகாரிகளின் தயாரிப்பு ஒன்றை வழக்கமான ''ஜெயா புகழ்பாடி பூங்கொத்து வழங்கும்'' விழாவில் வெளியிட்டார். அடுத்தநாளே, போலீசுக்கு பல நவீனமய, நலத்திட்ட நிதி ஒதுக்கீடுகள், பதவிகள் அறிவித்தார். கூடவே, கல்வியில் கணினிமயமாக்கம், புதிய பேருந்துகள் வருமென அறிவித்தார். வரவு-செலவுத் திட்ட சட்டப்பேரவைக் கூட்டத்திற்கு வெளியே திட்ட அறிவிப்புகள் செய்வதை, கருணாநிதியும், ஸ்டாலினும் கண்டித்த மறுநாளே வழக்கம்போலத் திடீர் பல்டி அடித்தார்; இந்த அறிவிப்புகள் எதுவும் புதிதில்லை; செய்தி ஏடுகள் தவறாக எழுதிவிட்டன என்று குப்புறவிழுந்து தனது அரசியல் ''திறமை''யை வெளிப்படுத்தினார். ஆனால், ஜெயாவின் துதிபாடிகளான இந்து, தினமணி, தினமலர் ஆகிய பார்ப்பன ஏடுகளோ, ஜெயாவின் ''திட்ட அறிவிப்புகள்'' என்ற சாதனையாகத்தான் செய்தி வெளியிட்டிருந்தன. மு.க. குடும்பத்தின் அற்பமானதொரு அரட்டலுக்கே மிரண்டுபோய் விட்ட ஜெயாவின் 'துணிச்சலை' என்ன சொல்ல!

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி எதிர்பார்ப்பை விட 20 சதவீதம் கூடுதலாக, அதாவது அடுத்த 11 ஆண்டுகளில் 11 சதவீதம் மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி எதிர்பார்ப்பு இருக்கும் என்று ஜெயலலிதாவின் 2023-ஆம் ஆண்டுக்கான தொலைநோக்குத் திட்டம் அறிவிக்கிறது. இந்தக் காலகட்டத்தில் தனிநபர் வருமானம் 6 மடங்கு உயரும்; குடிசைப் பகுதிகளும் ஓலைக் குடிசைகளும் இருக்காது என்று நம்பச் சொல்கிறது.

ஆனால், இந்தத் தொலைநோக்குத் திட்டம் என்பது, உள்நாட்டு, வெளிநாட்டு தரகு கார்ப்பரேட் மற்றும் பன்னாட்டுத் தொழில் கழகங்களின் நலன்களுக்காக, பல இலட்சம் கோடி ரூபாய் அரசுப் பணத்தை வாரி இறைப்பதுதான். அவற்றின் தொழில் முதலீடு மற்றும் முன்னேற்றத்துக்கான அடிப்படைக் கட்டுமானங்களை அமைத்துக் கொடுப்பது, கூட்டு விவசாயம், ஒப்பந்த விவசாயம் என்று விவசாயத்தை முழுவதும் கார்ப்பரேட் நிறுவனச் சேவைக்கானதாக மாற்றுவதுதான் இந்தத் ''தொலைநோக்குத் திட்டம்''. இனிவரும் காலத்தில் ஜெயலலிதா தனது புதிய ''உடன்கட்டை'' நரேந்திர மோடியின் அடியொற்றி நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகமிழைக்கும் பாதையில் துணிந்து நடைபோடுவார் என்பதை இந்தத் தொலைநோக்குத் திட்டம் தெட்டத் தெளிவாக்குகிறது.

(முற்றும்)

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# “மின்சாரம் தனியார்மயமானதே தமிழகம் இருள்மயமானதற்குக் காரணம்!”

## – தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் தொடர்பிரச்சார இயக்கம்.

பேருந்துக் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு என அடுத்தடுத்து மக்கள் மீது தாக்குதலைத் தொடுத்துவிட்டு, போதாக் குறைக்கு தற்பொழுது மின்கட்டண உயர்வு என்ற இடியையும் மக்கள் மீது இறக்கியிருக் கிறது, பாசிச ஜெயா அரசு.



திருச்சியில்...

இந்த மின்கட்டண உயர்வென்பது, டாடா, அம்பானி, அடானி, அப்போலோ போன்ற கார்ப்பரேட் மின் உற்பத்தி நிறு வனங்கள் மின்சாரத்துக்கு என்ன விலை கேட்கிறார்களோ, அதனை மக்களிட மிருந்து வசூலித்துக் கொடுப்பதற்கான ஏற் பாடே என்பதை விளக்கியும், ‘‘மின்சாரம் தனியார்மயமானதே, தமிழகம் இருள்மய மானதற்குக் காரணம். மின்வெட்டில்லா தமிழகம் வேண்டும்; ஆபத்தான அணு உலை வேண்டாம்’’ என்ற முழக்கத்தினை முன்வைத்தும், ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தொடர் பிரச்சார இயக் கங்களை நடத்தி வருகின்றன.

**சென்னையில்,** 04.04.2012 அன்று ம.க.இ.க; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. மற்றும் ம.உ.பா.மையம் ஆகிய அமைப்புகளின் சார்பில் சைதை பனகல் மாளிகை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. போக்குவரத்து நெரிசல் மிகுந்த பிரதான சாலையை மறித்தும், ஜெ-வின் கொடும்பாவியை எரித்தும் தோழர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

**திருச்சியில்,** 10.04.2012 அன்று, ம.க.இ.க; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் சேர்ந்து மேல சிந்தாமணி அண்ணாசிலை அருகில் கண்டன ஆர்ப்பாட் டத்தை நடத்தின. ஆர்ப்பாட்டத்தில், மக்கள் மீது தொடுக் கப்பட்டிருக்கும் மறுகாலனியத் தாக்குதலை அம்பலப் படுத்தி முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர்.

**திருச்சி துவாக்குடியில்,** 17.04.2012 அன்று பு.ஜ.தொ.மு. (தமிழ்நாடு) சார்பில் கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாத புதிய ஜனநாயகம் இதழில் மின்சாரம் தனி யார்மயமாக்கம் குறித்து வெளியான கட்டுரைகளை விளக்கி அறைக்கூட்டமொன்றை நடத்தினர்.



ஓசூரில்...

**ஓசூரில்** 09.04.2012 அன்று பு.ஜ.தொ.மு. அமைப்பின் சார்பாக, தொழிலாளர்கள் நிறைந்த பகுதி யான தர்கா பேருந்து நிறுத்தம் அருகே திரளான தொழிலாளர்களது பங்கேற்புடன் தெருமுனைக் கூட்டத்தை நடத்தினர்.

நீலமலை அனைத்துத் தொழி லாளர் சங்கம் சார்பில் 15.04.2012 அன்று **கோத்தகிரியில்** பொதுக் கூட்டம் மற்றும் ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநி கழ்ச்சி நடைபெற்றது. பொதுக் கூட்டத்தையும் இப்பகுதியெங்கும் நடத்திய தோழர்களது பிரச்



படிப்பகம்

www.padippakam.com

சாரத்தையும் பகுதிவாழ் உழைக்கும் மக்கள் வரவேற்று ஆதரவளித்தனர்.

கரூரில், 09.04.2012 அன்று பு.மா.இ.மு.வின் சார்பில் உழவர் சந்தை அருகில், ம.க.இ.க. மையக் கலைக்குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சியுடன் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சிறுதொழில், பட்டறை, விசைத்தறிகள் நிறைந்த இப்பகுதியில், மின்சாரம் தனியார்மயமானதே மின்வெட்டிற்கான காரணம் என்பதை விளக்கி, இத்தனியார்மயத்தை ஒழித்துகட்ட நாம் ஓரணி சேர வேண்டுமென்று இப்பொதுக் கூட்டத்தின் வாயிலாக சிறப்புரையாற்றிய தோழர்கள் அறைகூவல் விடுத்தனர்.

கடலூரில், 14.04.2012 அன்று பு.மா.இ.மு.வின் சார்பில் டவுன் ஹாலில் கருத்தரங்கம் நடைபெற்றது. பு.ஜ.தொ.மு. வின் மாநிலப் பொதுச்செயலர் தோழர் சுப.தங்கராசு. சிறப்புரையாற்றினார்,

தருமபுரியில், 13.04.2012 அன்று வி.வி.மு. சார்பில் இராஜகோபால் பூங்கா அருகில் பொதுக்கூட்டம் மற்றும் ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடைபெற்றது. போலீசின் ஒருமாத கால இழுத்தடிப்பால் நீதிமன்ற முறையீட்டுக்குப் பின்னரே இப்பொதுக்கூட்ட அனுமதியைப் பெற முடிந்தது. மின்வெட்டு, மின்சாரம் தனியார்மயமாக்கத்தின் விளைவுகளை பு.மா.இ.மு.வின் மாநில அமைப்பாளர் தோழர் த.கணேசன் அவர்களும்; முல்லைப்பெரியாறு அணையை மீட்க நாம் செய்ய வேண்டிய பணிகள் குறித்து பு.ஜ.தொ.மு.வைச் சேர்ந்த தோழர் நாகராசு அவர்களும் சிறப்புரையாற்றினர்.

இந்த ஊர்கள் தவிர, இப்புரட்சிகர அமைப்புகள் செயல்படும் பகுதிகள் அனைத்திலும் பல்வேறு வடிவங்களில் பிரச்சார இயக்கத்தை தொடர்ந்து மேற்கொண்டு, மறுகாலனியாக்கத் தாக்குதலுக்கு எதிராகப் போராட மக்களை அணிதிரட்டி வருகின்றன.

– பு.ஜ.செய்தியாளர்கள்

## கூடங்குளம் போராட்டம்:

# அனுபவங்களும் படிப்பினைகளும்

கூடங்குளம் அணு உலைகளில், அவற்றின் எரிபொருளாகிய யுரேனியத்தை நிரப்பி இயங்கச் செய்வதற்கும், அணு மின் உற்பத்தியைத் தொடங்குவதற்கும் இருந்த தடைகள் அகற்றப்பட்டுள்ளன. ''நாறவாய்'' நாராயணசாமிகள் கூறுவதைப் போல உடனடியாக இல்லாவிட்டாலும், சில மாதங்களில் அணு மின் உற்பத்தி தொடங்கிவிடும்.

இது, அணுசக்தி எதிர்ப்பு மக்கள் இயக்கம் மற்றும் அதன் தலைமையிலான இடிந்தகரை - கூடங்குளம் வட்டாரக் கிராமங்களின் அணு மின் நிலையத்துக்கு எதிரான மக்கள் போராட்டங்களுக்கு நிச்சயமாகப் பின்னடைவுதான். ஆனால், இப்பின்னடைவு மீளமுடியாததோ, நிரந்தரமானதோ அல்ல. இப்பின்னடைவிலிருந்து மீண்டு, போராட்டங்களைச் சரியான திசையில் முன்னெடுப்பதற்கு முதன்மையான கடமை ஒன்றிருக்கிறது. இப்போராட்டங்களை வழிநடத்திய முன்னணியாளர்கள், அவற்றிலிருந்து சரியான அனுபவங்களையும் படிப்பினைகளையும் பெற்றாக வேண்டும்.

முதலாவதாக, போராட்டங்களுக்கு அணிதிரண்ட மக்கள் மீது, அவர்களை வழிநடத்திய தலைமை மற்றும் முன்னணியாளர்கள் முழு நம்பிக்கை வைக்கவில்லை. அம்மக்களைப் பற்றிய குறை மதிப்பீடு கொண்டிருந்தார்கள். இது மத்தியதர அறிவுஜீவி வர்க்கத்தினர் உழைக்கும் மக்கள் மீது வழக்கமாகக் கொண்டிருக்கும் கீழானதொரு கண்ணோட்டம்தான். ''என்னதான் எடுத்துச் சொன்னாலும் மக்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். மேலும்,

கூடங்குளம் அணு உலையைத் திறக்க ஜெயா கும்பல் சம்மதித்ததையடுத்து, அப்பகுதியில் குவிக்கப்பட்ட ஆயுதமேந்திய கமாண்டோ படை.





படிப்பகம்

www.padippakam.com

எல்லா உண்மைகளையும் மக்களிடம் சொல்லக்கூடாது; சொல்லவேண்டிய அவசியம் இல்லை; சொன்னால் பயந்து விடுவார்கள்; போராடத் துணியமாட்டார்கள்; போராட முன் வரமாட்டார்கள்; பின்வாங்கி விடுவார் கள்'' என்று அறிவுஜீவிகள் கருதுகிறார்கள்.

உண்மையில் இது அறிவுஜீவிகளிடமே உள்ள குறைபாடு; இருப்பதையும் இழந்துவிடுவோம் என்ற அச்சம்தான் இதற்குக் காரணம். உண்மையில் உழைக்கும் மக்கள் பாட்டாளிகள் மட்டுமல்ல; வரலாற்றுப் படைப்பாளிகள்.

கூடங்குளம் அணு உலைகளையும், அணு மின்நிலையத்தையும் இழுத்து மூடவேண்டும், அவை வரவிடாமல் செய்ய வேண்டுமானால், எத்தகைய எதிரி களை எதிர்த்துப் போராடி முறியடிக்க வேண்டும் என்ற



கூடங்குளம் அணு உலையில் மீண்டும் பணிகள் தொடங்கிய நிலையில், அணு உலையில் வெற்று எரிபொருள் பொருத்தப்படுவதை மேற்பார்வையிடும் நிபுணர்கள்.

உண்மை அங்கு போராடும் மக்களிடம் சொல்லப்படவே இல்லை. கூடங்குளம் திட்டம், ஆட்சியாளர்கள், அமெரிக்க-ரஷ்யா முதலிய மேலைநாடுகள், இந்திய ஆளும் வர்க்கங்கள் ஆகியோருக்கு எவ்வளவு முக்கிய மானது; என்ன விலை கொடுத்தாவது, என்ன காரியம் செய்தாவது கூடங்குளம் திட்டத்தை நிறைவேற்றியே தீர வேண்டும் என்பதில் எவ்வளவு மூர்க்கமாகவும் உறுதி யாகவும் அவர்கள் இருக்கிறார்கள் என்கிற விவரம் போராடும் மக்களைச் சென்றடையவே இல்லை.

கூடங்குளம் திட்டத்தைத் தொடர்ந்து அதுபோன்ற 60-க்கும் மேற்பட்ட அணு மின் திட்டங்கள், அவற்றுக் கான அணுஉலைகள், 70 இலட்சம் கோடி ரூபாய் முத லீட்டில் நிறுவப்பட அணிவகுத்து நிற்கின்றன. உற்பத்தி செய்து குவிக்கப்பட்டுள்ள பேரழிவு ஆயுதங்களை விற்றுத் தீரவேண்டும்; அப்போதுதான் மேலை நாடுகளின் ஆயுதத் தொழிற்சாலைகளும் இயந்திரங்களும், மூல தனமும் இடைவெளியின்றிச் சுழன்று, கொழுத்த இலாப மீட்ட முடியும்; அதற்காக கோடிக்கணக்கான மக்கள் செத்து மடிந்தாலும் கவலையில்லை என ஏகபோக ஆயுத உற்பத்தியாளர்கள் வெறிபிடித்து அலைவதைப் போல, மேலைநாடுகளில் காலாவதியாகிப் போன தொழில் நுட்பம், துருப்பிடித்து ஓட்டை உடைசலாகிப் போன நாச கார அணுசக்தி உலைகளை ''நம்'' தலையிலே கட்டிக் ''காசா''க்கிக் கொள்ளத் துடிக்கிறார்கள். அவர்கள் அடிக்கும் கொள்ளையில் பங்கு போட்டு ஆதாயம் அடை வதற்காக, தனியார்துறையில் பல அணு மின் நிலையங் களை நிறுவக் காத்திருக்கிறார்கள், டாடா, அம்பானி, அதானி முதலிய தேசங்கடந்த இந்தியத் தரகு முத லாளிகள். பேரழிவு ஆயுத வியாபாரிகளைப் போல, இவர் களின் கொள்ளை இலாபவெறிக்கு எவ்வளவு கோடி மக்களையும் அணு உலை களுக்குக் காவு கொடுக் கவும் தயாராய் உள்ளனர், இந்திய ஆட்சியாளர்கள்.

அடுத்து, எட்டு மாதங்கள், ஒரு சிறு அளவுகூடச் சட்டவிரோத மான வன்முறையில் கூடங் குளம் அணு மின் திட்ட எதிர்ப்புப் போராட்டக்காரர் கள் ஈடுபடவில்லை. பால் குடம் எடுப்பதும், பட்டினி கிடப்பதும் என்ற அமைதி வழியிலேயே, காந்திய வழி யிலேயே போராடி வருவ தாகத் திரும்பத் திரும்ப உதயக்குமார் முதலியவர் கள் மன்றாடினர். ஆனால், ''மூட்டைப் பூச்சிகளை நசுக்குவதற்குப் பீரங்கி வண்டிகளின் அணி வகுப்பா?'' என்ற தோர ணையில், ''மவுண்ட்ரோடு மகாவிஷ்ணு!'' என்று பெயர் பெற்ற ''தி இந்து'' நாளேடே வியந்து தலையங்கம் தீட் டியது; அந்த அளவு கூடங்குளம் அணுஉலைகளையும், அணுமின் நிலையத்தையும் திறந்து மின்உற்பத்தியில் ஈடு படுவதற்கு எந்த எல்லைவரையும் போவது என்று ஆட்சி யாளர்கள் வலிந்து நிற்பதைக் கண்டு போராடிய மக்கள் அதிர்ச்சியுற்றனர்.

அதிரடிப்படை உட்பட ஆயுதந்தாங்கிய மத்திய, மாநிலப் போலீசுப் படைகள், உளவுப் பிரிவுகள் ஆகிய வற்றின் 7,000 படையினர் குவித்துச் சுற்றி வளைக்கப்பட் டனர். 144 உத்திரவு பிறப்பிக்கப்பட்டு, குடிநீர், மின்சாரம், பால் முதலிய உணவுப் பொருட்கள் வழங்கீடு, போக்கு வரத்தைத் தடை செய்து முற்றுகையிடப்பட்டது. அந்நிய நாட்டு மக்கள் மீது பாய்ந்து குதறுவதற்குத் தயார் நிலை யில் இருப்பதைப் போல முப்படைகளும் குவிக்கப்பட்



படிப்பகம்

www.padippakam.com

டன. அந்நிய நாடுகளிடம் நிதி பெற்று, அந்நிய நாடுகளின் சதிக்கு உடன்பட்டு கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு எதிராக மக்கள் போராடுவதாக அவதூறும் விசாரணையும் நடந்தது. போதாதென்று ''நக்சலைட்டு பீதி'' பரப்பப்பட்டு, கைது நடவடிக்கைகள் ஏவிவிடப்பட்டன.

ஏற்கெனவே தலைக்குமேல் தொங்கும் வாளாக போராட்ட முன்னணியாளர்கள் மீது தேசத்துரோகம் மற்றும் அரசு மீது போர் தொடுத்தல், அரசுக்கு எதிராகச் சதி உட்பட நூற்றுக்கணக்கான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்போது அவற்றின் கீழ் பலரைக் கைது செய்து பணயக் கைதிகளாக்கி, காலவரையற்ற உண்ணா நிலைப் போராட்டத்தை விலக்கிக் கொள்ளும்படி ஆட்சியாளர்கள் நிர்பந்தித்தனர். மும்பையிலுள்ள கிறித்துவத் திருச்சபை கார்டினல் மூலம் பேரங்கள் நடத்தி, நிர்பந்தங்கள் செய்து, மதுரை மண்டல ஆயர் ஃபெர்ணான்டோவைத் தூது அனுப்பி காரியத்தைக் கச்சிதமாக முடித்தனர், ஆட்சியாளர்கள்.

இவற்றையெல்லாம் போராடும் மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால், போராட்ட முன்னணியாளர்கள் எதிர்பார்த்திருக்க வேண்டும்; மக்களை எச்சரித்திருக்கவும் வேண்டும். ''நாமென்ன மாவோயிசத் தீவிரவாதிகளைப் போலத் துப்பாக்கி ஏந்தியா போராடுகிறோம். காந்திய வழியில் அமைதியான போராட்டங்களைத் தானே நடத்துகிறோம். ஆட்சியாளர்களும் அவ்வாறுதான் இருப்பார்கள்'' என்று எண்ணி ஏமாந்து போனார்கள், போராடிய மக்கள்.

ஆனால், நாட்டை மீண்டும் காலனியாக்கித் தருவதற்குத் தவணை முறையில் கையூட்டுப் பெறுவதென்று பேரங்கள் பேசி முடித்து விட்டார்கள், ஆட்சியாளர்களும் ஆளும் வர்க்கங்களும். ''எங்கள் வனங்களை அழிக்காதீர்கள், எங்கள் இயற்கை வளங்களை வேட்டையாடாதீர்கள், எங்கள் மண்ணைப் பிடுங்கிக் கொண்டு, எங்களை வெளியே துரத்தாதீர்கள்'' என்று நிராயுதபாணிகளாக நின்று முழக்கமிடும் ஒடிசா பழங்குடி மக்களுக்குத் துப்பாக்கிக் குண்டுகளை பரிசாக வழங்குகிறார்கள் ஆட்சியாளர்கள். எல்லாம் எதற்காக?

வேதாந்தா மற்றும் போஸ்கோ போன்ற கார்ப்பரேட் நிறுவனங்கள் இரும்பு, செம்பு, பித்தளை, அலுமினியம் முதலிய தாதுப்பொருட்களை வரைமுறையின்றிக் கொள்ளையடித்து, பல இலட்சம் கோடி ரூபாய் இலாப மீட்டுவதற்குத்தான். அதேபோன்றுதான் உள்நாட்டு, வெளிநாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மலிவு விலையில் தடையற்ற மின்சாரம் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக நாடு முழுவதும் 60-க்கும் மேற்பட்ட அணுமின் நிலையங்களை நிறுவிட ஆட்சியாளர்கள் மக்களின் வாழ்வாதாரங்களை மட்டுமல்ல, மக்கள் உயிர்களையும் பலியிடத் துடிக்கிறார்கள்.

இறுதியாக, இவ்வாறான கொடூரமான எதிரிகளை எதிர்த்து முறியடிக்க வேண்டுமானால் நாடு முழுவதும் பரந்துபட்ட மக்களின் ஆதரவைப் போராடும் மக்கள் பெற்றிருக்க வேண்டும். குறைந்தபட்சம் சிங்கூர், நந்திகிராமம் போராட்டங்களுக்கு திரண்டதைப்போன்று பரவலான மக்கள் ஆதரவைத் திரட்டியிருக்கவேண்டும். ஆனால், கூடங்குளம் - இடிந்தகரை வட்டாரத்திலிருந்து விலகிப் போகப் போக அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்திற்கு எதிர்ப்பு கடுமையாகிக் கொண்டே போகிறது. ஓரிரு சிறு கட்சிகள், சிறு ஏடுகள் தவிர அனைத்து ஓட்டுக் கட்சிகளும் செய்தி ஊடகங்களும் எதிர்த்தரப்பில் நிற்கின்றனர். அது மட்டுமல்ல, பரந்துபட்ட உழைக்கும் மக்களும் கூட அணு மின் சக்திக்கு ஆதரவான பொய்ப் பிரச்சாரத்துக்குப் பலியாகி எதிர் அணியாக நிற்கிறார்கள். கடலூர், தூத்துக்குடி, கொச்சி, சென்னை-எண்ணூர் துறைமுகங்களில் இராட்சத பெட்டகங்களை இறக்குமதி செய்து, உள்நாட்டுப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் தொழிலாளர்களுக்குத் தெரியாது, அவற்றின் உள்ளே அடைக்கப்பட்டுள்ள பொருட்கள் நமது நாட்டின் அத்தியாவசியத் தேவைகள் அல்ல. நமது மக்களின் உயிர்களைப் பலிவாங்கும் மருத்துவக் கழிவுகள், இரசாயனக் கழிவுகள், அணுக் கழிவுகள் என்று.

இவ்வாறான உண்மைகளை உழைக்கும் மக்கள் புரிந்து கொண்டு ஆட்சியாளர்களுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் எதிராக நிச்சயம் எழுச்சியுறுவார்கள். கூடங்குளத்திலிருந்து வெகுதொலைவிலுள்ள சென்னை மக்களிடம் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி போன்ற புரட்சிகர இயக்கங்கள் அணு சக்தி - அணு உலை எதிர்ப்பு இயக்கத்தை எடுத்துச் சென்றபோது கூட முதலில் கடும் எதிர்ப்பையே கண்டார்கள். ஆனால், அவர்கள் பிரச்சார முயற்சியில் அழுந்தி நின்று இயக்கத்தைத் தொடர்ந்த போது, ஆதரவு தருபவர்களாக மக்கள் மாறினர்.

இதற்கு மாறாக கூடங்குளம் போராட்ட முன்னணியாளர்கள் ஜெயலலிதா போன்ற பிழைப்புவாதக் கழிசடைகளின் மீது நம்பிக்கை வைக்கும்படி சொன்னார்கள். இப்போது அவர்கள் நம்ப வைத்து வஞ்சகம் செய்து விட்டதாகப் புலம்புகிறார்கள். ஆக, மக்கள், மக்கள் மட்டுமே நம்பிக்கைக்குரிய மகத்தான சக்தி என்ற கொள்கையில் ஊன்றி நிற்கும்போதுதான் இலட்சியத்தை எட்ட முடியும் என்பது கூடங்குளம் போராட்டங்கள் நமக்குக் கற்றுத் தரும் படிப்பினை.

● மாணிக்கவாசகம்

## அறிவிப்பு

**''கறுப்புப் பணம்: கறுப்புக்கும் வெள்ளைக்கும் இடையில்...'' என்ற கட்டுரையின் தொடர்ச்சி தவிர்க்க வியலாத காரணங்களினால் இவ்விதழில் இடம்பெறவில்லை என தெரிவித்துக் கொள்கிறோம்.**

**- ஆசிரியர் குழு.**



படிப்பகம்

www.padippakam.com

# “தனியார்மயக் கொள்ளையைத் தடுக்க, மறுகாலனியாக்கத்தை மாய்க்க, நக்சல்பாரியே ஒரே மாற்று!”

## – புரட்சிகர அமைப்புகளின் மே தினச் சூளுரை.

இழப்பதற்கு ஏதுமற்ற, உற்பத்திக் கருவிகள் எதனையும் உடைமையாகக் கொண்டிராத, தனது உழைப்புச் சக்தியைத் தவிர விற்பதற்கு ஏதுமில்லாத பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கை திரும்பும் திசையெல்லாம் பெருகிக் கொண்டிருக்கிறது. நசிப்பிக்கப்பட்ட விவசாயத்திலிருந்தும், பறிக்கப்பட்ட காடுகளிலிருந்தும், தோற்றுச் சரிந்த கைவினைத் தொழில்களிலிருந்தும் உடைமை நீக்கம் செய்யப்பட்ட மக்கள், கிராமத்திலிருந்து நகரம் நோக்கி விசிறியடிக்கப்பட்டுத் தொழிலாளி வர்க்கமாக உருமாறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை அமைப்புரீதியாகத் திரட்ட வேண்டியிருக்கிறது.

ஏற்கெனவே அமைப்பு ரீதியாகத் திரண்டிருக்கும் தொழிலாளி வர்க்கப் பிரிவினரோ போலி கம்யூனிஸ்டுகளால் தொழிற்சங்கவாதத்தில் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். பிற ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரைக் காட்டிலும் முன்னேறிய வர்க்கம் என்ற தனது தகுதியையும், மற்றெல்லா வர்க்கங்களுக்கும் தலைமை தாங்கவேண்டிய பொறுப்பையும் இவர்கள் உணரவில்லை. பொதுத்துறைகளைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குப் பலி கொடுக்கும் நடவடிக்கைகள், இயற்கை வளங்களைத் தரகு முதலாளிகளுக்கு இரையாக்கும் சட்டங்கள், ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்துக்கு வழங்கப்படும் சலுகைகள், அவர்கள் நேரடியாகவே அரசின் அங்கமாக மாறிவரும் நிகழ்ச்சிப் போக்குகள் போன்றவை குறித்த விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதுடன், மறுகாலனியாக்க கொள்கைகளுக்கு எதிராகத் தன்னெழுச்சியாக நடக்கும் போராட்டங்களிலிருந்தும்கூட இவர்கள் விலகியே நிற்கிறார்கள்.

இன்னொருபுறம், தொழிலாளி வர்க்கத்தின் அணிவரிசையில் புதிதாகச் சேர்ந்து கொண்டிருக்கும் இளம் தொழிலாளர்கள், தங்கள் மீது திணிக்கப்படும் நவீன கொத்தடிமைத்தனத்துக்கு எதிராகப் போர்க்குணமிக்க போராட்டங்களில் இறங்குவதைக் காண்கிறோம். பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றுகின்ற, ஏற்கெனவே அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட, சலுகை பெற்ற மேட்டுக்குடி தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை முறையிலிருந்தும், சிந்தனை முறையிலிருந்தும் பெரிதும் வேறுபட்ட இந்தத் தொழிலாளர்கள், விலை உயர்வு, கட்டண உயர்வு மற்றும் தனியார்மய நடவடிக்கைகள் உள்ளிட்ட மறுகாலனிய பொருளாதாரத் தாக்குதல் ஒவ்வொன்றாலும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். போராட்டத்தின் முன்னணியில் நிற்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

மீள முடியாத நெருக்கடியில் உலக முதலாளித்துவம் மூழ்கி வரும் இன்றைய சூழலில், தொழிலாளி வர்க்கத்திற்கு அதன் வரலாற்றுப் பாத்திரத்தைப் புரிய வைப்பதும், புரட்சியின் முன்னணிப் படையாக அதனை அணிதிரட்டி நிறுத்துவதும் புரட்சியாளர்களின் கடமை.

இதனை உணர்த்தும் வகையில், ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இந்த மே தினத்தையொட்டி வெளியிட்டுள்ள பிரசுரம், பு.ஜ.வாசகர்களுக்காக, முழுமையாக வெளியிடப்படுகிறது.

–ஆசிரியர் குழு

அன்பார்ந்த உழைக்கும் மக்களே,

மே தினம் - முதலாளி வர்க்கத்திற்கு எதிராகத் தொழிலாளி வர்க்கம், தனது உரிமைகளை இரத்தம் சிந்திப் போராடி நிலைநாட்டிக் கொண்ட நாள். எட்டு மணி நேர வேலை என்ற உரிமை மட்டுமல்ல; குறைந்தபட்ச ஊதியம், பணி நிரந்தரம், இலவசக் கல்வி, இலவச மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு உரிமைகளை உலகெங்கிலும் உழைக்கும் மக்கள் போராடித்தான் பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு போராடிப் பெற்ற பல உரிமைகள் இன்று நேரடியாகப் பறிக்கப்படுவதுடன், பல மறைமுகமான வழிகளிலும் நம் மீதான சுரண்டலும் அடக்குமுறையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது பால், பேருந்து, மின் கட்டண உயர்வு என்ற பெயரில் மாதம் தோறும் ஏழை, நடுத்தரக் குடும்பம் ஒவ்வொன்றிடமிருந்தும் ரூ.2000/- க்கும் மேல் கசக்கிப் பிழிந்து கஜானாவை நிரப்பும் திட்டத்தை அறிவித்திருக்கிறார், பாசிச ஜெயலலிதா. கஜானாவை கருணாநிதி காலி செய்துவிட்டதாகவும் அதனை நிரப்புவதற்கும் போக்குவரத்துக் கழகங்கள், மின்வாரியம் போன்றவற்றை இலாபத்தில் நடத்துவதற்கும் கட்டண உயர்வு தவிர்க்க இயலாதது என்றும் நியாயப்படுத்துகிறார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே கட்டண உயர்வு என்ற பெயரில் இந்த வழிப்பறிக் கொள்ளையை கருணாநிதி நடத்தியிருக்க வேண்டுமென்றும், அவர் செய்யத் தவறிய இந்தப் புனிதக் கடமையைத் தான் நிறைவேற்றியிருப்பதாகவும் சொல்லிப் பூரிக்கிறார். இந்த வழிப்பறியை ஜெயலலிதாவின் துணிச்சல் என்றும் நிர்வாகத் திறமை என்றும் போற்றுகின்றன ஊடகங்கள்.

கஜானா காலி என்றவுடனே நாமும் அதிர்ச்சி அடைகிறோம். கட்டண உயர்வு தவிர்க்க முடியாதது என்று எண்ணிக் கொள்கிறோம். நம் வீட்டின் கஜானா காலியாகி, கடனில் தவிக்கிறோமே, அதிரடியாக நாம் நமது சம்பளத்தை உயர்த்திக் கொள்ள முடியுமா? அரசாங்கம்தான் உயர்த்திக் கொடுக்குமா? இரண்டுமில்லை. எனவே, அதிரடியாக நம் வாழ்க்கைத் தரத்தைத் தான் குறைத்துக் கொள்கிறோம். இனி குறைக்கக்கூடிய செலவு எதுவும் இல்லை என்பதால், கூடுதலாக



படிப்பகம்

www.padippakam.com

உழைக்கத் தொடங்குகிறோம். வீட்டு வேலை செய்யும் பெண்கள் கூடுதலாக இரண்டு வீடுகளில் வேலை செய்கிறார்கள். ஆட்டோ ஓட்டுநர்கள், கூலித் தொழிலாளர்கள் மேலும் சில மணி நேரம் உழைக்கிறார்கள், பலர் மனைவி, பிள்ளைகளை வேலைக்கு அனுப்புகிறார்கள், கடன்வாங்குகிறார்கள், அடைக்க முடியாதவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.



சென்னைக்கு அருகேயுள்ள சுங்குவார் சத்திரத்தில் அமைந்துள்ள நோகியாவின் துணை நிறுவனமான ஃபாக்ஸ்கான் ஆலையில் ஏற்பட்ட விஷவாயுக் கசிவினால் 250 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டதையடுத்து, ஆலையில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து தரக்கோரி, அவ்வாலைத் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

பால், தண்ணீர், உணவு, கல்வி, மருத்துவம், மின்சாரம், பேருந்து போன்றவையெல்லாம் சேவைத்துறைகள். மக்களுக்கு இச்சேவைகளை வழங்குவது அரசாங்கத்தின் கடமை. இலாபம் ஈட்டுவது இவற்றின் நோக்கமாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. இலாப மீட்டி கஜானாவை நிரப்புவதையே நோக்கமாக கொண்ட நிறுவனத்தின் பெயர் அரசாங்கமல்ல - கம்பெனி. ‘காசில்லாதவன் கடவுளே ஆனாலும் கதவை சாத்தடி’ என்று கூறுபவரின் பெயர் முதல்வர் அல்ல - முதலாளி.

கஜானாவை நிரப்பி, தொழில் தொடங்கி, வேலை வாய்ப்பைப் பெருக்கித் தமிழகத்தை முதல் மாநிலமாக்கும் உன்னதமான நோக்கத்துக்காகத்தான், இன்றைக்கு மக்களின் தாலியை அறுப்பதாக விளக்கமளிக்கிறார் அம்மா. ஆட்டுக்குத் தீனி போட்டு வளர்ப்பது கறிக்காகத்தான். கட்டணத்தை ஏற்றுவதும், பொதுத்துறை நிறுவனங்களின் இலாபத்தை உயர்த்துவதும் அவற்றைத் தனியார்மயமாக்குவதற்குத்தான். கணிசமாக இலாப மீட்டுகின்ற பொதுத்துறை வங்கிகள், காப்பீடு, பெல், என்.எல்.சி போன்ற நிறுவனங்கள் அறுத்துக் கூறு கட்டப்பட்டு, பன்னாட்டு முதலாளிகளுக்கு விற்கப்படுவதை நாம் காணவில்லையா?

இந்தக் கட்டண உயர்வால் உண்மையில் ஆதாயம் அடைபவர்கள் யார்? ஏற்கெனவே இலாபமீட்டிக் கொண்டிருந்த பேருந்து, பால்பண்ணை முதலாளிகளும் விலையை உயர்த்தி விட்டார்கள். அவர்களது இலாபம் பன்மடங்காகிவிட்டது. டாடா, அம்பானி, அடானி, அப்போலோ போன்ற கார்ப்பரேட் மின் உற்பத்தி நிறுவனங்கள் மின்சாரத்துக்கு என்ன விலை கேட்கிறார்களோ, அதனை மக்களிடமிருந்து வசூலித்துக் கொடுப்பதற்காகத்தான் மின்கட்டணம் உயர்த்தப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள போந்தவாக்கம் பகுதியில் உள்ள செங்கல் சூலையொன்றில் கொத்தடிமைகளாக வேலை பார்த்து வந்த ஒடிசாவைச் சேர்ந்த 522 தொழிலாளர்கள் மீட்கப்பட்ட நிகழ்வு. (கோப்புப் படம்)



பத்து இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் தள்ளுபடி செய்து, அடிமாட்டு விலையில் நிலக்கரிச் சுரங்கங்களை கார்ப்பரேட் முதலாளிகளுக்குத் தந்திருக்கிறது மன்மோகன் சிங் அரசு. நிலக்கரியை இலவசமாகக் கொடுத்துவிட்டு, முதலாளிகள் சொல்லும் விலைக்கு அவர்களிடமிருந்து மின்சாரத்தை கொள்முதல் செய்கிறது. எண்ணெய்க் கிணறுகளை அம்பானி போன்ற தரகு முதலாளிகளுக்குத் தந்துவிட்டு, நம் பொதுச்சொத்தான எண்ணெயைச் சர்வதேசச் சந்தை விலையில் அம்பானியிடமிருந்து வாங்குகிறது. தமிழகத்தில் முதலீடு செய்



படிப்பகம்



**டாடா, அம்பானி, மிட்டல் போன்ற தரகு முதலாளிகளின் சொத்து என்ன வேகத்தில் உயர்கிறதோ, அதே வேகத்தில் ஏழைகளின் எண்ணிக்கையும் உயர்கிறது. எனினும், பன்னாட்டு கம்பெனிகளின் பொருட்களையும், ஆடம்பரங்களையும் நுகரும் வசதி கொண்ட மேல்தட்டுப் பிரிவினரைப் பற்றி மட்டுமே அரசு கவலைப்படுகிறது. இவர்களுக்கான மால்களும், புதுப்புது கார்களும், கேளிக்கை விடுதிகளும், நவீன நுகர்பொருட்களும் பெருகுவதைக் காட்டி, நாடு முன்னேறுகிறது என்று நம்மையும் நம்பச் சொல்கிறது.**

திருக்கும் ஜப்பானிய முதலாளிகளுக்கும், அதிகாரிகளுக்கும் சென்னையில் தனியாக ஒரு நகரத்தையே அமைத்துக் கொடுக்கிறார் ஜெயலலிதா. பன்னாட்டு நிறுவனங்களுக்கு மானியமாகவும் வரிச்சலுகையாகவும் பல ஆயிரம் கோடிகளை தி.மு.க. அரசும் வாரி வழங்கியிருக்கிறது.

எனினும், முதலாளிகளுக்கு வாரிக்கொடுத்து கஜானாவைக் காலி செய்துவிட்டார் என்று ஒருபோதும் ஜெயலலிதா கருணாநிதியை குற்றம் சாட்டியதில்லை. கஜானாவை நிரப்புவதற்காக கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கருணாநிதி வழங்கிய சலுகைகளை ரத்து செய்ததும் இல்லை. பன்னாட்டு நிறுவனங்களும் தரகு முதலாளிகளும் மக்களைக் கொள்ளையிடுவதற்கு வழிவகை செய்து கொடுக்கும் தரகனாகவும், கங்காணியாகவுமே ஜெ.அரசு செயல்படுகின்றது. முதலாளிகளுக்கு வாரிக் கொடுப்பதற்காகவும், தனியார்மய, தாராளமயக் கொள்கைகளை எதிர்த்துப் போராடும் மக்களை ஒடுக்க, போலீசு படைகளை நவீனமயமாக்குவதற்காகவும்தான் அரசு கஜானாவின் பணம் பயன்படுத்தப்படுகிறது.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்றழைக்கப்படுகின்ற மறுகாலனியாக்க கொள்கையை அமல்படுத்துவதில் ஓட்டுக்கட்சிகளிடையே எந்த வேறுபாடும் இல்லை. அது மட்டுமல்ல; இக்கட்சிகளின் உள்ளூர் தலைவர்களில் தொடங்கி, அமைச்சர்கள், உயர் அதிகார வர்க்கத்தினர் வரை அனைவரும் இந்த மறுகாலனியாக்கக் கொள்கையில் தொழில்ரீதியில் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்கள். காண்டிராக்டர்களாக, மணல் மாஃபியாக்களாக, ரியல் எஸ்டேட் புரோக்கர்களாக, தண்ணீர் வியாபாரிகளாக, பேருந்து-பால்பண்ணை முதலாளிகளாக இருக்கும் இவர்கள், கட்டண உயர்வு, விலை உயர்வு ஒவ்வொன்றிலும் ஆதாயம் அடைகிறார்கள். இன்றைக்கு ஆயிரம் கோடி, இலட்சம் கோடி எனத் தினந்தோறும் சந்தி சிரிக்கும் ஊழல்கள், தனியார்மயம் என்பதே பகற்கொள்ளைதான் என நிரூபித்திருப்பதுடன், தரகுமுதலாளிகளுடன் ஓட்டுப் பொறுக்கிகள் வைத்திருக்கும் தொழில்ரீதியான கூட்டையும் அம்பலமாக்கியிருக்கின்றன.

உழைக்கும் மக்களிடமிருந்து கசக்கிப் பிழிந்து எடுக்கப்படும் பணம் அரசாங்க கஜானாவை மட்டுமல்ல, முதலாளிகளின் பணப்பெட்டியையும் நிரப்புகிறது. டாடா, அம்பானி, மிட்டல் போன்ற கோடீசுவரர்களின் சொத்து என்ன வேகத்தில் உயர்கிறதோ, அதே வேகத்தில் ஏழைகளின் எண்ணிக்கையும் உயர்கிறது. எனினும், பன்னாட்டு கம்பெனிகளின் பொருட்களையும், ஆடம்பரங்களையும் நுகரும் வசதி கொண்ட மேல்தட்டுப் பிரிவினரைப் பற்றி மட்டுமே அரசு கவலைப்படுகிறது. இவர்களுக்கான மால்களும், புதுப்புது கார்களும், கேளிக்கை விடுதிகளும், நவீன நுகர்பொருட்களும் பெருகுவதைக் காட்டி, நாடு முன்னேறுகிறது என்று நம்மையும் நம்பச் சொல்கிறது.

நாமும் நம்புகிறோம். கட்டண உயர்வு, விலைவாசி உயர்வு ஆகிய அனைத்துக்கும் ஏதோ ஒரு நியாயம் இருப்பதாகவும் கற்பித்துக் கொள்கிறோம். நம்மை நாமே வருத்திக் கொள்வதன் மூலம் இந்தத் துன்பத்திலிருந்து மீள முயல்கிறோம். நூறில் ஒரு நபருக்கு அரிதாக அடிக்கும் 'அதிருஷ்டத்தை' பார்த்து, அப்படி ஒரு வாய்ப்பு நமக்கும் கிடைக்காதா என்று ஏங்குகிறோம். 99 சதவீத மக்களின் நிரந்தரமான 'துரதிருஷ்டத்துக்கான' காரணத்தைக் காண மறுக்கிறோம். தி.மு.க., அ.தி.மு.க. என்று மாற்றி மாற்றி ஓட்டுப் போடுவதன் மூலம் நமது கோபத்தைக் காட்டுகிறோம்

மக்களின் இந்த ஏமாளித்தனத்தைப் பயன்படுத்திக் கொண்டுதான், ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தார். இன்று தி.மு.க. அடுத்த வாய்ப்புக்காக ஆவலுடன் காத்திருக்கிறது. மற்ற ஓட்டுப் பொறுக்கிகளும் தேர்தல் எனும் பம்பர் குலுக்கலுக்காகக் காத்திருக்கிறார்கள். நம்மைக் கொள்ளையிடும் தனியார்மயம்-தாராளமயம்தான் எல்லா ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் கொள்கை. ஓட்டுப் பொறுக்கி அரசியல் மூலம் இந்தத் தனியார்



படிப்பகம்

www.padippakam.com

மயத்தை ஒழித்துவிடப் போவதாக யாரேனும் சொன்னால், அதைவிடப் பெரிய பித்தலாட்டம் இல்லை. அப்படிப் பேசிவந்த போலி கம்யூனிஸ்டுகளும், தனியார்மயத்துக்கு எதிராக சவடால் பேசும் எல்லா ஓட்டுப்பொறுக்கிகளும் அம்பலமாகி நிற்கிறார்கள்.

இந்த ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகளின் மூலம் மக்கள் தமது பிரச்சினைகள் எதற்கும் தீர்வு காண முடியாது என்ற உண்மைக்கு கூடங்குளம் மக்கள் போராட்டமும், முல்லைப்பெரியாறு உரிமைக்காகத் தமிழக மக்கள் நடத்திய போராட்டமும் சான்று பகர்கின்றன. வெற்றியோ தோல்வியோ ஓட்டுப் பொறுக்கிகளை நம்பக்கூடாது என்கின்ற மக்களின் பொதுக்கருத்தை இப்போராட்டங்கள் பிரதிபலிக்கின்றன.

சட்டத்தின் ஆட்சி, நீதிமன்றத்தின்மூலம் நீதியைப் பெறுவது என்ற முயற்சிகள் எல்லாம் தோற்றுப் பல்லிளித்துப் போய்விட்டன. காவிரி, முல்லைப் பெரியாறு தீர்ப்புகளை மீறிய கருநாடக, கேரள அரசுகளின் ஒரு முடியைக் கூட உச்ச நீதிமன்றத்தால் அசைக்க முடியவில்லை. தங்களைப் பணிநீக்கம் செய்தது செல்லாது என்று உயர்நீதி மன்றத்தில் வாதாடி வெற்றி பெற்ற மக்கள் நலப் பணியாளர்கள், இன்னும் தெருவில் தான் நிற்கிறார்கள். சென்னை உயர் நீதிமன்றத்தை ஜெயலலிதா மதிக்கவில்லை. எந்த மாநில அரசும் எங்கள் தீர்ப்புகளை மதிப்பதில்லை என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகளே கோமாளிகளைப் போலப் புலம்புகிறார்கள்.

பொய், பித்தலாட்டம், சட்டவிரோதம், கிரிமினல் வேலைகள் ஆகிய அனைத்தையும் சட்டம்- ஒழுங்கு என்ற பெயரால் அரங்கேற்றுகின்றது போலீசு. குற்றம் நிரூபிக்கப்படாமலேயே போலி மோதலில் சுட்டுக்கொன்றுவிட்டு, செத்தவர்கள் கொள்ளையர்கள் என்று சாதிக்கிறது. சட்டத்தின் ஆட்சியை மதிக்காத கேரள அரசை எதிர்த்துப் போராடினால், போராடும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துகிறார்கள் இந்த ‘சட்டத்தின் காவலர்கள்’. ‘அணு உலை வேண்டாம்‘ என்று உண்ணாவிரதம் இருக்கும் மக்கள் மீது ராஜத்துரோகம், சதி, அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தல் போன்ற ஆயுள்தண்டனைக் குற்றங்களைச் சுமத்திச் சிறையில் அடைக்கிறது போலீசு. அறவழி, அமைதி வழி என்பதெல்லாம் காரியத்துக்கு ஆகாதவை மட்டுமல்ல, அவை நம்மைக் காயடிக்க மட்டுமே பயன்படுபவை என்றே நம் அனுபவங்கள் காட்டுகின்றன.



**நம்மையும் நம் உரிமைகளையும் இந்த நாட்டையும் காப்பாற்ற வல்ல மாற்றுப் பாதை நக்சல்பாரி புரட்சிப் பாதை ஒன்றுதான். தொழிலாளி வர்க்கத்துக்கு மட்டுமல்ல, இந்த நாட்டின் மீது பற்று கொண்ட அனைவருக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குபவர்கள் நக்சல்பாரிகள் மட்டும்தான்.**

மாற்றுப் பாதை எது, மாற்றுப் போராட்ட முறை எது என்பதே நம் முன் உள்ள கேள்வி. கம்யூனிசத்துக்கு எதிராகக் கடைவிரிக்கப்பட்ட காந்தியம் உள்ளிட்ட எல்லா இசங்களும் பல்லிளித்துவிட்டன. தலித்தியம், பெரியாரியம் என்ற பேச்செல்லாம் ஓட்டுப் பொறுக்கிப் பிழைப்பதற்கும், ஒடுக்கப்பட்ட மக்களை விற்பதற்குமே என்பது அம்பலமாகிவிட்டது. சொல்லிக் கொள்ளப்படும் தேர்தல் ஜனநாயகம் கிழிந்து கந்தலாகித் தொங்குகிறது.

நம்மையும் நம் உரிமைகளையும் இந்த நாட்டையும் காப்பாற்ற வல்ல மாற்றுப் பாதை நக்சல்பாரி புரட்சிப் பாதை ஒன்றுதான். தொழிலாளி வர்க்கத்துக்கு மட்டுமல்ல, இந்த நாட்டின் மீது பற்று கொண்ட அனைவருக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குபவர்கள் நக்சல்பாரிகள் மட்டும்தான். ஜனநாயகம் என்ற பெயரில் முதலாளித்துவம் நடித்து வந்த நாடகம் அதன் கடைசி காட்சிக்கு வந்துவிட்டது. உலக முதலாளித்துவத்தின் தலைமையான அமெரிக்காவிலேயே ‘முதலாளித்துவம் ஒழிக’ என்ற மக்களின் போர்க்குரல் முன் எப்போதும் இல்லாத கோபத்துடன் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. பிரான்சு, பிரிட்டன், கிரீஸ், இத்தாலி, ஸ்பெயின் - என காட்டுத்தீயைப் போல ஐரோப்பா கண்டம் முழுவதும் பற்றிப் படர்கிறது மக்கள் போராட்டம்.

முதலாளி வர்க்கம் மூர்க்கத்தின் கொடுமுடியில் வீற்றிருந்த அதன் துவக்க காலத்தில், தங்கள் இன்னுயிர் தந்து உலகத் தொழிலாளி வர்க்கத்தின் உரிமையை நிலைநாட்டினார்கள் மேதினத் தியாகிகள். இன்று மரணப் படுக்கையில் கிடக்கும் முதலாளித்துவம், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தொழிலாளி வர்க்கத்தின் உதிரத்தை உறிஞ்சுகிறது. விலை உயர்வு, உரிமை பறிப்பு, சுரண்டல், அடக்குமுறை, பொதுச்சொத்துகள் அபகரிப்பு, ஆக்கிரமிப்புப் போர்கள் ஆகிய அனைத்தும் காட்டும் உண்மை இதுதான்.

அன்று உலகத் தொழிலாளி வர்க்கத்தின் உரிமைக்காக, நெஞ்சுரத்துடன் தூக்கு மேடையை மிதித்தனர் சிகாகோ தொழிலாளர்கள். இன்று மரணத்திலிருந்து மீளத் துடிக்கிறது முதலாளித்துவம் எனும் மிருகம். அதன் நெஞ்சின் மீது ஏறி அமர்ந்து, குரல்வளையை நெரித்து, அதனைச் சவக்குழிக்கு அனுப்புவோம்! ●



படிப்பகம்

www.padippakam.com

## சி.பி.எம். மாநாடு:

# வெங்காயம் என்பதா? வெண்டைக்காய் என்பதா?

**வழவழ கொழகொழ வியாக்கியானங்களை அளித்து, தனது சந்தர்ப்பவாதத்தையும் பிழைப்புவாதத்தையும் மூடிமறைத்துவிட முயல்கிறது, சி.பி.எம்.**

உழைக்கும் மக்களின் போராட்டங்களைத் தலைமையேற்று வழிநடத்துவதாகக் காட்டிக் கொள்ளும் சி.பி.எம். கட்சி, தமது சந்தர்ப்பவாதங்களுக்கு சித்தாந்த விளக்கங்கள் அளித்து, தம்மைத் தக்கவைத்துக் கொள்ள பித்தலாட்டம் செய்யும் இன்னுமொரு பிழைப்புவாதக் கட்சியாக புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது. கடந்த ஏப்ரல் 4 முதல் 9 வரை கேரளத்தின் கோழிக்கோட்டில் நடைபெற்ற சி.பி.எம். கட்சியின் 20-வது அனைத்திந்திய மாநாட்டுத் தீர்மானங்கள் இதை மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

''முந்தைய மாநாட்டில் காங்கிரசுக்கு வெளியிலிருந்து ஆதரவளித்தோம். இப்போதைய மாநாட்டில் காங்கிரசு மற்றும் பா.ஜ.க.வை வீழ்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். உழைக்கும் மக்களின் இடதுசாரி-ஜனநாயக முன்னணியைக் கட்டியமைப்பதே எங்களது முதன்மை நோக்கம். இடதுசாரி-ஜனநாயக பொது மேடையில் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் பல்வேறு உழைக்கும் மக்கள் பிரிவினரையும் அணிதிரட்டுவதன் மூலமும், நீடித்த போராட்டங்களின் மூலமும்தான் இத்தகைய மாற்று உருவாகும். இடதுசாரி-ஜனநாயக முன்னணியை உருவாக்கும் போக்கில், காங்கிரசு மற்றும் பா.ஜ.க. அல்லாத மதச்சார்பற்ற கட்சிகளுடன் பிரச்சினை அடிப்படையில் கூட்டணி அமையும். இது மூன்றாவது அணியாக மாறும் என்ற மாயை இல்லை. தனியார்மய-தாராளமயத்துக்கு எதிரான போராட்டங்கள் மூலமாகவே உண்மையான மாற்று உருவாகும்'' என்று இம்மாநாட்டுத் தீர்மானங்களை அக்கட்சியின் பொதுச் செயலாளரான பிரகாஷ் காரத் விளக்கியுள்ளார்.

''தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர், பழங்குடியினர், பெண்கள் ஆகியோரின் குறிப்பிட்ட பிரச்சினைகளைப் பொது ஜனநாயக மேடையாகக் கொண்டு போராட்டங்கள் நடத்துவோம். உள்ளூர் அளவிலும், மாநிலம் தழுவிய அளவிலும் உழைக்கும் மக்களின் வாழ்வுரிமைக்காகவும், தனியார்மய - தாராளமயத் தாக்குதலுக்கு எதிராகவும், வேலையின்மை - நிலப்பறிப்புக்கு எதிராகவும், வேலைப்பாதுகாப்பு, நியாயமான கூலி, மருத்துவ நலன், கல்வி, அடிப்படை வசதிகள் முதலானவற்றுக்காகவும் நீடித்த போராட்டங்களை ஒருங்கிணைத்து நடத்துவோம்'' என்கிறார் காரத். இப்படி கீழிருந்து பல்வேறு தரப்பு மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் வளரும், அப்போது நாங்கள் முன்னே நின்று ஒருங்கிணைப்போம் என்கிறார்.

இப்படித்தான், ''இன்னொரு உலகம் சாத்தியமே!'' என்று முழங்கிக் கொண்டு அமெரிக்காவின் சியாட்டில் நகரில் பல்வேறு தன்னார்வக் குழுக்கள் இணைந்து போராட்டத்தை நடத்தின. அதிலே இடதுசாரிகள், அராஜகவாதிகள், ஓரினச் சேர்க்கையாளர்கள், பெண்ணுரிமை, சுற்றுச்சூழலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் - எனப் பலதரப்பினரும் பங்கேற்று, அவரவர் நோக்கங்களுக்கு ஏற்ப முழக்கமிட்டு போராட்டத்தை நடத்தினர். ஏற்கெனவே ஏகாதிபத்திய கைக்கூலிகளான தன்னார்வக் குழுக்களுடன் ஒத்திசைந்து செயல்படுவதென கடந்த கோவை மாநாட்டில் தீர்மானித்து, மும்பையில் நடந்த உலக சமூக மன்ற (WSF) மாநாட்டில் தன்னார்வக் குழுக்களுடன் இணைந்து 'கூட்டுப் புரட்சி'யும் செய்த சி.பி.எம்.கட்சி, இத்தகைய திசையில் பெரிய தன்னார்வக் குழுவாக மாறிப் போராட்டங்களை ஒருங்கிணைக்கக் கிளம்பியுள்ளது. அடையாள அரசியலை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டே, தம்மைத் தக்கவைத்துக் கொள்ள அடையாள அரசியலுக்குள் சி.பி.எம். கட்சி தஞ்சமடைந்து கிடக்கிறது.


மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்ற பெயரில் பித்தலாட்டத்தைக் கடைவிரிக்கும் சி.பி.எம். கட்சியின் அனைத்திந்திய மாநாடு






படிப்பகம்

''தென்னமெரிக்க நாடுகளில் ஏகாதிபத்திய கட்டமைவை வீழ்த்தாத அதேசமயம், ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் போராட்டங்களின் மூலம் ஆட்சிக்கு வந்துள்ள முற்போக்கு ஆட்சியாளர்கள், சில மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துகின்றனர். அங்கு முதலாளித்துவத்துக்கு மாற்று கட்டியமைக்கப்படுகிறது. இது, அந்நாடுகளில் சமுதாய மாற்றத்துக்கு வழியேற்படுத்தும்'' என்கிறார் காரத். இத்தகைய சீர்திருத்த ஆட்சியாளர்களால் முன்வைக்கப்படும் ''21 ஆம் நூற்றாண்டுக்கான சோசலிசம்'' என்பதை முதலாளித்துவத்துக்கான மாற்று என்று சி.பி.எம். கட்சித்தலைவர்கள் பிரமையூட்டுகிறார்கள். அத்தகைய திசையில் இந்தியாவிலும் தனியார்மயம்-தாராளமயத்துக்கு எதிராகத் தன்னெழுச்சியாக மக்கள் போராட்டங்கள் வளரும் என்கிறார்கள். அதேசமயம், இத்தகைய சோசலிசத்தை அக்கட்சி ஏற்கிறதா, இல்லையா என்று கறாராகக் கூறாமல் நம்பூதிரித்தனத்துடன் நழுவுகிறார்கள்.



பொதுச் செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ள பிரகாஷ் காரத்.

தனியார்மய -தாராளமயத்துக்கு எதிரான மக்கள் போராட்டங்களும் அதிருப்தியும் பெருகுவதைத் தொடர்ந்து முதலாளிகளுக்குக் கறிவிருந்து படைத்துவிட்டு கொஞ்சம் எலும்புத்துண்டை நல்வாழ்வுத் திட்டங்களுக்கு ஒதுக்குவது என்ற ஆளும் வர்க்கங்களின் மனித முகம் கொண்ட தனியார்மயக் கொள்கையையே சுக்குமி, எகுதி, ப்பிலி என்று வேறு வார்த்தைகளில் சி.பி.எம். தலைவர்கள் விளக்குகிறார்கள். அக்கட்சி முன்வைக்கும் 'இடதுசாரி - ஜனநாயக மாற்று' என்பது ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்களை ஒருங்கிணைப்பது, மனித முகத்துடன் தனியார்மயம் - தாராளமயத்தைச் செயல்படுத்துவது என்பதுதான்.

மே.வங்கத்தில் 34 ஆண்டுகால 'இடதுசாரி கூட்டணி ஆட்சி' தேர்தலில் படுதோல்வியடையக் காரணம் என்ன என்று கேட்டால், ''மே.வங்கத்தில் தொழில் வளர்ச்சிக்காக விவசாயிகளிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்தியதில் சில அரசியல் மற்றும் நிர்வாக ரீதியான தவறுகள் நடந்துவிட்டன. அத்தோல்வியிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்'' என்கிறார், காரத். என்ன தவறு நடந்தது, என்ன படிப்பினையைக் கற்றுக் கொண்டார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

''மாநில அரசுகள் வரம்புக்குட்ட அதிகாரத்தையும் மூலாதாரத்தையும் கொண்டவையாக இருப்பதால், மாநில அரசு அதிகாரத்தின் மூலம் மாற்றுக் கொள்கைகளையோ, இடதுசாரி- ஜனநாயகத் திட்டத்தையோ செயல்படுத்த இயலாது. மைய அரசில் அதிகாரத்துக்கு வந்தால்தான் சாத்தியம்'' என்கிறார் காரத். இத்தகைய வரம்புக்குட்பட்ட அதிகாரத்தைக் கொண்டு தென்னமெரிக்க நாடுகளின் சீர்திருத்த ஆட்சியாளர்கள் செய்யும் மக்கள்நலத் திட்டங்களைக்கூட இடதுசாரி கூட்டணி அரசு செய்யவில்லை. ஆனால், மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் கட்டாய நிலப்பறிப்பும் மக்கள் மீது அடக்குமுறையையும் ஏவியதுதான் சிங்கூரிலும் நந்திகிராமத்திலும் நடந்தது.

இந்த உண்மைகளை மூடிமறைத்து தமது பித்தலாட்டத்தையும் துரோகத்தையும் நியாயப்படுத்தி சப்பைக் கட்டுபோடும் நோக்கத்துடன் மாநில அதிகாரம் பற்றி பசப்புகின்றனர். மாநில அரசின் அதிகாரம் வரம்புக்குட்பட்டதாக இருப்பதால், எதுவும் செய்ய முடியவில்லை என்று கூறும் இவர்கள், அப்புறம் மைய அரசில் ஆட்சிக்கு வந்தால், ஏகாதிபத்தி உலகமயமாக்கலின்கீழ் தனியொரு நாட்டில் இடதுசாரி திட்டங்களைச் செயல்படுத்த சாத்தியம் இல்லை என்றும் வாதிடலாம். இப்படியே தமது சந்தர்ப்பவாதங்களுக்கு ஏற்ப வியாக்கியானம் செய்வதுதான் சி.பி.எம். இன் அரசியல் சித்தாந்த பித்தலாட்டமாகிவிட்டது.

தாங்கள் சீனப் பாதையையோ, வேறு பாதையையோ பின்பற்றாமல் இந்தியப் பாதையைப் பின்பற்றுவதாகவும், இதுதான் மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்றும் ஏதோ மாபெரும் சித்தாந்தக் கண்டுபிடிப்பைச் செய்துவிட்டதைப் போல சி.பி.எம். தலைவர்கள் காட்டிக் கொள்கிறார்கள். தங்களது இந்தியப் புரட்சிக்கான புதிய பாதை என்ன என்பதைப் பற்றி எந்த விளக்கமும் தராமல், ஏதோ சர்வதேச அரசியல் போக்குகளை அலசி ஆராய்ந்து தங்கள் கொள்கைகளை வகுத்துக் கொண்டுள்ளதாகக் காட்டி ஏய்க்கிறார்கள்.

எல்லா ஓட்டுப்பொறுக்கி கட்சிகளைப் போலவே, கோஷ்டிச் சண்டைகள் புழுத்து நாறும் சி.பி.எம். கட்சியில், கோஷ்டிகளின் பலாபலத்துக்கேற்ப கேரள முன்னாள் முதல்வர் அச்சுதானந்தனுக்கு கல்தாவும், கொலைகார மே.வங்க முன்னாள் முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவுக்கு மீண்டும் பதவியும் அரசியல் தலைமைக் குழுவில் தரப்பட்டிருப்பதும், லாவ்லின் ஊழல் முதல் மே.வங்க ரேஷன் கடை ஊழல் வரை அம்பலப்பட்டு நிற்கும் கட்சியின் தலைவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமலிருப்பதும், இன்னுமொரு குட்டி முதலாளித்துவப் பிழைப்புவாதக் கட்சியாக சி.பி.எம். சீரழிந்து நிற்பதையே இம்மாநாடு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. தமது பிழைப்புவாத பித்தலாட்டக் கொள்கைகளுக்கு ஏற்ப, தமது கட்சிக்கு நல்லதொரு பெயரை இனி அவர்களே சூட்டிக் கொண்டால் நல்லது.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

## வறுமைக்கோடு வரையறை:

# ஏழைகளை ஒழித்துக்கட்ட ஓர் எளிய வழி!

**மைய அரசு நிர்ணயித்துள்ள வறுமைக்கோடு வரையறை, ஆட்சியாளர்களின் வக்கிர புத்தியைத்தான் காட்டுகிறது.**

கடந்த மார்ச் 19-ஆம் தேதியன்று மத்திய அரசின் திட்டக் கமிசன் புதிய வறுமைக்கோடு குறித்த மதிப்பீட்டை வெளியிட்டுள்ளது. உணவிற்கான உரிமை குறித்த வழக்கொன்றில் உச்சநீதிமன்றம், வறுமைக்கோட்டை வரையறுக்குமாறு மத்திய அரசைக் கேட்டிருந்தது. மாதமொன்றுக்கு நகர்ப்புறங்களில் ரூ. 4824/-க்கும், கிராமப்புறங்களில் ரூ.3905/-க்கும் குறைவான வருமானம் கொண்ட 5 பேர் அடங்கிய குடும்பங்களெல்லாம் வறுமைக்கோட்டுக்குள் வருவனவாகும் என்று இது தொடர்பாகத் திட்ட கமிசன் தாக்கல் செய்த உறுதியளிப்பு மனு குறிப்பிட்டுள்ளது. அதாவது, ஒரு மனிதன் நாளொன்றுக்கு நகரத்தில் ரூ.32/-க்கும், கிராமப்புறத்தில் ரூ.26/-க்கும் அதிகமாக சம்பாதித்தால், அவன் வறுமைக் கோட்டுக்கு மேலானவன் என்கிறது, திட்டக்கமிசன்.

''முந்தைய வெள்ளிக்கிழமை மதிய உணவைச் சாப்பிட்டுவிட்டு, பிறகு இரு நாட்கள் உணவில்லாமல், பற்றி எரியும் வயிறுடன் பள்ளிக்கு வரும் சோர்வடைந்த குழந்தைகளுக்கு எப்படி பாடம் நடத்துவது'' என்கிறார்கள் மும்பை மற்றும் தானாவின் புறநகர்ப் பகுதிகளின் பள்ளி ஆசிரியர்கள். திங்கட்கிழமை தரப்படும் மதிய உணவை இரு மடங்காக்கித் தரவேண்டும் என்கிறார்கள், அப்பகுதிகளின் தாய்மார்கள். இப்படி ஏழைகளும் பசித்த வயிறுகளும் நிறைந்த நாட்டில், நாளொன்றுக்கு ரூ.32/-க்கு மேல் சம்பாதிக்கும் ஒருவரை ஏழை அல்ல என்று திட்ட கமிசன் சொல்வது கொடூரமான வக்கிரம்.

திட்ட கமிசனின் துணைத் தலைவர் மாண்டேக்சிங் அலுவாலியா, ''2004 ஆம் ஆண்டில் மக்கள் தொகையில் 37.2 சதவீதம் பேர் வறுமையில் இருந்தார்கள். 2009-10 இல் இது 30 சதவீதமாகக் குறைந்துவிட்டது. முந்தைய காலத்தைவிட கடந்த ஐந்தாண்டு காலத்தில் 7.3 சதவீத அளவுக்கு இரட்டிப்பு வேகத்தில் வறுமை குறைந்து வருகிறது'' எனக்கூறியிருக்கிறார்.

மேட்டுக்குடி உலகில் வாழும் உலகவங்கியின் வளர்ப்புப் பிராணியான அலுவாலியாவுக்கு மக்களைப் பற்றியோ, வறுமையைப் பற்றியோ, பசியைப் பற்றியோ என்ன தெரியும்? அலுவாலியா போன்ற மேட்டுக்குடி வர்க்கத்தைப் பொறுத்தவரை மக்கள் என்பவர்கள் அவர்களது புளித்த ஏப்பக் கூட்டம்தான். சாமானியர்களை அவர்கள் மக்களாகவே என்றுமே மதிப்பதில்லை. புழு, பூச்சிகளைப் போலத்தான் பார்க்கிறார்கள். அத்தகைய திமிரும் வக்கிரமும் நிறைந்த கண்ணோட்டம்தான் அலுவாலியா கும்பலின் வறுமை பற்றிய மதிப்பீட்டிலும் வெளிப்படுகிறது.

இன்றைய விலைவாசியில் இந்த ரூ.32/-க்குள் ஒரு மனிதன் உயிர்வாழத்தான் முடியுமா? தனது குடும்பத்தைக் காப்பாற்றத்தான் முடியுமா? ஒருக்காலும் சாத்தியமே இல்லாத இந்த வரையறையைக் காட்டி வறுமை குறைந்துவிட்டது என்று புளுகுவதை ஏற்கத்தான் முடியுமா?

இதே காங்கிரசு கூட்டணி அரசின் தேசிய மாதிரிக் கணக்கீடு துறை ரூ.20/-க்கும் கீழாகத் தினசரி வருவாய் பெறுவோர் எண்ணிக்கை மட்டும் மொத்த மக்கள் தொகையில் 45 சதவீதமாகும் என்று புள்ளிவிவரப் பட்டியலிடுகிறது. அமைப்பு சாரா நிறுவனங்களுக்கான தேசிய கமிசனோ 77 % பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வதாகக் கூறுகிறது. என்.சி.சக்சேனா தலைமையில் அரசு






படிப்பகம்

www.padippakam.com

நியமித்த வறுமைக் கோட்டுக்கான நிபுணர் குழுவோ இதனை 50 சதவீதம் என்று சொல்கிறது. ஆனாலும், ''வறுமை பற்றிய மதிப்பீட்டில் வேறுபாடுகள் இருந்தபோதிலும், நாட்டில் ஏற்றத்தாழ்வுகள் பெருகியிருந்த போதிலும், வறுமை குறைந்து விட்டது'' என்று அடித்துச் சொல்கிறார் அலுவாலியா.

வறுமைக்கோடு குறித்த இந்த அளவுகோல் சரியானதா, ரூ.32/-க்குள் ஒருவர் வாழ இயலுமா என்று ஊடகங்கள் காரசாரமான விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன. இந்த அற்பத் தொகைக்குள் ஒரு இந்தியக் குடிமகன் வாழ முடியுமா என்பதல்ல, எதற்காக இந்தப் புதிய வரையறை என்பதுதான் மையமான கேள்வி.

ஏழைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டி நலத் திட்டங்களை ஒழிப்பதுதான், அரசின் திட்டமாக உள்ளது. குறிப்பாக, உணவு மானியத்தை படிப்படியாக ஒழித்துக் கட்டுவது, இறுதியில் ரேசன் முறையை தனியாருக்கும், உணவுக் கொள்முதலை பன்னாட்டு - உள்நாட்டு தரகு முதலாளிகளிடமும் ஒப்படைப்பது எனும் உலக வங்கி செயல்திட்டத்தின் ஒருபகுதிதான் இப்புதிய வறுமைக்கோடு வரையறை. மானியங்களை வெட்ட வேண்டுமானால் வறுமை குறைந்துள்ளதாகவும் வறியவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் புள்ளிவிவர ஆதாரம் காட்ட வேண்டியிருக்கிறது. அதற்கேற்ப புள்ளிவிவரப் புளுகுகளையும் தகிடுதத்தங்களையும் அலுவாலியா கும்பல் செய்து கொண்டிருக்கிறது.



**''முந்தைய வெள்ளிக்கிழமை மதிய உணவைச் சாப்பிட்டுவிட்டு, பிறகு இரு நாட்கள் உணவில்லாமல், பற்றி எரியும் வயிறுடன் பள்ளிக்கு வரும் சோர்வடைந்த குழந்தைகளுக்கு எப்படி பாடம் நடத்துவது'' என்கிறார்கள் மும்பை மற்றும் தானாவின் புறநகர்ப் பகுதிகளின் பள்ளி ஆசிரியர்கள். இப்படி ஏழைகளும் பசித்த வயிறுகளும் நிறைந்த நாட்டில், நாளொன்றுக்கு ரூ.32/-க்கு மேல் சம்பாதிக்கும் ஒருவரை ஏழை அல்ல என்று திட்ட கமிசன் சொல்வது கொடூரமான வக்கிரம்.**

உலகமயம், தனியார்மயம், தாராளமயம் கொண்டு வரப்பட்ட 1990-களிலிருந்தே ஆட்சியாளர்கள் இதனைத்தான் படிப்படியாக செயல்படுத்தி வருகின்றனர். 1993-94 -இல் மன்மோகன்சிங் நிதி அமைச்சராக இருந்தபோது, ஒரு மனிதன் உண்ணும் உணவின் கலோரி மதிப்பின்படி வறுமைக்கோட்டைக் கணக்கிடும் முறையைக் கொண்டு வந்து, 1987-88 இல் 25.5% ஆக இருந்த வறுமை 1993-94 இல் 19% ஆகக் குறைந்ததாகச் சொன்னார்கள். 2000-க்குப் பின் பல வண்ணங்களில் ரேசன் அட்டைகளைப் பிரித்து இதனைச் செயல்படுத்தினர். இந்த கலோரி கணக்கீடே அப்பட்டமான மோசடி வரையறையாகும். கணினிமயமான மேலை நாடுகளில் அலுவலகத்தில் இலகுவான வேலை செய்யத் தனிமனிதனுக்குத் தேவையான சக்தியின் மதிப்பை எடுத்துக்கொண்டு, அதனை அப்படியே இந்தியாவில் பொருத்தி, நகர்ப்புற ஏழைக்கு 2100 கிலோ கலோரி என்றும் கிராமப்புற ஏழைகளுக்கு 2400 கிலோ கலோரி என்றும் வரையறுத்து, வறுமையை 'வெளியேற்றி'னார்கள்.

பின்னர், கலோரி மதிப்பீட்டு முறை சரியில்லை என்று கூறி டெண்டுல்கர் கமிட்டியை நிறுவி, சுகாதாரம், கல்வி, உட்கொள்ளும் உணவின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் ஏழ்மையைக் கணக்கிடுவதாகக் கூறினர். முடிவாக நாளொன்றுக்கு ரூ. 32/- என வறுமையை வரையறுக்க, 30 ஆயிரம் குடும்பங்களில் சர்வே எடுக்கப்பட்டதாம். 300 கேள்விகள் கேட்கப்பட்டனவாம். வாட்டும் வறுமையை விட 300 கேள்விகளுக்குப் பதில் சொல்லியே ஏழைகள் களைத்திருப்பார்கள் எனப் பத்திரிகையாளர் சாய்நாத் இக்கேலிக்கூத்தை வேதனையுடன் குறிப்பிடுகிறார். கடுமையான எதிர்ப்புகள் வந்ததால், டெண்டுல்கர் குழுவின் அறிக்கையை ஒதுக்கிவிட்டு இப்போது புதிய அளவுகோலின்படி வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளோரைக் கணக்கிட புதிய ஆய்வுக் குழுவையும் ஏற்படுத்தியுள்ளனர்.

ஈராக் மீதான படையெடுப்பை முன்கூட்டியே முடிவு செய்த ஜார்ஜ் புஷ், அதற்கு முன் பேரழிவு ஆயுதங்களைத் தேடுவதாகச் சொன்னார். தூக்கிலேற்றுவது என்பதை முன்னரே முடிவு செய்துவிட்டுத்தான் சதாம் உசேன் மீதான விசாரணையைத் தொடங்கியது, அமெரிக்கா. அதேபோல மானியங்களைச் சுருக்கி ஏழைகளை ஒழிப்பது என்பதை முடிவு செய்துவிட்டு, அதற்கு முகாந்திரம் தேடிக் கொள்வதற்காகவே வக்கிரமான முறையில் வறுமைக்கோட்டை வரைகிறது, மன்மோகன் சிங் - மாண்டேக்சிங் அலுவாலியா கும்பல்.

● கதிர்



படிப்பகம்

www.padippakam.com

## தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையம்:

# இன்னுமொரு அரசு பயங்கரவாத அமைப்பு!

**தனியார்மய–தாராளமயத்துக்கு எதிராகப் போராடுபவர்களை, எவ்விதத் தடையுமின்றி ஒடுக்கும் அதிகாரத்தோடு இம்மையம் உருவாக்கப்பட்டுள்ளது.**

**தே**சிய பயங்கரவாதத் தடுப்பு மையம் என்ற புதிய அமைப்பை மார்ச் 1 முதல் அமலுக்குக் கொண்டு வரப் போவதாகவும் இவ்வமைப்பு மத்திய உளவுப் பிரிவின் கீழ் இயங்குமென்றும் கடந்த பிப்ரவரியில் மைய அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது. ‘‘தீவிரவாதம் தொடர்பான வழக்குகளில், சம்மந்தப்பட்ட மாநில அரசின் சம்மதம் இன்றியே இம்மையம் குற்றவாளிகளின் இருப்பிடங்களைச் சோதனையிட முடியும்; அவர்களின் சொத்துக்கள் மற்றும் அவர்கள் வசமுள்ள ஆவணங்களைக் கைப்பற்ற முடியும்; மேலும், அவர்களைக் கைது செய்யவும் முடியும்’’ என்றவாறு பல அதிகாரங்களைக் கொண்ட அமைப்பாக இம்மையத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது, மைய அரசு. சுருக்கமாகச் சொன்னால், இந்த மையம் ஒரே சமயத்தில் உளவுப் பிரிவாகவும் போலீசாகவும் இரட்டைக் கதாநாயகர்கள் போலச் செயல்படும். மேலும், மாநில போலீசார் தாங்கள் சேகரிக்கும் உளவுத் தகவல்களை இந்த மையத்தோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசியல் சாசனப்படி, குற்றவாளிகளைக் கைது செய்வது, அவர்கள் மீது வழக்குப் பதிவது, வழக்கை நடத்துவது ஆகியவை மாநில அரசின், போலீசின் அதிகாரமாகும். மாநில அரசின் சம்மதத்தோடு அல்லது நீதிமன்ற உத்தரவு இருந்தால் மட்டுமே, மையப் புலனாய்வுத் துறை எந்தவொரு வழக்கையும் விசாரிக்க முடியும். மாநில அரசின் கைகளில் மட்டுமே இருந்துவரும் இந்த அதிகாரத்தில் பங்கு போட்டுக் கொள்ளத் தற்பொழுது கிளம்பியுள்ளது, மைய அரசு. இதன் காரணமாகத்தான், இந்த அறிவிப்பு வெளிவந்தவுடனேயே, ‘‘இது மாநிலங்களின் அதிகாரத்தைப் பறிக்கும் நடவடிக்கை; சமஷ்டி அமைப்பு முறைக்கும், அரசியல் சாசனத்துக்கும் விரோதமானது’’ எனக் கூறி, இம்மையம் அமைக்கப்படுவதற்கு எதிராக பா.ஜ.க.வும், அதனின் கூட்டணிக் கட்சிகளும், அ.தி.மு.க.வும், போலி கம்யூனிஸ்டுகளும் எதிர்ப்பு தெரிவித்தனர். காங்கிரசு கூட்டணியில், கட்டுச் சோற்றுப் பெருச்சாளியாக இருந்து வரும் மம்தாவும் எதிர்ப்பு தெரிவித்தார். இதனையடுத்து, இம்மையம் அமைப்பது தொடர்பாக மே முதல் வாரத்தில் முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டப் போவதாக மைய அரசு அறிவித்திருக்கிறது.

மாநில அரசுகளின் அதிகாரத்தின் கீழ் இருந்துவந்த கல்வித்துறை போன்றவற்றை பொதுப்பட்டியலின் கீழ் கொண்டுவந்து, மாநில அரசுகளின் பல நியாயமான உரிமைகளை ஏற்கெனவே பறித்திருக்கிறது, மைய அரசு. அதனையெல்லாம் கொள்கைரீதியாகவே ஏற்றுக்கொண்டுள்ள பா.ஜ.க., ஜெயா கும்பல், மாநில உரிமையினைக் கருத்திற்கொண்டே போலீசுக்குரிய அதிகாரங்களோடு தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையம் அமைப்பதை எதிர்ப்பதாகக் கூறுவது, நகைப்புக்குரிய நாடகமாகும். மக்களின் சகல நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள ஆதார் அடையாளத் திட்டத்தை எதிர்க்காத இக்கும்பல், இப்பிரச்சினையில் மக்களின் உரிமைக்காக நிற்பதைப் போல பீற்றிக் கொள்வது வெற்று அரசியல் ஸ்டண்ட் தவிர வேறொன்றுமில்லை. அவர்கள் பீற்றிக் கொள்வது போல ஒவ்வொரு மாநில அரசும், போலீசும் அந்தந்த மாநில மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் கடமையினையா ஆற்றிவருகின்றன?




உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பாக மைய அரசு நடத்திய முதலமைச்சர்கள் மாநாட்டில் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் மன்மோகன் சிங், மற்றும் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்.



படிப்பகம்

www.padippakam.com

தீவிரவாதத்தை ஒழிப்பது, சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற பெயரில் ஒவ்வொரு மாநில போலீசும் எந்தளவிற்கு ஆளும் கட்சியின் அடியாளாகச் செயல்பட்டு வருகிறது என்பதும், ஆளும் கட்சியின் ஆசிர்வாதத்தோடு போலி மோதல் கொலைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகிறது என்பதும் ஊரறிந்த உண்மை. தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையத்தை போலீசுக்கு உரிய அதிகாரங்களோடு அமைப்பதன் மூலம் மாநில ஆளும் கட்சிகளுக்குப் போட்டியாக மைய அரசும் களத்தில் குதிக்கத் தயாராகி வருகிறது என்பதுதான் இதன் பின்னுள்ள உண்மை. தனது ஏரியாவில் ஒரு புதிய தாதா நுழைவதை பழைய தாதா விரும்புவதில்லைதானே. இம்மையத்திற்கு எதிராக பா.ஜ.க., ஜெயா, நவீன் பட்நாயக், மம்தா ஆகியோர் போடும் கூச்சல்களை, இந்த தாதாக்களின் அதிகாரப் போட்டியோடு மட்டும்தான் ஒப்பிட முடியும்.



லால்கார் பகுதியில் பழங்குடியின மக்களுக்கு எதிராக போலீசு நடத்திய அட்டூழியங்களை எதிர்த்துப் போராடிய 'குற்றத்திற்காக'ச் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட போலீசு அட்டூழியங்களுக்கு எதிரான மக்கள் கமிட்டியின் தலைவர் சத்ரதார் மஹதோ. (கோப்புப்படம்).

தீவிரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் காங்கிரசு கூட்டணி அரசு சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் என்ற கருப்புச் சட்டத்தை இயற்றியிருக்கிறது. மாநில அரசின் அனுமதிக்கெல்லாம் காத்திராமல், இந்தியா வெங்கிலும் விசாரணை நடத்தக்கூடிய தேசியப் புலனாய்வு ஏஜென்சியை உருவாக்கியிருக்கிறது. இந்த அதிகாரக் குவிப்பின் தொடர்ச்சியாகத்தான், உளவுப் பிரிவுக்கு போலீசுக்குரிய அதிகாரங்களைக் கொடுக்கும் அபாயகரமான தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த விசயத்தில் அரசு பாசிசமயமாவதும், மக்கள் அனைவரும் சந்தேகத்திற்குரிய குற்றவாளிகளைப் போலக் கண்காணிக்கப்படுவதும்தான் மையமான பிரச்சினை. ஆனால், எதிர்த்தரப்போ தமது அரசியல் ஸ்டண்ட் மூலம் இந்த மையமான பிரச்சினையிலிருந்து மக்களின் கவனத்தைச் சிதறடிக்க முயலுகிறார்கள். ஊடகங்களும் எதிர்த்தரப்பு அடிக்கும் ஸ்டண்டையே ஊதிப் பெருக்கி, உண்மையை மக்களின் கண்களிலிருந்து மறைத்துவிட முயலுகிறார்கள்.

• • •

தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையம் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச்சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டிருப்பதோடு, அச்சட்டத்தின்படியே இம்மையத்திற்கு வரம்பற்ற அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இச்சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் என்பது பொடாவின் மறு அவதாரமாகும். இந்திய மக்களின் கடும் எதிர்ப்பு மற்றும் போராட்டத்தின் காரணமாக பொடா சட்டத்தைக் கைகழுவிய காங்கிரசு கும்பல், ஏற்கெனவே அமலில் இருந்துவந்த சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் பல்வேறு திருத்தங்களைச் செய்து, காலாவதியாகிப் போன அக்கருப்புச் சட்டத்தைக் கொல்லைப்புற வழியில் கொண்டுவந்தது.

2008 நவம்பரில் மும்பய் நகர் மீது முசுலீம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலையடுத்து, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்திற்குப் பல்வேறு திருத்தங்களை முன்மொழிந்தது, காங்கிரசு கூட்டணி அரசு. இத்திருத்தங்களோடு இச்சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு முன்வைக்கப்பட்டபொழுது, வெறும் 50 உறுப்பினர்கள்தான் நாடாளுமன்ற மக்களவையில் இருந்தனர்; இத்திருத்தங்களின் அவசியம் குறித்து, பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் உரையாற்றத் தொடங்கியபொழுது உறுப்பினர்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்து, பின்னர் படிப்படியாக 47 எனக் குறைந்தது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட இலட்சணம் இதுதான். போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எதிர்த்தரப்பு இப்பொழுதுகூட இக்கருப்புச் சட்டத்திற்கு எதிராகக் குரல் கொடுக்காமல், இச்சட்டம் மக்களின் ஜனநாயக மற்றும் சிவில் உரிமைகளைக் காலில் போட்டு மிதிப்பதற்கு எதிராகக் குரல் கொடுக்காமல், மாநில அரசின், போலீசின் உரிமைகளில் தலையிடாதவாறு தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையத்தை உருவாக்க வேண்டும் என்றுதான் கோருகிறார்கள்.

ஆனால், மைய அரசோ, ''மைய உளவுத் துறை தரும் தகவல்களை, எதிர்க்கட்சிகளின் தலைமையில் உள்ள

**சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களைக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமலேயே 180 நாட்கள் வரை போலீசு காவலில் வைத்து விசாரிக்க முடியும்.**

**இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என நிரூபிக்க வேண்டிய அவசியம் அரசிற்குக் கிடையாது. 'தீவிரவாத' அமைப்புக்கு ஆதரவு கொடுத்தார் என்ற மொன்னையான குற்றச்சாட்டே போதுமானது.**

**இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் முன்பே அவரது சொத்துக்களை அரசால் பறிமுதல் செய்ய முடியும்.**



படிப்பகம்

www.padippakam.com

மாநில அரசுகள் தமது அரசியல் நோக்கங்களை முன்னிறுத்தி நடைமுறைப்படுத்தத் தயங்குவதால், தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தாம் எடுத்து வரும் முயற்சிகள் எதிர்பார்த்த பலன்களை அளிக்கவில்லை. அதனால்தான், போலீசின் அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்ட அமைப்பாகத் தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையத்தை அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதாக''க் கூறிவருகிறது.

மைய அரசின் கீழுள்ள உளவுத் துறையும் சி.பி.ஐ.-யும் மாநிலப் போலீசைவிடத் திறமைசாலிகளைப் போலவும், இலஞ்சம், ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகங்களில் ஈடுபடாத, அரசியல் குறுக்கீடு எதுவுமில்லாமல் பணியாற்றும் நேர்மையாளர்கள் போலவும் நகர்ப்புறத்து படித்த நடுத்தர வர்க்கம் எண்ணிக் கொண்டுள்ளது. ஆனால், மாநில போலீசைப் போலவே, மைய அரசின் உளவுத்துறையும் சி.பி.ஐ.-யும் அரசியல் எதிரிகளை வேவு பார்க்கவும் பழி வாங்கவும் பயன்படுத்தப்பட்டு வருவதற்கு ஏராளமான உதாரணங்கள் உள்ளன. 2008 நவம்பரில் மும்பய் நகர் மீது முசுலீம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை, மைய அரசின் உளவுத் துறையால் முன்கூட்டியே உளவறிந்து சொல்ல முடியவில்லை என்பதிலிருந்தே அதனின் திறமையைப் புரிந்துகொண்டுவிடலாம்.

காலனிய ஆட்சியின்பொழுது, சுதந்திரத்திற்காகப் போராடுபவர்களைப் பற்றி உளவறிவதற்காகப் பயன்படுத்தப்பட்ட உளவுத் துறை, அதன் அரசியல் எஜமானர்களுக்குத்தான் கட்டுப்பட்டதேயொழிய, நாடாளுமன்றத்தில்கூட அதனின் செயல்பாடுகள் பற்றி யாரும் கேள்வி எழுப்ப முடியாது. இப்படிபட்ட இரகசியமான அதிகார வர்க்க அமைப்பிற்கு போலீசுக்குரிய அதிகாரங்களை அளிப்பது அபாயகரமானதுதான் என்றாலும், இதனை மாநில அரசின் உரிமைகளைப் பறிப்பதாகச் சுருக்கிப் பார்க்க முடியாது. மன்மோகன் சிங்கும், ப.சிதம்பரமும் இடதுசாரி பயங்கரவாதம்தான் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது எனத் திரும்பத்திரும்பக் கூறிவரும் பின்னணியில்தான் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தையும், அதன் அடிப்படையில் உருவாக்கப்படும் தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையத்தையும் பார்க்க வேண்டும்.

• • •

**ச**ட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் தீவிரவாதம், பயங்கரவாதம் குறித்து தெளிவான வரையறைகள் முன்வைக்கப்படவில்லை. மாறாக, நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டைக் காப்பது என்ற பெயரில், யாரையும், எந்தவொரு அமைப்பையும் தீவிரவாதிகள் என முத்திரை குத்துமளவிற்குத் தொளதொளப்பாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வரையறையை வைத்துக் கொண்டு, அரசின் 'வளர்ச்சி'த் திட்டங்களை எதிர்ப்பவர்களைக்கூடத் தீவிரவாதிகளாக முத்திரை குத்தமுடியும். ஆயுத மோதல்கள், குண்டு வெடிப்புகள் போன்ற தீவிரவாதத் தாக்குதல்கள் நடந்திருக்கும் பகுதியில்தான் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்ற கட்டுப்பாடும் கிடையாது. இதன்பொருள், அரசை, சட்டபூர்வமான ஜனநாயக வழியில் எதிர்த்துப் போராடுபவர்களைக்கூட இச்சட்டத்தின் கீழ் கைது செய்யமுடியும் என்பதுதான்.

இப்படிக் கைது செய்யப்படுபவர்களை, அவர்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமலேயே 180 நாட்கள் வரையிலும் போலீசு காவலில் வைத்திருக்க முடியும். இது, கொட்டடிச் சித்திரவதைக்கும், அதன் மூலம் பொய்யான வாக்குமூலம் வாங்குவதற்கும் போலீசிற்கு அளிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ சுதந்திரமாகும்.

இச்சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்வதற்கு அவர் தீவிரவாத அமைப்பின் உறுப்பினராக இருந்தார்; தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற நிரூபிக்க வேண்டிய அவசியமெல்லாம் அரசிற்குக் கிடையாது. அவர் தீவிரவாத அமைப்போடு தொடர்பு வைத்திருந்தார், அதற்காக நிதி வசூல் செய்து கொடுத்தார் என்ற உப்புசப்பில்லாத காரணங்களை முன்வைத்தே கைது செய்ய முடியும்; இதே காரணங்களைக் கூறி, சட்டபூர்வமான முறையில் செயல்பட்டு வரும் சங்கங்கள், அமைப்புகளைக்கூட அரசால் தடை செய்ய முடியும். இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவர் மீதான குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படும் முன்பே, அவரது சொத்துக்களை அரசால் பறிமுதல் செய்ய முடியும்.

தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையம் அமைக்கப்படுவதை எதிர்ப்பதில் முன்னணியில் உள்ள குஜராத், ஒரிசா, பஞ்சாப், மேற்கு வங்க மாநில முதல்வர்கள்தான் இந்த அரசு பயங்கரவாதச் சட்டத்தை ஏவி, மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதிலும் முன்னணியில்

சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தைத் திரும்பப் பெறக் கோரி, ஊபா சட்ட எதிர்ப்பு கமிட்டியின் சார்பாக கொல்கத்தாவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)






படிப்பகம்

www.padippakam.com

உள்ளனர். அம்மாநிலங்களில் கடந்த நான் காண்டுகளாக அமல்படுத்தப்பட்டு வரும் இச்சட்டம் பிடித்துப் போட்டுள்ள 'தீவிர வாதிகள்' யார்யாரென்று பார்ப்போமா?

அரியானா மாநிலத்தில் மேல்சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிய தாழ்த்தப்பட்டோரும், பஞ்சாபில் அரசின் நாசகார விவசாயக் கொள்கைகளுக்கு எதி ராகப் போராடிய விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்களும் தீவிரவாதிகளாக முத்திரை குத்தப்பட்டு இச்சட்டத்தின் கீழ் கைது செய் யப்பட்டுள்ளனர். மாவோயிஸ்டுகளின் செயல்பாடுகளே இல்லாத குஜராத்தில் மாவோயிஸ்ட் ஆதரவாளர்கள் எனக் குற்றஞ்சுமத்திப் பலரைக் கைது செய்துள்ள மோடி அரசு, அவர்கள் இன்னென்ன குற்றங்களைச் செய்துள்ளனர் என்பதைக் கூட இதுநாள்வரை பதிவு செய்ய மறுத்து வருகிறது.


இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து தீவிரவாத எதிர்ப்பு தொடர்பாக கடந்த மார்ச் மாதம் இந்தியாவில் நடத்திய ''யுத் அப்யாஸ்'' என்ற இராணுவப் பயிற்சியில் கலந்து கொண்ட இரு நாடுகளைச் சேர்ந்த சிப்பாய்கள்.

மேற்கு வங்கத்தில் சி.பி.எம். குண்டர் களுக்கும், பயங்கரவாத போலீசுக்கும் துணை இராணு வப் படைகளுக்கும் எதிராகப் போராடிய போலீசு அடக்கு முறைகளுக்கு எதிரான சங்கம், வனவாசி சேத்னா ஆஷ்ரம், மதாங்கினி மஹிலா சமிதி உள்ளிட்ட பல சமூக அமைப்பு களும் மாவோயிஸ்ட் ஆதரவு அமைப்புகள் எனக் குற்றஞ் சுமத்தப்பட்டு, அவற்றின் உறுப்பினர்கள் பலர் இச்சட் டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். மார்க்சிஸ்டு களைத் தோற்கடித்து ஆட்சியைப் பிடித்த மம்தா, இந்த வழக்குகளில் ஒன்றைக்கூடத் திரும்பப் பெறவில்லை. ஒரிசா மாநிலத்தில் 2008 - ஆம் ஆண்டில் இந்தச் சட்டத் தின் கீழ் பதியப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை இரண்டாக இருந்தது. இந்த எண்ணிக்கை 2009 - இல் 18 ஆகவும், 2010 - இல் 94 ஆகவும் அதிகரித்திருக்கிறது.

கூடங்குளம் அணுஉலையை எதிர்த்து இடிந்தகரை பகுதி மக்கள் அமைதியான, சட்டபூர்வமான முறையில் நடத்தி வரும் போராட்டத்தில், நக்சலைட்டுகள் ஊடுருவி விட்டதாக ஜெயா அரசு பீதி கிளப்பியதையும், போராட்டக்காரர்கள் மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதையும், அவர்களுக்கு வெளிநாடு களில் இருந்து பணம் வருவதாக மைய அரசு அவதூறு செய்ததையும் இந்தப் பின்னணியிலிருந்துதான் பார்க்க வேண்டும். அரசுக்கு எதிராகப் போராடுபவர்கள் அனை வரையும் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற் படுத்துபவர்களாகவும் தீவிரவாதிகளாகவும் அரசு முத்திரை குத்துகிறது என்பதைத்தான் இந்த வழக்குகள் எடுத்துக் காட்டுகின்றன.

அமெரிக்காவில் நடந்த இரட்டை கோபுரத் தாக்கு தலுக்குப் பின், அந்நாட்டு அரசு ''பேட்ரியாட்டிக்'' சட்டம் என்றொரு கருப்புச் சட்டத்தை இயற்றியதோடு, தேசியப் பயங்கரவாதத் தடுப்பு மையத்தையும் உருவாக்கியது. மும்பய் தாக்குதலுக்குப் பின், இந்திய அரசு கொண்டு வந்துள்ள சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், தேசியப் புலனாய்வு ஏஜென்சி, தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையம் என்ற இவையனைத்தும் அமெரிக்காவை மாதிரியாகக் கொண்டுதான் உருவாக்கப்பட்டுள்ளன. இப்படி அமெரிக்காவை காப்பியடித்து அடக்குமுறை சட்டங்களையும் அமைப்புகளையும் கொண்டுவருவது ஒருபுறமிருக்க, உள்நாட்டுப் பாதுகாப்பு விசயத்திலும் அமெரிக்கா நேரடியாகத் தலையீடு செய்யும் வண்ணம் தாராளமாக நடந்துகொள்ளத் தொடங்கியிருக்கிறது, இந்திய அரசு. வாஜ்பாயி பிரதமராக இருந்தபொழுது, அமெரிக்காவின் எஃப்.பி.ஐ., இந்தியாவில் செயல்பட அனுமதித்தார். இந்த ஒத்துழைப்பு மன்மோகன் காலத்தில் இரு நாட்டு இராணுவங்களும் ஒன்றாக இணைந்து இந்தியாவிற்குள்ளேயே தீவிரவாத எதிர்ப்பு பயிற்சியை மேற்கொள்வது என்ற அளவில் வளர்ந்து வரு கிறது.

அடுத்த மூன்று நான்கு ஆண்டுகளில் இந்தியா தனது உள்நாட்டுப் பாதுகாப்பிற்காக 1,000 கோடி டாலர் பெறு மானமுள்ள ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களை வாங்கும் என்பதால், அதன் உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்து அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களும், இந்தியத் தரகு முதலாளிகளும் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு அலைகின்றனர். இந்த வர்த்தக நோக்கம் ஒருபுறமிருக்க, உள்நாட்டு பாதுகாப்பில் தனியார் நிறுவனங்களையும் அனுமதிக்க வேண்டும் என்றும் இவர்கள் கோரி வருகின்றனர். இது, ஒரிசாவிலும், சத்தீஸ்கரிலும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராகப் போராடும் மக்களைத் தாக்கிவரும் குண்டர் படைகளைச் சட்டபூர்வமாக்கும் கோரிக்கை தவிர வேறில்லை. இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் ஒன்றைப் புரிந்து கொள்ளலாம். இந்தியாவின் உள்நாட்டுப் பாது காப்பு என்பது இந்திய மக்களின் நலன் சார்ந்தது அல்ல என்பதுதான் அது.

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

## பதனி டோலா படுகொலை தீர்ப்பு:

# நீதிமன்றத்தின் நாட்டாமைத்தனம்!

**பீகாரில் நடப்பது ஆதிக்க சாதி நிலப்பிரபுக்களின் விசுவாச ஆட்சிதான் என்பதை இத்தீர்ப்பு நாடெங்கும் புரிய வைத்திருக்கிறது.**

''**தா**ழ்த்தப்பட்டோரின் உரிமைகளை நிலைநாட்டுவது, பாதுகாப்பது ஆகியவை குறித்து மாநில உள்துறை அமைச்சர்கள் மாநாடைக் கூட்டப் போவதாக'' மைய அரசு டாம்பீகமாக அறிவித்த இரண்டாவது நாளே, அதனின் முகத்தில் சாணியை அடித்தாற்போன்றதொரு தீர்ப்பை பீகார் மாநில உயர் நீதிமன்றம் அளித்திருக்கிறது. பீகாரிலுள்ள பதனி டோலா கிராமத்தில் 16 ஆண்டுகளுக்கு முன்பு தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் முசுலீம் மதத்தைச் சேர்ந்த 21 பேரை, ரன்வீர் சேனா என்ற ஆதிக்க சாதி நிலப்பிரபுக்களின் குண்டர் படை படுகொலை செய்த வழக்கில், கீழமை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட 23 குற்றவாளிகளையும் விடுதலை செய்து அளித்த தீர்ப்புதான் அது.

பதனி டோலாவில் நடந்த படுகொலை தமிழகத்தில் கீழ்வெண்மணியில் நடந்த படுகொலைக்கு இணையானது. அப்பகுதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள், தங்களுக்கு வழங்கப்படும் கூலியை முப்பது ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் எனக் கோரி, சி.பி.ஐ. (எம்.எல்.) - லிபரேஷன் என்ற கட்சியின் தலைமையில் அணிதிரண்டு போராடி வந்தனர். கூலி விவசாயிகள் சங்கமாக அணிதிரண்டு தமது ஆதிக்கத்தை எதிர்த்து நிற்பதையும் கூலி உயர்வு கேட்பதையும் பொறுத்துக்கொள்ள முடியாத ஆதிக்க சாதிகளான ராஜ்புத் மற்றும் பூமிகார் சாதிகளைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள், தாழ்த்தப்பட்ட கூலிவிவசாயிகளுக்குப் பாடம் கற்றுக் கொடுக்க நடத்திய படுகொலைதான் பதனி டோலா படுகொலை.

ரன்வீர் சேனா ஜூலை 21, 1996 அன்று நடத்திய அத்தாக்குதலின்பொழுது, நய்முதீன் என்பவரின் மூன்று மாதப் பெண் குழந்தை மேலே தூக்கியெறியப்பட்டு, கொடுவாளால் பந்தாடப்பட்டுக் கொல்லப்பட்டது. இப்பச்சிளங்குழந்தையின் மரணம் ஒன்றே அப்படுகொலை எந்தளவிற்கு காட்டுமிராண்டித்தனமான முறையில் நடத்தப்பட்டது என்பதை எடுத்துக்காட்டும். ஏறத்தாழ மூன்று மணி நேரம் நடத்தப்பட்ட அத்தாக்குதலில் இறந்துபோன 21 பேரில், 20 பேர் பெண்களும், சிறுவர்களும், குழந்தைகளும்தான்.

ஆதிக்க சாதி நிலப்பிரப்புக்களின் குண்டர் படையான ரன்வீர் சேனா நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்டோரின் நினைவாக பதனி டோலா கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சின்னம்.



இப்படுகொலை நாடெங்கும் அம்பலமாகி, பலத்த கண்டனங்களையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியதால், படுகொலை நடந்த மறுநாளே பாதிக்கப்பட்டோரிடமிருந்து வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டிய கட்டாயம், அப்பொழுது ஆட்சியிலிருந்த லல்லு அரசுக்கு ஏற்பட்டது. ஆனாலும், கீழமை நீதிமன்றத்தில் இவ்வழக்கின் தீர்ப்பு பதினான்கு ஆண்டுகள் கழித்துதான் வந்தது. இவ்வழக்கில் 63 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தாலும், கீழமை நீதிமன்றத்தில் வழக்கு நடந்துகொண்டிருந்தபொழுதே, நான்கு பேர் இறந்து போனார்கள்; ஐந்து பேர் பாட்னா உயர் நீதிமன்றத்தால் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்; ஒருவர் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். மீதிப் பேரில், 30 பேரை வழக்கிலிருந்து விடுதலை செய்த கீழமை நீதிமன்றம், 3 பேருக்குத் தூக்கு தண்டனையும், 20 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து மே, 2010 - இல் தீர்ப்பளித்தது. பாட்னா உயர் நீதிமன்றம் தற்பொழுது இத்தீர்ப்பை தள்ளுபடி செய்து, 23 குற்றவாளிகளையும் நிரபராதிகள் என அறிவித்து விடுதலை செய்துவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

பாட்னா உயர் நீதிமன்றத்தைச் சேர்ந்த நவ் நீதி பிரசாத் சிங், அஷ்வாணி குமார் சிங் என்ற இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு மன்றம் வழங்கிய இத்தீர்ப்பில் அதிகாரவர்க்கத்திற்கே யுரிய குதர்க்கப் புத்தியும், ஆதிக்க சாதி மனோ பாவமும் பின்னிப்பிணைந்து வெளிப்பட்டுள்ளது. இவ்வழக்கில் படுகொலையிலிருந்து தப்பிப் பிழைத்தோர்தான் முக்கிய சாட்சியங்கள். சாதி மற்றும் வர்க்கப் படிநிலையில் அடிமட்டத்தைச் சேர்ந்த அவர்களது சாட்சியங்களை நம்ப முடியாது என ஒதுக்கித் தள்ளியதோடு, அவர்களைப் பொய்யர்கள், கட்டுக்கதை சொல்பவர்கள், நம்பத்தகாதவர்கள் என ஆதிக்க சாதிக் கொழுப்பெடுத்து அவமதித்துள்ளனர், நீதிபதிகள்.



''ரன்வீர் சேனா நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் தப்பிப் பிழைத்த எங்களின் சாட்சியங்கள் நம்பத்தக்கவையல்ல என்றால், இந்தப் படுகொலையை வேறு யார் நடத்தியது என்ற கேள்விக்கு நீதிமன்றம் பதில் சொல்ல வேண்டும்'' எனக் குமுறும் கிஷன் சௌத்ரி (இடது) மற்றும் மார்வாரி சௌத்ரி.

''ரன்வீர் சேனா பதனி டோலாவில் வசிக்கும் அனைவரையும் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்ததாகக் கூறும் பொழுது, அவர்கள் தங்களை மட்டும் எப்படி உயிரோடு தப்பவிட்டிருப்பார்கள்? நீங்கள் புதர்களுக்கு அருகே மறைந்துகொண்டு சம்பவத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தபொழுதே, ரன்வீன் சேனா தங்களைத் தேடி வந்து கொன்று போட்டிருக்காதா?'' எனக் குதர்க்கமாகக் கேள்விகளை எழுப்பி, சம்பவத்தைப் பார்த்த நேரடி சாட்சியங்களைப் பொய் சாட்சியங்கள் என ஒதுக்கித் தள்ளியுள்ளனர், நீதிபதிகள்.

இந்த ஏழைகளின் சாட்சியங்களுக்கு உள்நோக்கம் கற்பித்து ஒதுக்கித் தள்ளிய நீதிபதிகள், ஆதிக்க சாதியைச் சேர்ந்த 23 குற்றவாளிகளையும் அப்பாவிகள் எனத் தமது தீர்ப்பில் குறிப்பிட்டு உருகியுள்ளனர். மேலும், இக்குற்றவாளிகளுள் மூன்று பேர் சம்பவம் நடந்தபொழுது சிறுவர்களாக இருந்தனர் என்றும், அவர்கள் தேவையில்லாமல் தண்டனை அனுபவித்துள்ளனர் என்றும் குறிப்பிட்டு, தீர்ப்பிலேயே வருத்தம் தெரிவித்துள்ளனர் நீதிபதிகள். மனுகூட இப்படிப்பட்ட தீர்ப்பை எழுதக் கூச்சப்பட்டிருப்பான். ஆதிக்க சாதி பாசத்தால் இத்தீர்ப்பு எழுதப்பட்டுள்ளது என்பது பச்சையாகத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகவே, போலீசு நடத்திய புலன் விசாரணையில் உள்ள ஓட்டைகளையும் பட்டியலிட்டு, குற்றவாளிகளை விடுதலை செய்துள்ளனர், நீதிபதிகள்.

பாட்னா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப் போவதாக நிதிஷ் குமார் அரசு அறிவித்த மறுநிமிடமே, அவரது அமைச்சரவையைச் சேர்ந்த கிரிராஜ் சிங், ''பதனி டோலாவை இதோடு கிள்ளி எறிந்துவிட வேண்டும்; இப்பிரச்சினையை மேலும் மேலும் விவாதத்திற்கு உள்ளாக்குவது, நிலைமையை மோசமடையச் செய்யும்'' என எச்சரித்தார். இந்த எச்சரிக்கையை நிதிஷ்குமாரின் நல்லாட்சியில் ஒட்டிக்கொண்டுள்ள ஆதிக்க சாதிவெறி பிடித்த ஏதோவொரு அமைச்சரின் குரலாக ஒதுக்கித் தள்ளிவிடமுடியாது.

ஆதிக்க சாதிவெறிக் கும்பலுக்குச் சாதகமான பாட்னா உயர் நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து பீகார் தலைநகர் பாட்னாவில் சி.பி.ஐ. (எம்-எல்) லிபரேசன் குழுவினர் நடத்திய ஆர்ப்பாட்டம்.




ரன்வீர் சேனாவிற்கும் ஓட்டுக்கட்சிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த அமிர் தாஸ் விசாரணை கமிசனை, நிதிஷ் குமார், தான் முதலமைச்சராகப் பதவியேற்றவுடனேயே கலைத்து உத்தரவிட்டார். இத்தீர்ப்பு வெளிவருவதற்கு ஏறத்தாழ ஒரு வருடம் முன்பாக, ரன்வீர் சேனாவின் தலைவனும் பதனி டோலா படுகொலையைத் தலைமை தாங்கி நடத்தியவனுமான பிரம்மேஷ்வர் சிங்கிற்குப் பிணை வழங்குவது தொடர்பான வழக்கில்,



படிப்பகம்

www.padippakam.com

பிணையை மறுத்து வாதாடாமல், அவனை மேளதாளத்தோடு வழியனுப்பிவைத்தது, நிதிஷ்குமார் அரசு.

அவரது அரசு பெயரளவிற்கான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளைக் கூட எடுக்க மறுத்து, ஆதிக்க சாதி நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாகவே நடந்து வருகிறது. ஆதிக்க சாதி நிலப்பிரபுக்களுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் இடையேயான நிலப்பிரச்சினையொன்றில், அமாவ்ஸி என்ற பகுதியில் நடந்த அடிதடி - கொலை வழக்கில் குற்றஞ்சுமத்தப்பட்ட 14 தாழ்த்தப்பட்டோரில் 10 பேருக்குத் தூக்கு தண்டனையும், 4 பேருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. பாட்னா உயர் நீதிமன்றம் பதனி டோலா வழக்கில் ஆதிக்க சாதி வெறியர்களுக்கு விடுதலை வழங்கிய அதேநேரத்தில் நிலத்திற்காகப் போராடிய தாழ்த்தப்பட்டோருக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பு சாதிவெறியின் அடிப்படையில் வழங்கப்படவில்லை, சட்டப்படியே அளிக்கப்பட்டுள்ளது எனக் காட்டிக் கொள்வதற்காகவே, அத்தாழ்த்தப்பட்டோர் அனைவரும் மாவோயிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனச் சாட்சியங்கள் சோடிக்கப்பட்டன.

இந்தப் பின்னணியிலிருந்து பார்த்தோமானால், பாட்னா உயர் நீதிமன்றத் தீர்ப்பு, ஆதிக்க சாதி மனோபாவம் கொண்ட ஏதோ இரண்டு நீதிபதிகளின் உள்ளக்கிடக்கையல்ல என்பதையும் நிதிஷ்குமாரின் நல்லாட்சி என்பது ஆதிக்க சாதிக் கும்பலின் விசுவாச ஆட்சி என்பதையும் புரிந்து கொள்ளலாம். அவரது ஆட்சியைப் புகழ்ந்து தள்ளிவரும் தேசியப் பத்திரிக்கைகளும், தொலைக்காட்சிகளும் கூட இத்தீர்ப்பு குறித்து அடக்கியே வாசிக்கின்றன. ஜெஸிகா லால் கொலை வழக்கில் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டதைக் கண்டித்து வானத்துக்கும் பூமிக்குமாக சாமியாடிய ஊடகங்களின் மனசாட்சி, இந்தப் பிரச்சினையில் ஊமையாக இருப்பதேன் என்ற கேள்வியை எழுப்பிப் பாருங்கள், அவைகளின் ஆதிக்க சாதிவெறிப் பாசமும் அம்பலப்பட்டுப் போகும்.

● குப்பன்

## ஐ.நா.தீர்மானத்துக்குப் பிந்தைய

# இலங்கை-இந்தியாவின் புதிய நாடகம்

**க**டந்த மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை சதித்தனமான திருத்தங்களுடன் இந்தியா ஆதரித்து இலங்கையைக் காப்பாற்றிய போதிலும், ராஜபக்சேவுக்கு தன்னிலை விளக்கமளித்து மன்மோகன்சிங் கடிதம் எழுதிய போதிலும், ராஜபக்சே கும்பல் இந்தியாவுக்குத் தனது கோபத்தையும் அதிருப்தியைக் காட்டியது. இலங்கை அமைச்சர்கள் சகட்டு மேனிக்கு இந்தியாவைத் தாக்கிப் பேசினர். பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதிச் சாடினர். சிங்கள வெறியர்கள் மட்டக்கிளப்பில் காந்தி, விவேகானந்தர் சிலைகளை உடைத்தனர். மேற்கத்திய ஏகாதிபத்தியங்களை எதிர்ப்பதாகக் காட்டுவதற்காக சாரணர் இயக்கத்தின் நிறுவனரும் ஆங்கிலேயருமான பேடன்ட் பவல் சிலையை உடைத்தனர். ஈழத்தமிழர் எதிர்ப்பைக் காட்டுவதற்காக விபுலானந்த அடிகளார், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை ஆகிய தமிழறிஞர்களின் சிலையை உடைத்தனர். ஆனாலும் இந்தியா பெயரளவுக்கு ஒரு கண்டனத்தை தெரிவித்து விட்டு, சிதைக்கப்பட்ட காந்தி சிலையைச் செப்பனிட உதவுவோம் என்று மான உணர்ச்சியே இல்லாமல் அறிவித்தது.

ஐ.நா. தீர்மானத்துக்குப் பிறகு, இந்தியாவுக்குத் தமது அதிருப்தியைக் காட்டும் நோக்கத்தோடு ''கூடங்குளம் அணுஉலையைத் திறக்கக் கூடாது, அதன் கதிர்வீச்சு இலங்கைக்குப் பாதிப்பை உண்

ஐ.நா. தீர்மானத்துக்குப் பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகச் சித்தரிக்கும் இந்திய நாடாளுமன்ற எம்.பி.க்கள் குழுவின் தலைவியான பா.ஜ.க.வின் சுஷ்மா சுவராஜுக்குப் பரிசளிக்கும் ராஜபக்சே.





படிப்பகம்

www.padippakam.com

டாக்கும்'' என்றார் இலங்கை அமைச்சர். ஈழத் தமிழர்களிடம் தனி ஈழத்துக்காக பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தி.மு.க.தலைவர் கருணாநிதியும், ஈழ ஆதரவாளர்களும் கருத்து தெரிவித்தவுடன், ''முதலில் உங்கள் நாட்டிலுள்ள காஷ்மீரில் கருத்துக் கணிப்பை நடத்திவிட்டு அப்புறம் ஈழத்தைப் பற்றி பேசுங்கள்'' என்கிறார் இன்னுமொரு சிங்கள அமைச்சர். ஆனாலும் இந்திய அரசு இவை பற்றி வாய்திறக்கவில்லை.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் நிலையை அறிய கடந்த 2009-ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்குச் சென்று வந்தது. இப்போது ராஜபக்சே கும்பல் இந்தியாவை ஆத்திரமூட்டி அலட்சியப்படுத்திய நிலையில், கடந்த ஏப்ரல் 16 முதல் ஆறுநாள் சுற்றுப்பயணமாக நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவியான சுஷ்மா சுவராஜ் தலைமையில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்குச் சென்று வந்திருக்கிறது. ஐ.நா. தீர்மானத்தின்படி இலங்கையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் காட்டுவதற்காகவும், பொருளாதார - வர்த்த ஒப்பந்தங்கள் குறித்துப் பேசவுமே இந்தக் குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாகக் காட்டுவதற்காக, ராஜபக்சே அரசு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவை அமைக்க ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேருமாறு வலியுறுத்துவதும் இந்திய நாடாளுமன்றக் குழுவின் நோக்கமாக இருந்தது.

மற்றபடி, ஈழத் தமிழின அழிப்புப் போரினால் தமது வாழ்வை இழந்து முகாம்களில் இன்னமும் வதைபடும் தமிழர்களைப் பார்க்கும் நோக்கமே இந்தக் குழுவுக்குக் கிடையாது. ஆனால் முகாம்களிலுள்ள தமிழர்களைச் சந்தித்து, போருக்குப் பிந்தைய மறுநிர்மாணப் பணிகளை இக்குழு பார்வையிட்டு ஏதோ ராஜபக்சே கும்பலின் மீது இந்தியா நடவடிக்கை எடுக்கப் போவதைப் போல தமிழக ஊடகங்கள் கதை பரப்பின.

ஈழத் தமிழின அழிப்புப் போர் நடந்து கொண்டிருந்தபோது அன்றைய இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் சிவசங்கர் மேனன், பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி முதலானோர் இலங்கைக்குச் சென்றபோதெல்லாம், ஏதோ போர் நிறுத்தத்துக்காகத்தான் செல்கிறார்கள் என்று தமிழக ஓட்டுக் கட்சிகளும் ஊடகங்களும் பிரமையூட்டியதைப் போலவே இப்போதும் நடந்துள்ளது.

ஈழத் தமிழர்களை அடைத்து வைத்துள்ள முகாம்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில முகாம்களை மட்டும் பார்வையிட அனுமதித்த ராஜபக்சே அரசு, இந்திய எம்.பி.க்கள் குழுவை குளுகுளு அறைகளில் உட்காரவைத்து, தடபுடல் விருந்து வைத்து வழியனுப்பி வைத்துள்ளது. இன்னமும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில், முள்வேலி முகாம்களில் 6,000 பேர்கள்தான் இருக்கிறார்கள், அவர்களும் வரும் ஜூன் மாதத்துக்குள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு விடுவார்கள் என்று இலங்கை அரசு கூறியதை அப்படியே இந்தியக் குழுவினர் கொழும்புவில் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளனர். 'எங்கள் நாட்டின் தேசியத் தந்தையாகிய காந்தி சிலையை ஏன் உடைத்தாய்' என்று கூட இந்தக் குழு கேட்கவில்லை.



மட்டக்கிளப்பில் சிங்கள வெறியர்களால் உடைக்கப்பட்ட காந்தி சிலை. உணர்சியற்றுக் கிடப்பது சிலை மட்டுமல்ல, இந்திய அரசும்தான்.

குழுவின் தலைவராக உள்ள சுஷ்மா சுவராஜ் ராஜபக்சேவைச் சந்தித்துப் பேசி வைரமாலையைப் பரிசாகப் பெற்று வந்துள்ளார். ''ஈழத்து எம்.ஜி.ஆர்.'' என்று ஈழத் துரோகி டக்ளசைப் பாராட்டியிருக்கிறார், காங்கிரசு எம்.பி.யான சுதர்சன நாச்சியப்பன். நிவாரணப் பணிகள் முன்னேற்றகரமாக உள்ளது, ஈழத் தமிழ் மக்கள் தனி ஈழத்தை விரும்பவில்லை, தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவத்தைத் திரும்பப்பெற ராஜபக்சே உறுதியளித்துள்ளார் என்று பேட்டியளிக்கிறார், போலி கம்யூனிஸ்டு எம்.பி.யான டி.கே. ரங்கராஜன். ஆனால் ராஜபக்சேவோ, எங்கள் நாட்டின் ராணுவத்தை எங்கள் நாட்டிலுள்ள பகுதிகளில் நிறுத்தாமல் வேறு எங்கு நிறுத்த முடியும் என்று மறுநாளே பேட்டியளிக்கிறார். தனி ஈழம் கேட்பவர்கள் பயங்கரவாதிகள் என்கிறார் கோத்தபய.

தமிழர் பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்றும், 13-வது சட்டத் திருத்தத்தைப் பற்றியும் தமிழர்களுக்கு கூடுதல் அதிகாரமும் அரசியல் உரிமைகளும் வழங்குவதைப் பற்றி வலியுறுத்தியதாகவும், இதற்கு ராஜபக்சே ஒப்புக்



படிப்பகம்

கொண்டுள்ளதாகவும் இங்கே சுஷ்மாசுவராஜ் பேட்டியளிக்கிறார். ஆனால், ‘‘இந்திய எம்.பி.க்கள் குழுவிடம் அதிகாரப் பரவல் குறித்து எந்த விவாதமும் நடக்கவில்லை. சுஷ்மா கூறுவது போல 13-வது சட்டத்திருத்தம் பற்றியோ, அதிகாரப்பரவல் குறித்தோ எந்த உத்திரவாதமும் தரப்படவில்லை’’ என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. இதேபோல, கடந்த ஜனவரியில் இலங்கை சென்ற இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்படும் என்று ராஜபக்சே உறுதியளித்துள்ளதாகத் தெரிவித்தார். ஆனால் அவர் இந்தியா திரும்பும் முன்னரே, அப்படியொரு உறுதியைத் தரவில்லை என்று ராஜபக்சே திடலடியாக மறுத்தார். மொத்தத்தில் இந்திய எம்.பி.க்கள் குழுவின் இலங்கைப் பயணம், தமிழர்களை ஏய்க்கும் இன்னுமொரு மோசடி நாடகம் என்பதும், ஈழத் தமிழ் மக்களை வதைத்துக் கொண்டிருக்கும் ராஜபக்சே கும்பலுக்கு ஜனநாயக சாயம் பூசும் நடவடிக்கைதான் என்பதும் மீண்டும் அம்பலப்பட்டுப் போயுள்ளது.



போர் முடிந்து மூன்றாண்டுகளாகியும் தீராத அவலம்: முள்வேலி முகாம்களில் வதைபடும் ஈழத்தமிழர்கள்.

இதுவொருபுறமிருக்க, ஆத்திரமூட்டி எகத்தாளம் செய்யும் ராஜபக்சே கும்பலிடம் இந்தியா ஏன் இப்படி அனுசரணையாக நடந்து கொள்ள வேண்டும் என்பதே மையமான கேள்வி. ஈழத் தமிழின அழிப்புப் போரை நாங்கள் மட்டும் தனித்து நடத்தவில்லை; இந்திய அரசின் வழிகாட்டுதலுடன் அதன் துணையுடன்தான் நடத்தினோம் என்று ராஜபக்சே கும்பல் உலக அரங்கில் அம்பலப்படுத்திவிடும் என்ற அச்சத்தால்தான், இலங்கை எட்டி உதைத்தாலும் இந்திய அரசு அனுசரித்துப் போவதாக ஒருபிரிவு தமிழினவாதிகள் காரணம் காட்டுகின்றனர்.

இதுதான் காரணமெனில், காஷ்மீரில் கருத்துக் கணிப்பை நடத்திவிட்டு அப்புறம் ஈழத்தைப் பற்றி பேசு என்று இலங்கை அமைச்சர் சாடுவதைக் கேட்டுக் கொண்டு மன்மோகன் -சோனியா கும்பல் மட்டுமின்றி, இந்துத்துவ பா.ஜ.க.வும் மவுனம் சாதிக்கிறதே அது, ஏன்? இலங்கையுடன் இந்தியா அனுசரித்துப் போவது மட்டுமல்ல. பாகிஸ்தானுக்கு எதிரான போர்களை நடத்தி, இந்திய தேசியத்தை பாக். எதிர்ப்பின் மீது கட்டிய இந்திய ஆட்சியாளர்கள், இப்போது பாகிஸ்தானுடன் பொருளாதார-வர்த்தக ஒப்பந்தங்களைப் போட்டுக் கொண்டுள்ளதோடு மின்சாரமும் கொடுக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள். ஏன் இப்படி பாகிஸ்தானுடன் இந்தியா இணக்கமாக நடந்து கொள்கிறது என்பதையும் பரிசீலிப்பது அவசியம்.

இந்தியத் தரகுப் பெருமுதலாளிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்திய அரசின் வர்க்கத் தன்மையிலிருந்துதான், அம்முதலாளிகளின் நலன்களிலிருந்துதான் இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை தீர்மானிக்கப்படுகிறது. இந்தியத் தரகு முதலாளிகளின் பொருளாதார நலன்களையும், தெற்காசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொண்டு இப்பிராந்தியத்தை அம்முதலாளிகளுக்காக வளைத்துப் போடுவதையும்தான் இந்திய அரசு தனது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்திய முதலாளிகளின் பல்லாயிரம் கோடி மூதலீடுகளையும் ஆதிக்கத்தையும் பாதுகாக்கவும் விரிவாக்கவும் இந்த அடிப்படைகளிலிருந்துதான், இலங்கை மற்றும் பாக்.குடன் இணக்கமாகவும், விட்டுக் கொடுத்தும் இந்தியா நடந்து கொள்கிறது. இந்த நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு ராஜபக்சே கும்பல் தனது இனவெறி பாசிசத்துக்கு நியாயம் தேடிக் கொள்கிறது. மக்களை இனவெறி தேசியவெறியில் ஆழ்த்தி உள்நாட்டுப் பிரச்சினைகளைத் திசைதிருப்பவும் முயற்சிக்கிறது.

இந்நிலையில், இந்தியாவின் மேலாதிக்க நோக்கங்களையும், தரகுப் பெருமுதலாளிகளின் நலன்களுக்காகவே நேற்று ஈழத் தமிழினஅழிப்புப் போரை வழிநடத்தியதையும், இன்று இலங்கை காறி உமிழ்ந்தாலும் வளைந்து கொடுத்துப் போவதையும் அம்பலப்படுத்தி, இந்திய அரசை எதிர்த்துப் போராடி முடமாக்குவதுதான் முக்கிய கடமையாகும். அதை விடுத்து, சுண்டைக்காய் நாடு நம்மை அலட்சியப்படுத்துவதாகவும், தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் இக்குழுவில் சேர்க்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் ஊடகங்களும் இனவாதிகளும் சூடேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

**● தனபால்**

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி


அருட்திரு சுசீலன்


சுப. உதயகுமார்


வழக்குரைஞர் சிவசுப்பிரமணியன்

''பொய்வழக்கு, வாய்தா, சிறை எதற்கும் அஞ்ச வேண்டாம். ஒரு முறை சிறைக்குப் போய் வந்து விட்டால் அச்சம் போய் விடும். 144 தடை போட்டபோதும் நாங்கள் வந்தோம், வருவோம், உங்களுக்குத் துணை நிற்போம். போராடுங்கள்'' என்றார் தோழர் வாஞ்சிநாதன்.

''தோற்று விட்டதாகக் கூறுகிறார்கள். இன்னும் ஆட்டமே முடியவில்லையே. இது அணு உலைக்கு எதிரான ஒரு உள்ளூர் போராட்டம் அல்ல. தனியார்மயத்துக்கு எதிரான போராட்டம். இந்தப் போராட்டம் தொடரும். ஏனென்றால், அவர்களிடம் நீதி இல்லை. மோட்டார் வாகன விபத்துக்குக்கூட குடும்பத்தின் நிலைக்கு ஏற்ப நட்டஈடு உண்டு. அணு விபத்துக்கு கிடையாதாம். ஆனால், அணு உலை பாதுகாப்பானதாம். எப்படி இருக்கிறது இந்த நியாயம்?'' என்று கேள்வி எழுப்பினார் தோழர் ராஜு.

''எமக்காக வழக்கு மட்டும் நடத்தவில்ல. அணு உலைக்கு எதிராக இயக்கமும் நடத்துகிறீர்கள்; கைது செய்யப்பட்ட மக்களைச் சிறை வாசலில் நள்ளிரவு நேரத்தில் பெண்கள் குழந்தைகளுடன் வந்து பார்த்ததை இணையம் மூலம் தெரிந்து நெகிழ்ந்தோம்'' என நன்றி கூறினார் புஷ்பராயன்.

இரவு சுமார் 8 மணி அளவில் கூட்டப்புளியில் தொடங்கியது பொதுக்கூட்டம். அந்த ஊரின் பங்குத்தந்தையும், போராட்டத்தில் மக்களுடன் நின்று, தேசத்துரோக வழக்கில் மக்களுடன் கைது செய்யப்பட்டு சிறை சென்றவருமான அருட்திரு சுசீலன் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

அடக்குமுறை தொடங்கியவுடன் கூடங்குளத்தில் கைது செய்யப்பட்டு, தேசத்துரோக வழக்கில் சிறை வைக்கப்பட்ட வழக்குரைஞர் சிவசுப்பிரமணியன், தாங்கள் கைது செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டவுடன் போராட்டத்தில் குதித்த கூட்டப்புளி மக்களுக்கு நெகிழ்ச்சியுடன் நன்றி கூறி, அணு உலையை மூடுவதற்காக எத்தனை முறை வேண்டுமானாலும் சிறை செல்வதற்கு தயாராக இருப்பதாகவும் அறிவித்தார்.

வழக்குரைஞர் மில்டன், (ம.உ.பா.மையம், சென்னை) அரசு போடும் தேசத்துரோக வழக்குகள் எதுவும் நிற்கக்கூடியவை அல்ல என்றும், அச்சுறுத்தும் நோக்கத்துக்காகவே போடப்படும் பொய்வழக்குகளே அவை என்றும் அம்பலப்படுத்தினார். ''தமிழ்நாட்டு பூமி என்ன குப்பைத்தொட்டியா, அத ரசியாக் காரனுக்கு வித்துப்புட்டியா'' என்று முன்னர் பிரச்சாரம் செய்ததை நினைவு கூர்ந்த வழக்குரைஞர் சுரேஷ், அதன் பயனை இப்போது காண்பதாகக் கூறினார்.

வழமையான போராட்டமுறைகளை மாற்ற வேண்டும் என்று கூறிய வழக்குரைஞர் பாலன், கோலாரில் நகராட்சி கழிவறையை சுத்தம் செய்யாத நிர்வாகத்தை எதிர்த்து, கமிசனரின் கார் மீதும், போலீசு மீதும் மலத்தைக் கரைத்து ஊற்றி போராடியதை விளக்கியபோது, மக்கள் உற்சாகத்தில் ஆரவாரித்தனர்.

இறுதியாகப் பேசிய தோழர் ராஜு, ''நச்சுப்பாம்பை பார்த்தால் அடிக்கிறோம். முடியுமா முடியாதா என்று விவாதித்து முடிவெடுப்பதில்லை. அப்படித்தான் அணு உலை விவகாரமும். கடலூரில் கெமிக்கல் நிறுவனங்கள் கழிவைக் கடலில் விடுவதால் மீன்பிடி தொழிலே அழிந்து விட்டது. இளநீரின் நிறம் மஞ்சளாகிவிட்டது. எல்லாம் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதலுடன் சட்டப்படிதான் நடக்கின்றது. விட்டால் இதே கதி கூட்டப்புளிக்கும் ஏற்படும். முதலில் சிலருக்கு புற்றுநோய் வரும்போது அதிர்ச்சியாக இருக்கும். போகப்போக பழகி, அது நம் சொந்தப் பிரச்சினையாகிவிடும். அந்த நிலை வர அனுமதிக்க கூடாது.

நம்முடைய போராட்டத்தை ஒடுக்க 8 மாவட்ட போலீசு குவிக்கப்படுகிறது. 8 மாவட்ட மக்கள் நமக்கு ஆதரவாகப் போராடியிருந்தால் போலீசைக் குவிக்க முடியுமா? போலீசு நம்மை சிதறடிப்பது போல, நாம் போலீசின் சக்தியைச் சிதறடிக்க வேண்டுமானால், பிற பகுதி மக்களுடன் நாம் திரண்டு போராட வேண்டும்'' என்று அறைகூவல் விடுத்தார். உள்ளூர் ஆசிரியர் பெல்லார்மின் நன்றி கூறினார். வழக்குரைஞர்கள் மற்றும் தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவளித்தனர் கூட்டப்புளி மக்கள்.


கூட்டப்புளியில்...

கைது, சிறை போன்ற அரசின் அடக்குமுறைகள் காரணமாக, அரசு - போலீசு - நீதிமன்றம் குறித்து மக்கள் கொண்டிருந்த மாயைகள் அகலத் தொடங்கியிருக்கின்றன. அணு உலை அகற்றப்படும் முன் இந்த மாயைகள் முற்றிலுமாக அகன்றுவிடும்.

- பு.ஜ.செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com



## கொட்டடிக் கொலைகள்:

# கேட்பாரற்ற போலீசு ராஜ்ஜியம்!

கடந்த 2009-10 ஆம் ஆண்டில் நாடெங்கும் 1,324 கொட்டடிக் (லாக்-அப்) கொலைகள் நடந்துள்ளன என்றும், இந்த எண்ணிக்கை அதற்கடுத்த ஆண்டில் (2010-11) 1,574 என அதிகரித்துவிட்டதாகவும் தேசிய மனித உரிமை ஆணையம் அறிவித்திருக்கிறது. 2010-11 ஆம் ஆண்டு நடந்துள்ள கொட்டடிக் கொலைகளுள் 37 சதவீதம் (597 கொலைகள்) உ.பி., பீகார், மகாராஷ்டிரம் ஆகிய மூன்று மாநிலங்களில் நடந்துள்ளன. இம்மூன்று மாநிலங்களிலும் 'தலித்' சகோதரி மாயாவதியின் ஆட்சி நடந்த உ.பி.யில்தான் அதிகபட்ச கொட்டடிக் கொலைகள் (331) நடந்துள்ளன.

இந்த முதல் மூன்று இடத்தில் தமிழகம் வரவில்லையென்று யாரும் ஆறுதல் கொள்ளத் தேவையில்லை. கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் 47 கொட்டடிக் கொலைகள் நடந்திருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அம்மாவின் ஆட்சியிலோ, வெளியே தெரியும் புள்ளிவிவரங்களின்படி மாதம் இரண்டு கொட்டடிக் கொலைகள் என்ற வீதத்தில் தமிழகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. வழக்குரைஞர் சதீஷ் கொலை போல, போலீசாரால் மர்மமான முறையில் கொல்லப்பட்டு வீசியெறியப்படும் பிணங்களின் கணக்குகள் இந்தக் கொட்டடிக் கொலைப் பட்டியலில் சேராது.

ஒவ்வொரு ஆண்டும் கொட்டடிக் கொலைகள் பெருகிக் கொண்டே போகும் சமயத்தில், அவற்றின் மீதான விசாரணையோ ஆமை வேகத்தில்கூட நகர்வதில்லை. 2010-11 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ள 1,574 கொட்டடிக் கொலைகளுள் வெறும் 88 வழக்குகளில்தான் தேசிய மனித உரிமை ஆணையம் விசாரணை நடத்தியிருக்கிறது. கடந்த தி.மு.க. ஆட்சியின்பொழுது நடந்த 47 கொட்டடிக் கொலைகள் தொடர்பாக ஒரு போலீசுக்காரன் மீதுகூட இதுவரை வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. கொட்டடிக் கொலைகள் அம்பலமாகி மக்கள் போராட்டத்தில் குதிக்கும்பொழுது, சம்பந்தப்பட்ட போலீசு நிலையத்தைச் சேர்ந்த ஒன்றிரண்டு போலீசார் பணியிடை நீக்கம் செய்யப்படுவதைத் தாண்டி, வேறெந்த தண்டனையும் வழங்கப்படுவதில்லை. இதையும் மீறி ஒன்றிரண்டு கொட்டடிக் கொலைகள் நீதிமன்ற விசாரணையை எட்டினாலும், சம்பந்தப்பட்ட போலீசார் மீது கொலை வழக்கு தொடரப்படுவதில்லை. குறிப்பாக, தமிழ்நாட்டையே உலுக்கிய அண்ணாமலை நகர் கொட்டடிக் கொலை வழக்கில், பத்மினியின் கணவர் தற்கொலை செய்து கொண்டதாகத்தான் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. பத்மினியைப் பாலியல் பலாத்காரம் செய்த குற்றத்திற்காக மட்டுமே போலீசார் தண்டிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் கொட்டடிக் கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போவது, கேள்விக்கிடமற்ற போலீசு ஆட்சி நாடெங்கும் நடந்துவருவதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. போலீசு நடத்தும் கொட்டடிக் கொலைகளை அந்தந்த மாநில அரசுகள் மூடி மறைக்க முயலுகின்றன என்றால், மனித உரிமை ஆணையங்களும் நீதிமன்றங்களும் போலீசின் இந்தப் பயங்கரவாதப் படுகொலைகளை வேடிக்கை பார்க்கும் சோளக்காட்டுப் பொம்மைகள் போலவே நடந்து கொள்கின்றன. மேலும், தீவிரவாதத்தை ஒழிப்பது, சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற பெயரில் போலீசின் இந்த அத்துமீறல்களையும் பயங்கரவாதக் குற்றங்களையும் சட்டபூர்வமாக்கி, போலீசைப் பாதுகாக்கும் வேலையில் அரசு இறங்கியிருக்கும் தருணத்தில், போலீசுக்கு மனித உரிமைகள் பற்றிய போதனை அளித்து அவர்களைத் திருத்த வேண்டும் என்பது கேலிக்கூத்தான வாதமாகும். இதற்கு மாறாக, இந்தச் சட்டபூர்வ அரசு பயங்கரவாத போலீசு அமைப்பைக் கலைக்கக் கோரிப் பொதுமக்களும் மனித உரிமை ஆர்வலர்களும் போராட முன்வர வேண்டும். ●



படிப்பகம்